# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 9] பராபவ, புரட்டாசி-அக்டோபர் [மணி 1


# சிலப்பதிகாரம் காட்டும் தெய்வச் செந்நெறி

**முன்னுரை :**

செந்தமிழ் மொழியிலுள்ள சிறந்த காப்பியங்களுள், சிலப்பதிகாரம் என்பது ஒப்புயர்வற்றதொன்று என்பதனை அனைவரும் அறிவர். சிலப்பதிகாரத்தின் இலக்கியச் சிறப்பும், கலை நலமும், பழமையும் பெருமையும் அறிஞர்களாற் பெரிதும் பாராட்டப்படுவன வாகும். * சிலப்பதிகாரத்திற்குப் பலதிறப் பெரும் சிறப்புக்கள் உண்டு. எத்தனையோ பல நிலைகளில், சிலப்பதிகாரத்தினை நாம் ஆராய்ந்து சுவைத்து இன்புறலாம்.

சிலப்பதிகாரம் என்பது ஒரு பெரும் தமிழ்க்கோயில், கலைக்கோயில். வெறும் கோவலன் கண்ணகி கதையை மட்டுமே பொருளாகக் கொண்டதன்று அந்நூல்! அதன் கண், கோவலன் கண்ணகி என்ற இருவரின் கதையை அடிப்படையாகவும், தலைக் கீடாகவும் கொண்டு பல அரிய கலைச் செய்திகளையும், வாழ்வியல் உண்மைக் கருத்துக்களையும், உலகுக்கு அறிவுறுத்துகின்றார் இளங்கோவடிகள்.

*The Tamils have developed on lines of their own, and they constitute in my opinion, in some respect atleast, the finest flower of the Dravidian genius. For instance, there is nothing in Telegu to approach, anywhere near the grandeur of thought and sublimity of feeling in 'Silapathikaram' and 'Manimekalai'. The Saiva Siddhantha Philosophy is one of the most striking contributions to the vast mosaic of Hindu culture..."

—Dr. C. R. Reddy.

**தெய்வ மணம்:**

கோவலன் கண்ணகி என்னும் இருவரின் வரலாற்றுக்கு இடை இடையே, இளங்கோவடிகள் தெய்விகக் கருத்துக்கள் பலவற்றை, ஏற்றபெற்றி பொருத்தமுற இயைத்துள்ளார். அவற்றாலேயே சிலப்பதிகாரக் காப்பியம், ஒரு பெரும் தனிச் சிறப்பும் புனிதத் தன்மையும் பெற்று இணையற்று விளங்குகின்றது. இடை இடையே பலப்பல சமய உண்மைகளும், தெய்வங்களைப் பற்றிய இனிய செய்திகளும் பிறவும் கலந்து வரப்பெறுவதனால்தான், சிலப்பதிகாரம் இத்துணைச் சிறப்பைப் பெறுவதாயிற்று. எளிய ஓர் இரும்புத் துண்டை, எல்லாம் வல்ல சித்தர் ஒருவர், தன்னுடைய சித்துத் திறனால் விலையுயர்ந்த பொன்னாக மாற்றும் திறன் போல, கோவலன் கண்ணகி என்னும் இருவரின் தனி வாழ்க்கையைக் கலை நலமும் தெய்வ நலமும் கலந்து இயைந்த ஒரு பெரும் காப்பியமாக இயற்றியருளினார் இளங்கோ. செய்வோன் சிறப்பால் செய் பொருள் சிறப்படைகின்றது. அம்முறையில் இளங்கோவடிகளின் கவித்திறனும் தவத்திறனும் ஒருங்கே இயைந்து, சிலப்பதிகாரத்தினைத் தெய்வ நலம் சான்ற ஒரு செந்தமிழ்க் காப்பியமாக விளங்கச் செய்துள்ளன. தொடக்கம் முதல் முடிவு வரை சிலப்பதிகாரத்தில் தெய்வ மணமும் செந்தமிழ் மணமும் செறிந்து இனிது வீசுகின்றன.

(3) பிராட்டி இலங்கை நகரில் சிறை யிருந்தாள். ஆழ்வாரோ இவ்வுலகியல் வாழ்வாகிய சிறையில் இருந்தார். பிராட்டி சிறையிருந்தமை தேவ மாதர்களின் விடுதலைக்கு வித்தாயிற்று. அதுபோல ஆழ்வாரின் உலகியற் சிறை வாழ்வு, உலக மக்களின் வீடு பேற்று நலத்திற்குக் காரணமாக அமைந்தது. "அறுவர்தம் பிறவி அஞ்சிறையே" என்றதனால், ஆழ்வார் உலகியல் வாழ்வைச் சிறையாகக் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

(4) பிராட்டி சிறையிருந்த காலத்தில், கொடியனாய் மாறுபட்டு நின்ற இராவணனுக்கும் அறிவுரை கூறினாள். அவ்வாறே ஆழ்வாரும், கொடியராய் மாறுபட்டு நிற்கும் உலக மக்களை நோக்கி, நல் உபதேசங்கள் பலவும் நவின்றருளினார். "சொன்னால் விரோதம் இது ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ" என்பது முதலான பாசுரங்கள் இவ்வுண்மைக்குச் சான்றாகும்.

(5) பிராட்டி பெருமாளைப் பிரிந்து, அரக்கியரின் நடுவே இருக்க நேர்ந்த தம்முடைய உயிர் முதலியவற்றால், பயன் இல்லை என்று வெறுத்தாள். அங்ஙனமே ஆழ்வாரும் பெருமாளுக்கு உறுப்பல்லாத தம்மையும் தம் உடைமையையும் வெறுத்து இகழ்ந்தார். "ஏறாளும் இறையோனும்" எனத் தொடங்கும் பாசுரத்தில் இதனை உணரலாம்.

(6) பிராட்டி பெருமாளைப் பிரிந்து, இலங்கையில் தனியே இருக்கப் பொருளாய், உயிர்விடும் வழிகளைத் தேடினாள். ஆழ்வாரும் அங்ஙனமே, இவ்வுலகியல் வாழ்வினை வெறுத்துப் பெருமாளின் பிரிவாற்றாமல், "மாயும் வகையறியேன் வல்வினையேன் பெண் பிறந்தே" என்று வருந்துகின்றார்.

(7) பிராட்டி பெருமாளின் பெருமைகளைச் சொல்லிக் கதறினாள். அவ்வாறே ஆழ்வாரும் "புணரா நின்ற மரம் ஏழ் அன்று எய்த ஒருவில் வலவா ஓ" என்று அவனுடைய வீரத்தை வியந்து புகழ்ந்து அழைத்தார்.

(8) பிராட்டி இலங்கையில் தனியே வருந்தி இருந்த நிலையில், ஒரோவழி இராமனை இரக்கமில்லாதவர் எனவும் நினைத்து ஐயுற்றாள். இங்ஙனமே ஆழ்வாரும் இறைவனைப் பிரிந்து இருக்க நேர்ந்த உலகியல் வாழ்வின் கொடுமையினால் 'இரக்கம் எழீர் இதற்கு என்செய்கேன்? அரக்கன் இலங்கை செற்றீருக்கே" என்றும், "இலங்கைக் குழாம் நெடுமாடம் இடித்த பிரானார் கொடுமைகளே" என்றும், "அறிவொன்றும் சங்கிப்பன் வினையேன்" என்றும், இறைவனை இரக்கமில்லாத கொடியவராக நினைத்து ஐயுற்று அரற்றினார்.

(9) பிராட்டி இராமன்பால் தூதுவிடுத்து, அவனால் காக்கப்படுதற்கு உரியவர்களுள் தானும் ஒருத்தி எனத் தெரிவித்து, விண்ணப்பம் செய்க என வேண்டிக் கொண்டாள். ஆழ்வாரும் "ஏறு சேவகனார்க்கு என்னையும் உளள் என்மின்களே" என்று சொல்லித் தூதுவிடுத்தார்.

இவ்வாற்றால் நம்மாழ்வார்க்கும் சீதைப் பிராட்டிக்கும் இடையே பலதிற ஒப்புமைகள் இருத்தலை உணரலாம்.

—ஆசிரியர்

## இயற்கை வழிபாடு:

சிலப்பதிகாரத் தொடக்கமே தெய்வ மணம் கமழ அமைந்துள்ளது. அதன் முதற் காண்டத்தின் முதற் பகுதியாகிய மங்கல வாழ்த்துப் பாடல் என்பதே மங்கல முறையில் நன்கினிது தொடங்குகின்றது. தெய்வ நம்பிக்கை யில்லாதவரும் இயற்கையைத் தெய்வம் என்று குறிப்பிடுவர். அம்முறையில் ஞாயிறு திங்கள் மழை முதலிய இயற்கைப் பொருள்களையே தெய்வங்களாகப் போற்றுதலுடன், இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்தருளியுள்ளார்.

"திங்களைப் போற்றுதும் திங்களைப்
போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண்
குடைபோன்றிவ்
அங்கண் உலகளித்த லான்!

"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோற் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்!"

"மாமழை போற்றுதும் மாமழை
போற்றுதும்
நாமநீர் வேலி யுலகிற்கு அவன்அளிபோல்
மேல்நின்று தான்சுரத்த லான்"

இங்ஙனமே புகார் நகரத்தின் சிறப்பை, அகத்தியர் வாழும் பொதிய மலையோடும், சிவபிரான் வாழும் இமயமலையோடும் ஒப்பிட்டு, 'அவற்றோடொப்ப நின்று நிலை பெறுவது என்கின்றார். கண்ணகியைத் திருமகள் போன்ற வடிவுடையவள்; தீதற்ற அருந்ததி போன்ற கற்புத்திறம் மிக்கவள் என்கின்றார். கோவலனைச் செவ்வேள் போன்றவன் எனக் குறிப்பிடுகின்றார். இவ்வாற்றால் சிலப்பதிகாரத்தின் தொடக்கத்திற்கே, இளங்கோவடிகள் ஒரு வகைத் தெய்விக மெருகும் கவர்ச்சியும் ஊட்டியிருத்தல் காணலாம். இங்ஙனம் சிலப்பதிகாரம் முழுவதிலுமே தெய்விக மணமும் ஒளியும் வீசித் திகழக் காண்கின்றோம். அவை அனைத்தையும் ஈண்டு எடுத்துக் காட்டுதல் இயலாதாகையால், ஒரு சில முதன்மையான பகுதிகளை மட்டும் இங்கு நாம் காண்போம்.

## அருகதேவன்:

1. சிலப்பதிகாரத்தில் சைவம் வைணவம் சாக்தம் சமணம் முதலிய எல்லாச் சமயத் தெய்வங்களும் கொள்கைகளும் பற்றிய குறிப்புக்கள் விரவி வருகின்றன. நாடுகாண் காதை என்னும் பகுதியில் சமண சமயம் பற்றிய செய்திகள் பல வருகின்றன. கோவலனும் கண்ணகியும் புகார் நகரை விட்டு மதுரைக்குச் செல்ல முற்படுகின்றனர். வழியில் கவுந்தியடிகளைச் சந்திக்கின்றனர். மூவருமாகச் சேர்ந்து செல்லுகையில் வழியில் ஒரு சோலையில், சமண சமயத்துச் சாரணர் ஒருவரைக் காண்கின்றனர். அவர் பல அருளுரைகள் கூறுகின்றார். அது கேட்டுக் கவுந்தியடிகள் அருக தேவனை வாழ்த்துகின்றார்.

"அறிவ னறவோ னறிவுவரம் பிகந்தோன்
செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
தரும முதல்வன் றலைவன் றருமன்
பொருளன் புனிதன் புராணன் புலவன்
சினவரன் றேவன் சிவகதி நாயகன்
பரமன் குணவதன் பரத்தி லொளியோன்
சத்துவன் சாதுவன் சாரணன் காரணன்
சித்தன் பெரியவன் செம்மல் திகழொளி
இறைவன் குரவன் இயல்குணன்
எங்கோன்
குறைவில் புகழோன் குணப்பெருங்
கோமான்
சங்கரன் ஈசன் சயம்பு சதுமுகன்
அங்கம் பயந்தோன் அருகன் அருள்முனி
பண்ணவன் எண்குணன் பாத்தில்
பழம்பொருள்
விண்ணவன் வேத முதல்வன்
விளங்கொளி—"

"ஒருமூன் றளித்தோ னோதிய ஞானத்
திருமொழிக் கல்லதென் செவியகந் திறவா;
காமனை வென்றோ னாயிரத் தெட்டு
நாம மல்லது நவிலா தென்னா;
ஐவரை வென்றோ னடியிணை யல்லது
கைவரக் காணினுங் காணாவென்கண்;
அருளறம் பூண்டோன் றிருமெய்க்
கல்லதென்
பொருளில் யாக்கை பூமியிற் பொருந்தாது;
அருக ரறவ னறிவோற் கல்லதென்
இருகையுங் கூடி யொருவழிக் குவியா;
மலர்மிசை நடந்தோன் மலரடி யல்லதென்
தலைமிசை யுச்சி தானணிப் பொறாஅது;
இறுதி யின்பத் திறைமொழிக் கல்லது
மறுதர வோதியென் மனம்புடை
பெயராது"

இவ்வரிகளால் சமண சமயக் கடவுளின் பெயர்களும் இயல்புகளும் அவரை வழிபடுதற்குரிய முறைகளும் தெளிவுற அழகிய இனிய தமிழில் கூறப்பட்டிருத்தலைக் காணலாம்.

**திருமால்:**

(2) காடுகாண் காதை என்னும் பகுதியில் திருமால் திருவேங்கடத்திலும், திருவரங்கத்திலும் எழுந்தருளி விளங்கும் சிறப்பு விவரிக்கப்படுகின்றது. கோவலன் கண்ணகி கவுந்தி ஆகிய மூவரும் மதுரை செல்லும் வழியில், குடமலை நாட்டின் மாங்காடு என்னும் ஊரிலிருந்து வரும் மறையோன் ஒருவனைக் காண்கின்றனர். அவன் அவர்களுக்குத் திருவேங்கடத்திலும் திருவரங்கத்திலும் பெருமாள் எழுந்தருளியுள்ள பெற்றிமையை வியந்து குறிப்பிடுகின்றான்.

நீல நிறமேகம் ஒன்று, பொன்னெடுங் குன்றத்தின் மீது பரவி அகலாது படிந்தமை போல, ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேடன் ஆகிய பாயலின் கண், காவிரி யாற்றின் நடுவில் திருவரங்கத்தில் பலரும் தொழுது புகழும்படி, திருவமர் மார்பன் ஆகிய திருமால் அழகுறப் பள்ளி கொண்டு விளங்குகின்றார். சிறந்த அருவிகள் பாய்கின்ற திருவேங்கடம் என்னும் ஓங்கி உயர்ந்த மலைகளின் உச்சிமீது திங்களும் ஞாயிறும் போலச் சங்கு சக்கரங்கள் இருபுறத்தும் ஒளிவிட்டு விளங்க, அவற்றின் நடுவே மின்னல் போலப் பொன்நிற ஆடையை உடுத்து, இந்திர வில் போலப் பலநிற மணிகள் கொண்ட அணிகலன்களைத் தரித்துக் கொண்டு, நன்னிற மேகம் போலச் செங்கண் நெடியோன் ஆகிய திருமால் நின்றருள்கின்றார்.

"நீலமேகம் நெடும்பொற் குன்றத்துப்
பால்விரிந் தகலாது படிந்தது போல
ஆயிரம் விரித்தெழு தலையுடை அருந்திறற்
பாயற் பள்ளிப் பலர்தொழு தேத்த
விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும் ;
வீங்குநீ ரருவி வேங்கட மென்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய இடைநிலைத் தானத்து
மின்னுக்கோடி யுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறும் தாமரைக் கையி லேந்தி
நலங்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு
பொலம்பூ ஆடையிற் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்"

மாங்காட்டு மறையோன் கூறுவதாக வரும் இச் சிறந்த சிலப்பதிகார வரிகள், திருவரங்கநாதரையும் திருவேங்கடநாதரையும் ஆழ்வார்களின் அரிய பாடல்களைப் போல வியந்து போற்றி இருக்கும் திறன் நினைந்து மகிழ்தற்குரியது.

**ஆய்ச்சியர் குரவை :**

இவ்வாறே ஆய்ச்சியர் குரவை என்னும் பகுதியில், முன்பு ஆயர்பாடியில் கண்ணனும் பலராமனும் நப்பின்னையுடன் கூடி ஆடிய குரவைக் கூத்தினைச் சிலப்பதிகாரம் விவரிக்கின்றது. கோவலன் மதுரைமா நகரில் கொலையுண்ட தன் பயனாக, மாதரி வீட்டில் கண்ணகி தங்கியிருந்த ஆயர் சேரியில், பலவகை உற்பாதங்கள் நிகழ்கின்றன. அதைக் கண்டு மாதரி தன் மகள் ஐயையை நோக்கி, நாம் நமக்குத் தீங்கு எதுவும் நேராமைப் பொருட்டுக் குரவைக் கூத்து நிகழ்த்தித் திருமாலை இறைஞ்சுவோம் எனக் கூறுகின்றாள். அங்ஙனமே ஆயர்பாடியில் பலரும் திருமாலைப் பாடிப் பரவிக் குரவைக் கூத்து ஆடுகின்றனர். இப்பகுதியில் வரும் சிலப்பதிகாரப்பாடல்கள் திருமாலின் பெருமையைத் திவ்வியப் பிரபந்தங்கள் பாடுமாறு போலவே, சிறந்த முறையில் விளக்கியிருத்தல் காண்கின்றோம்.

"வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாள் கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றாற் கட்டுண்கை
மலர்க்கமல உந்தியாய் மாயமோ மருட்கைத்தே"

"அறுபொரு ளிவனென்றே யமரர்கள் தொழுதேத்த
உறுபசியொன் றின்றியே யுலகடைய வுண்டனையே
உண்டவாய் களவினுன் உறிவெண்ணெ யுண்டவாய்
வண்டுழாய் மாலையாய் மாயமோ மருட்கைத்தே;"

"திரண்டமரர் தொழுதேத்தும் திருமால்நின் செங்கமல
இரண்டடியான் மூவுலகும் இருள்தீர நடந்தனையே

நடந்தஅடி பஞ்சவர்க்குத் தூதாக
நடந்தஅடி
மடங்கலாய் மாறட்டாய் மாயமோ
மருட்கைத்தே; ''

'' மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா
வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங்
கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை
கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன
செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன
செவியே;''

'' பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக்
கண்ணும்
திருவடியுங் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன
கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம்
கண்ணென்ன கண்ணே; ''

'' மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும்
போற்றப்
படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே
நாராய ணாவென்னா நாவென்ன நாவே; ''

## சக்தி வழிபாடு

(3) வேட்டுவ வரி என்னும் பகுதியில் சக்தி வழிபாடு பற்றிய குறிப்புக்கள் காணப் படுகின்றன. கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளுடன் மதுரை நோக்கிச் செல்லும் வழியில் ஒரு காட்டில் ஐயை கோவில் ஒன்றில் தங்குகின்றனர். அக் காட்டில் வாழ்கின்ற வேட்டுவர்கள், தங்கள் தொல்குடியிற் பிறந்த குமரிப்பெண் ஒருத் தியை ஒப்பனைசெய்து, கொற்றவை (துர்க்கை) யாக வழிபடுகின்றனர். அதனைக் கோவலனும் கண்ணகியும் காண்கின் றனர். இச்செய்தியைக் கூறும் இடத் தில் இளங்கோவடிகள், வேட்டுவர்களின் வழிபாட்டு முறையினையும், அம்பிகையின் சிறப்பினையும் நன்கினிது விளக்கிப் பாடு கின்றார்.

'' ஆனைத்தோல் போர்த்துப் புலியின்
உரியுடுத்துக்
கானத் தெருமைக் கருந்தலைமேல்
நின்றாயால்
வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி
யேநிற்பாய்; ''

'' வரிவ ளைக்கை வாளேந்தி மாமயிடற்
செற்றுக்
கரியதிரி கோட்டுக் கலைமிசைமேல்
நின்றாயால்
அரியரன்பூ மேலோன் அகமலர்மேல்
மன்னும்
விரிகதிரஞ் சோதி விளக்காகி யேநிற்பாய்;''

'' சங்கமும் சக்கரமும் தாமரைக் கையேந்திச்
செங்கண் அரிமால் சினவிடைமேல்
நின்றாயால்
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன்
பாகத்து
மங்கை யுருவாய் மறையேத்த
வேநிற்பாய்;''

அம்பிகை சிவபிரானைப்போல யானைத் தோல்போர்த்து, புலியின் உரியுடுத்து விளங்குகின்றாள்; கானத்து எருமைக் கருந் தலைமேல் நிற்கின்றாள்; தேவர்கள் அவளை வணங்குகின்றனர். மறைமேல் மறையாகி அம்பிகை ஞானக் கொழுந்தாய்த் திகழ் கின்றாள்; வளையல் அணிந்த தன்கைகளில் வாள் ஏந்தி, மகிஷாசுரன் என்னும் அரக் கனைக்கொன்று, கலைமான் மீது நிற்கின் றாள்; அரி அரன் பிரமன் என்னும் மும் மூர்த்திகளின் இதய கமலத்தில் ஒளிவிடும் சோதியாகத் திகழ்கின்றாள்; திருமாலின் தங்கையாகலின் அவனுக்குரிய சங்கு சக்க ரங்களைத் தன் தாமரைபோன்ற கைகளில் ஏந்திக்கொண்டு, சிங்கவாகனத்தின் மீது திகழ்கின்றாள்; கங்கை நதியை முடியில் அணிந்த கண்ணுதலோன் ஆகிய சிவபிரா னின், இடப்பாகத்தில் மங்கை யுருவாய் மறைகள் ஏத்த வீற்றிருக்கின்றாள். இங் ஙனம் எல்லாம் அம்பிகையைப்பற்றி அடிக ளார் பாடியிருப்பது, அவர் காலத்தி லிருந்த சாக்தேயக் கருத்துக்களை அழகுற வெளியிடுதல் காணலகும்.

## முருகனின் புகழ்

வஞ்சிக் காண்டத்தில் குன்றக் குரவை என்னும் பகுதியில், குறிஞ்சி நிலக் கடவு ளாகிய முருகனின் பெருமையைச் சிலப்பதி காரம் சிறப்புற எடுத்துப் பாடுகின்றது. அப்பகுதியில், முருகனின் தலங்களாகிய

செந்தில் செங்கோடு வெண்குன்று ஏரகம் என்பவை குறிக்கப் பெறுகின்றன. அவனுடைய வேல் புகழ்ந்து போற்றப் பெறுகின்றது. ஆறுமுகங்களும் பன்னிரு கைகளும் உடையவனாய், கடலினுள் சென்று ஒளித்து மாமரமாக வெளிப்பட்ட சூரனையும், கிரவுஞ்ச மலையினையும் வென்ற முருகனின் வீரச் செயல்கள் குறிப்பிடப் பெறுகின்றன. முருகன் சரவணப் பூம் பொய்கையில் தங்கிச் சரவணபவன் எனவும், தாய்மார் அறுவர் திருமுலைப் பாலுண்டு கார்த்திகேயன் எனவும் விளங்கிய செய்திகள் சுட்டப் பெற்றுள்ளன.

" சீர்கெழு செந்திலும் செங்கோடும்
வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன்கை வேலன்றே
பாரிரும் பௌவத்தி னுள்புக்குப்
பண்டொருநாள்
சூர்மா தடிந்த சுடரிலையே வெள்வேலே; "
' அணிமுகங்க ளோராறும் ஈராறு கையும்
இணையின்றித் தானுடையான் ஏந்திய
வேலன்றே
பிணிமுகமேற் கொண்டவுணர் பீடழியும்
வண்ணம்
மணிவிசும்பிற் கோனேத்த மாறட்ட
வெள்வேலே; "
" சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மா ரறுவர்
திருமுலைப்பா லுண்டான் திருக்கைவே
லன்றே
வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து
குருகு பெயர்க்குன்றம் கொன்ற
நெடுவேலே; "

## இளங்கோவடிகள் :

இவ்வாற்றால் சிலப்பதிகாரம் முழுவதிலும் பல்வேறு சமயக் கருத்துக்களும் விரவி வந்திருத்தல் காணலாம். ஒப்பற்ற இனிய தெய்வ நலமும் மணமும் சிலப்பதிகாரத்தில் நிரம்பிக் காணப்படுகின்றன. மிகச் சிறந்த அருட் பெருஞ் சான்றோராகிய இளங்கோவடிகளின் இனிய திருவுள்ளச் சால்பின் பயனாகச் சிலப்பதிகாரத்திற்கு இத்தகைய பெரு நலன்கள் விளைவனவாயின. இளங்கோவடிகள் எல்லாச் சமய நூல்களையும் துறை போகக் கற்றுத் தெளிந்திருந்தார். எல்லாச் சமயங்களிலும் ஈடுபாடு கொண்டு அவ்வவற்றின் நலன்களைச் செவ்விதிற் போற்றி மகிழ்ந்தார். சமய ஒற்றுமைக்கும். சமரச வுணர்விற்கும் சிறந்த எடுத்துக்காட்டாக இளங்கோவடிகள் விளங்கியருளினார். ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் விளங்கியிருந்த அப்பெருந்தகையார், இந்திய நாட்டு மக்களின் இணையற்ற பண்பு* என, அறிஞர்கள் அனைவரும் இனிது புகழும் சமய சமரச உணர்விற்கு மாபெரும் வழிகாட்டியாகத் திகழ்கின்றார்.

தொல்காப்பியர் திருவள்ளுவர் போன்ற பழந்தமிழ்ச் சான்றோர்களும் சமய சமரச உணர்வு வாய்ந்தவர்களாக விளங்கினர். எனினும், அவர்கள் இளங்கோவடிகளைப் போல இங்ஙனம் பல சமயங்களையும், அவற்றிற்குரிய தெய்வங்களையும் பற்றி இத்துணைத் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கிக் கூறிச் சென்றிலர். பிற்காலத்தில் போந்த தமிழ்ப் பெருஞ் சான்றோர்களும், தத்தம் சமயக் கொள்கைகளையும், கடவுளரையும் பற்றியே பெரிதும் பாடியுள்ளனர். ஆனால் இளங்கோவடிகள் ஒருவர் தான் இங்ஙனம் பல சமயங்களையும் ஒருங்கியைத்து முதன் முதலாக விளக்கும் பெருஞ் சிறப்புடையவராகக் காணப்படுகின்றார். தமிழ் இலக்கியங்களில் முதன் முதலாகப் பல சமயங்களையும் இணைத்து இயைத்து, அவ்வவற்றினுடைய தெய்வங்களின் சீரும்சிறப்பும்பற்றி விவரித்துப் பாடி விளக்கிய சிறப்பில், தலையாயதாகச் சிலப்பதிகாரமே திகழ்கின்றது.

## முடிவுரை :

எனவே, இளங்கோவடிகள் இயற்றியருளிய சிலப்பதிகாரம், நாம் இந்நாளில் கடைப்பிடித்து ஒழுகுதற்குரிய சமய சமரச ஞானத்தையும் தெய்விகச் செந்நெறியையும் தெளிவுற விளக்குகின்றது என்று சுருக்கமாகக் கூறலாம். சிலப்பதிகாரம் காட்டும் தெய்வச் செந்நெறியினை, (Eclecticism) நாம் அனைவரும் பின்பற்றி நலம் பெற முயலுவோமாக. —ஆசிரியர்.

---

(*) "An average Indian takes it instinctively granted that everybody is entitled to his own point of view, that between different men and different races of men, differences of taste, habit, thought and religion are inevitable and that these should neither be resented nor obliterated. He bears no animosity against a man because he looks and thinks differently from himself As a result, they are cosmopolitan in outlook, tolerant in behaviour and open-minded in thought.

It is a fact that **India's special gift** to mankind has been the ability and willingness of Indians to effect a synthesis of many different elements both of thoughts and of peoples, to create, infact, **unity out of diversity** "

—**Prof. C. E. M. Joad,**
The Story of Indian Civilisation.

# "தமிழ்ச் சமர்த்தர்"

### முன்னுரை

'தமிழ்ச் சமர்த்தர்' என்னும் தொடர், தாயுமான அடிகளால் வழங்கப் பெற்ற தொன்றாகும். 'சமர்த்தர்' என்னும் சொல், செயற்கருஞ் செயல்களை எளிய இனிய முறையில் திறம்படச் செய்து முடிக்கவல்ல பேராற்றல் மிக்கவர்களைக் குறிக்கும். சமர்த்து எனினும், சாமர்த்தியம் எனினும் ஒக்கும், 'வித்தகர்' 'சதுரர்' 'வல்லாளர்' என்னும் வேறு பிற சொற்களும், இப்பொருளையே யுணர்த்தும் சிறப்புடையன.

" நத்தம்போற் கேடும் உளதாகும்
சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது"

என்னும் திருக்குறளில் திருவள்ளுவரால் வித்தகர் என்ற சொல்லும்,

"தந்ததுன் றன்னைக் கொண்டதென்
றன்னைச்
சங்கரா ஆர்கொலோ? சதுரர்..."

என்ற திருவாசகப் பாடலில் மாணிக்கவாசகரால் சதுரர் என்ற சொல்லும்,

"ஒருமணத்தைச் சிதைவுசெய்து
வல்வழக்கிட்டு
ஆட்கொண்ட உவனைக் கொண்டே
இருமணத்தைக் கொண்டருளிப்
பணிகொண்ட
வல்லாளன்!'

எனவரும் காஞ்சிப் புராணச் செய்யுளிற் சிவஞான சுவாமிகளால் வல்லாளன் என்ற சொல்லும், அழகிய இனிய அரிய முறையில் இலக்கிய நலம் பொலிய ஆங்காங்கே எடுத்தாளப் பெற்றிருத்தல் காணலாம்.

### தாயுமானவர்:

தாயுமானவ சுவாமிகள், தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் தலைசிறந்த ஞானத் தவமுனிவர். வேதாந்த சித்தாந்த சமரச ஞான வித்தகச் செல்வர். இறையருளனுபவம் கைவரப் பெற்ற இணையற்ற அரும் பெருஞ் சான்றோர். தேவார திருவாசகத் திருமுறைகளை யெல்லாம் ஓதி ஓதி யுணர்ந்து உய்வும் உயர்வும் எய்தியவர்.

"தேவரெலாம் தொழச்சிவந்த
செந்தாள் முக்கட்
செங்கரும்பே! மொழிக்குமொழி
தித்திப் பாக
மூவர்சொலும் தமிழ்கேட்கும்
திருச்செ விக்கே
மூடனேன் புலம்பியசொல்
முற்று மோதான்?"

என அருளிச் செய்திருத்தல் கொண்டு, மூவர் தமிழ் ஆகிய தேவாரத் திருமுறைகள் மீது, தாயுமானவர் கொண்டிருந்த பெருமதிப்பும் பேரன்பும் இனைய என்று எண்ணியுணரலாம். தேவார திருவாசகத் திருமுறைகளை யெல்லாம், தாயுமானவர் ஆழ்ந்து ஆராய்ந்து பல்காற் பயின்று ஓதி யுணர்ந்து அனுபவித்து மகிழ்ந்தவர். அதனாலேயே அவர், 'மொழிக்குமொழி தித்திப் பாக அமைந்தது மூவர் தமிழ்' என்று குறிப்பிடுகின்றார்.

### ஓதி மகிழ்ந்த உயர் அனுபவம்:

தேவார திருவாசகத் திருமுறைகளை யெல்லாம் ஓதிஓதி யுணர்ந்து உளம் களிதுளும்பிய தாயுமானவர்க்குச், சுந்தர மூர்த்தி சுவாமிகளின் பாடல்களில் மிகவும் ஈடுபாடு இருந்தது.

"தேன்படிக்கும் அமுதாம்நின்
திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போதென்னை
நான் அறியேன். நாஒன்றோ?
ஊன்படிக்கும் உளம்படிக்கும்
உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்
தான்படிக்கும் அநுபவம்காண்
தனிக்கருணைப் பெருந்தகையே"

என அண்மைக் காலத்திருந்த இராமலிங்க அடிகளார் அருளிச் செய்திருத்தல் போலவே, தாயுமானவரும் சுந்தர மூர்த்தி சுவாமிகளின் தேவாரப்பாடல்களைத் தினந்தோறும் ஓதிஓதி இன்புற்றிருப்பார் என்பதில் ஐயமில்லை. சுந்தரரின் பாடல்கள் பல,

"மோகம் அறுத்திடின்நாம் முத்தி
கொடுப்பதென
ஆகமங்கள் சொன்ன அவர்தம்மைத்
தோகையர்பால்
தூதாகப் போக்விடும் வன்தொண்டன்
தொண்டுதனை
ஏதாகச் சொல்லுவேன் யான்"

"பேரூரும் பரவைமனப் பிணக்கறஎம்
எம்பெருமானை
ஊரூரும் பலபுகல ஓரிரவில்
தூதன்எனத்
தேரூரும் திருவாரூர்த் தெருவுதொறும்
நடப்பித்தாய்
ஆரூர நின்பெருமை அயன்மாலும்
அளிப்பரிதே"

எனச் சான்றோர்கள் பற்பலரும் பாராட்டி வியந்திருத்தல் அறிந்தின்புறுதற்குரியது.

## 2. திருத்தொண்டத் தொகையின் திறம்:

சுந்தரரின் தமிழ்ச் சமர்த்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டாதற்கு, அவர் அருளிச் செய்த திருத்தொண்டத் தொகை ஒன்றே சாலும். அறுபான் மும்மை நாயன்மார் களின் நாடு நகரம் குலம் வரலாறு கொள்கை தொண்டு அருள்நிகழ்ச்சி ஆகிய பலவற்றையும் திறந் தெரிந்து சுருங்க விளக்கி, அவ்வாற்ருல் நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதிக்கும், சேக்கிழார் பெருமானின் திருத் தொண்டர் புராணத்திற்கும் அடிப்படை வகுத்தளித்தமை, சுந்தரரின் தமிழ்ச்சமர்த்தின் விளைவேயாகும். இஞ்ஞான்றைச் சைவ நெறியின் வளர்ச்சிகளுக்கும் வரலாற்றுக்கும் எல்லாம், மூல காரணமாகத் திகழ்வது திருத்தொண்டத் தொகையே! அதனல் அன்ருே, "மூலமான திருத் தொண்டத்தொகைக்கு முதல்வராய் இந்த ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பியாரூரர்" எனச் சேக்கிழார் பெருமான் சுந்தரரைப் பாராட்டிக் கூறி, அவரையே தமது பெரிய புராணக் காப்பியத் தலைவர் ஆகவும் அமைத்துக்கொண்டு சிறப்பித் தருளினர். திருத்தொண்டத் தொகையில் சுந்தரர் 'இல்லையே என்னுத இயற்பகை' 'வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருள்' 'கலை மலிந்த சீர்நம்பி கண்ணப்பர்' 'நாட்டம்மிகு தண்டி' 'மும்மையால் உலகாண்ட மூர்த்தி' 'மறவாது கல்லெறிந்த சாக்கியன்' 'திருநீலகண்டத்துக் குயவனர்-பாணனர்' என்பன போன்று அருளிச் செய்துள்ள அரிய தொடர்கள் எல்லாம், அவ்வந் நாயன்மார்களின் அருமை பெருமைகளை வியந்து எத்துணை நுணுக்கமாகத் திறம் தெரிந்து சுட்டிக் காட்டிச் சிறப்பித்துத் தெளிவுறுத்துகின்றன! இவ் வருமைப்பாடுகளை யெல்லாம் செவ்விதின் உணர வல்லார்க்குத் 'தமிழ்ச் சமர்த்தர்' என்ற புகழுரையின் பொருத்தம் புலனுகும் அன்ருே?

## 3. சைவப் பயிர்:

சுந்தரரின் சமர்த்துக்கு வேருென்றையும் ஈண்டு நாம் நினைவு கூரலாம். ஒரு நாட்டினர் அடிமைத் தளையினின்று விடுதலை பெறுவது சிறப்பு; பெற்ற விடுதலையைப் பேணிக்காத்து வளர்த்துப் போற்றுவது அதனினும் பெருஞ் சிறப்பு. அதுபோல, நாவுக்கரசரும் சம்பந்தரும் பௌத்த சமண சமயங்களின் தாக்குதல்களினின்று சைவ சமயத்தை மீட்டு நலஞ் செய்தனர்; அச் சைவ சமயத்தைப் பேணிக் காத்துப் போற்றிப் பெரிதும் வளர்த்தருளியவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளே எனலாம். பக்தி விதையை விதைத்து, அன்பு நீரைப்பாய்ச்சிச் சைவம் ஆகிய பயிர் வளருமாறு நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் தொண்டாற்றிச் சென்றனர். அப்பயிருக்கு எருவிட்டுக் களை எடுத்து வேலிகோலிக் காவல் புரிந்து கதிர்கள் முதிரவும் விளைவு பெருகவும் போகம் கிடைக்கவும், வேண்டுவன எல்லாம் செய்தமைத்து நம்மனேர்க்கு உதவி புரிந்தவர் சுந்தரரே யாவர். சுந்தரரின் சமர்த்து மிக்க இவ்வரும் பெருஞ்செயலின் அருமைப் பாட்டினையே,

"படியில் நீடும் பத்திமுதல்
அன்பு நீரிற் பணைத்தோங்கி
வடிவு நம்பி யாரூரர்
செம்பொன் மேனி வனப்பாகக்
கடிய வெய்ய இருவினையின்
களைகட் டெழுந்து கதிர்பரப்பி
முடிவி லாத சிவபோகம்
முதிர்ந்து முறுகி விளைந்ததால்"

எனச் சேக்கிழார் பெருமான் உருவக முகமாக உள்ளுணர்ந்து உவந்து பாடி மகிழ்விக்கின்ருர்! சுந்தரர் 'தமிழ்ச் சமர்த்தர்' என்பதனை இத்திறம் பற்றியும் நாம் இனி தெண்ணித் துணியலாம்.

## 4. தவநெறி விளக்கம்:

சுந்தரர் செய்தருளிய சமர்த்தானசெயற்கருஞ் செயல்கள் பல. அவற்றுள் தவ

நெறியின் இயல்பினை அவர் விளக்கியருளிய திறமும் ஒன்று ஆகும். 'தவம்' என்னும் சொல்லை நாம் நன்கறிவோம். ஆனால் 'தவம் என்பது யாது?' என எவரேனும் வினவின், அதற்கு விடையிறுத்தல் நம்மனோர்க்கு எளிதின் இயல்வதன்று. தவம் என்பது பற்றிப் பலர் பலவேறு கருத்துக்களைக் கூறக்கூடும். சுந்தரரின் காலத்திற்கு முன்னும் பின்னும் தவநெறி பற்றிப் பலவேறு கருத்துக்கள் உலவி வந்துள்ளன. சமணர்களும் பௌத்தர்களும் பிறரும், மனைவி மக்களைத் துறந்து உலகியலோடு பொருந்தாமல், ஐம்பொறிகளைக் கடிந்து அடக்கிக் காவி யுடுத்தும், தாழ் சடை வைத்தும், காடு மலை குகைகளில் தனித்திருந்து வாழ்வதே, தவம் எனக் கருதி வந்தனர். இன்றும் அங்ஙனமே பலர் கருதி வருகின்றனர். சுந்தரர் திருவெண்ணெய் நல்லூரில் தடுத்து ஆட்கொள்ளப் பெறுகின்றார். பிறகு திருநாவலூர் மீண்டு, திருப்பதிகம் பாடி இறையருளைப் பரவுகின்றார். "தீவினையால் அவநெறியே செல்லாமல் தடுத்தாண்டாய். அடியேற்குத் தவநெறி தந்தருள்" என்று துறையூர் இறைவனைப் பாடித் துதிக்கின்றார். துதித்துத் தவநெறிபெற்ற சுந்தரர், காடு மலை குகைகளில் தனித்திருந்து வாழ்ந்திலர்; அரச மாளிகைகளில் வாழ்ந்தார். "இறைகளோடு இசைந்த இன்பம் இன்பத்தோடு இசைந்த வாழ்வு" அவருக்கு வாய்த்திருந்தது. **பரவையார், சங்கிலியார்** என்னும் இருமனைவியரை மணம் புணர்ந்து கூடியிருந்தார். **வனப்பகை சிங்கடி** என்னும் இருவரைத் தமது அருமை மகளிராக ஏற்றுக் கொண்டருளி மகிழ்ந்தார். திருமணக் கோலப் பெருமாள் என விளங்கி, ஐம்புல இன்பங்களும் ஆரத் துய்த்தார். கத்தூரி கமழ் சாந்து பூசி மகிழ்ந்தார். கறிவிரவு நெய்சோறு முப்போதும் வேண்டினர்.

"பண்டுநிகழ் பான்மையினால் பசுபதிதன் அருளாலே
வண்டமர்பூங் குழலாரை மணம்புணர்ந்த வன்தொண்டர்
புண்டரிகத் தவள்வனப்பைப் புறங்கண்ட தூநலத்தைக்
கண்டுகேட் டுண்டுயிர்த்துற் றமர்ந்திருந் தார் காதலினால்"

எனச் சேக்கிழார் பெருமான் சிறந்தெடுத்துப் பாடி யிருத்தலும், இச் செய்தியினை வலியுறுத்தும். இவ்வாற்றால் சுந்தரர் தவநெறிக்குப் புதிய விளக்கம் தந்தருளிய சான்றோராதல் உணரலாம்.

'தவம்' என்னும் சொல், தபு என்னும் வினைச் சொல்லின் அடியாகவும், தவ என்னும் உரிச்சொல்லின் அடியாகவும் தோன்றியது எனக் கொள்ளலாம். முறையே அவற்றிற்குக் 'கெடுதல்' 'மிகுதல்' என்னும் பொருள்கள் உரியனவாகும். 'நம்மிடம் உள்ள காம வெகுளி மயக்கம் முதலிய தீய குற்றங்கள் கெட்டொழிய, அன்பும் அறிவும் அருளும் போன்ற நற்பண்புகள் வளர்ந்தோங்கப் பெரிதும் முயன்று வாழும் முறையே தவநெறியாகும்' என்னும் அரும்பெறல் உண்மையினைத் 'தவம்' என்னும் சொற்பொருட் குறிப்பால் நாம் இனிது துணியலாம்.

"குற்றங் குறையக் குணம்மேலிட, அருளை
உற்றவரே ஆவிக் குறவாம் பராபரமே"

என இதனைத் தாயுமானவர் தாமும் அருளிச் செய்திருத்தல் ஈண்டுணரத் தகும்.

## 5. யோகநெறித் தலைவர் :

இங்ஙனம் நாம் தவ நெறிக்குப் புதிய விளக்கம் கொண்டு புரிந்து கொள்ளும் முறையில், 'பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் அங்கு முற்ற வரும் பரிசில்' மங்கையரோடு இருந்தே யோகு செய்யும் மாண்புடையவராய் விளங்கி வாழ்ந்து காட்டியருளிய சுந்தரர் 'தமிழ்ச் சமர்த்தர்' என்பதில் தடையும் உண்டோ? மங்கையரோடு இருந்தே யோகு செய்யும் மாண்புடையவராக விளங்கிய சுந்தரரின் சிறப்பினை,

" இளையான் அடக்கம் அடக்கம் ; கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன்;— எல்லாம்
ஒறுக்கும் மதுகை உரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே, பொறை."

என்பது பற்றிச் சான்றோர்கள் அனைவரும் மிகவியந்து புகழ்ந்து போற்றி மகிழ்ந்துள்ளனர்.

" செல்வநல் ஒற்றி யூரன்
செய்யசங் கிலியால் ஆர்த்து
மல்லலம் பரவை தன்கண்
மார்குற அமிழ்த்து மேனும்
அல்லும்நன் பகலும் நீங்காது
அவன்மகிழ் அடியில் எய்தி
நல்லஇன் படைந்தி ருப்பன்
நம்பியா ரூரன் தானே "

தாயுமானவரின் நெஞ்சைப் பெரிதும் கவர்ந்திருந்தன. சிறப்பாக,

"ஏழிசையாய் இசைப்பயனாய்
இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யும்
துரிசுகளுக்கு உடனாகி
மாழைஒண்கண் பரவையைத்தந்
தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே

என்ற பாடல், அவர் தம் திருவுள்ளத்தைப் பெரிதும் கொள்ளைகொண்டது. தமிழகச் சான்றோர்கள் அனைவரின் உள்ளங்களையுமே, இத்திருப்பாடல் பெரிதும் கொள்ளை கொண்டு விட்டதென்னும் உண்மையை,

"ஏழிசையாய் இசைப்பயனாய்
இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் என்றுமுன்நீ
சொன்னபெருஞ் சொற்பொருளை
ஆழநினைந் திடில்அடியேன்
அருங்கரணம் கரைந்துகரைந்து
ஊழியில்ஒன் றாவதுகாண்
உயர்கருணைப் பெருந்தகையே"

என வரும் திருவருட்பாவினால் நாம் தெளிதல் கூடும். இராமலிங்க அடிகளாரைப் போலவே, தாயுமான அடிகளாரும் 'ஏழிசையாய் இசைப்பயனாய்' எனத் தொடங்கும் சுந்தரரின் தேவாரப்பாடலில் தம்நெஞ்சம் பறிகொடுத்து வியந்து மகிழ்ந்தனர் என்னும் செய்தி,

"என்னுடைய தோழனுமாய் என்ற
திருப்பாட்டின்
நன்னெறியைக் கண்டுஉரிமை
நாம்செய்வ தெந்நாளோ?"

எனத் தாயுமானவர் அருளிச் செய்திருத்தல் கொண்டு உணரப்படும். இங்ஙனம் சுந்தரரின் தேவாரப் பாடல்களை நாடோறும் ஓதி ஈடுபட்டு நின்று, அவர் தம் அருமை பெருமைகளை யெல்லாம் அறிந்து மகிழ்ந்தே, தாயுமானவர் சுந்தர மூர்த்தி சுவாமிகளைத் 'தமிழ்ச் சமர்த்தர்' என வியந்து போற்றிச் சிறப்பித்துக் குறிப்பிடுகின்றார்.

"பித்தர்இறை என்றறிந்து பேதைபால்
தூது அனுப்பு
வித்த தமிழ்ச்சமர்த்தர் மெய்புகழ்வது
எந்நாளோ?"

## சூத்திரமும் பாஷ்யமும்:

'தமிழ்ச் சமர்த்தர்' என்னும் தொடர் சிறியது; ஆனால் அதன் பொருட் குறிப்பும் பரப்பும் மிகப் பெரியது. சுந்தரரைப் பற்றித் தம்முடைய உள்ளார்ந்த கருத்துக்கள் அனைத்தினையும், தாயுமானவர் இச்சிறிய தொடரின் கண் செறித்துக் கூறித் தெளிவுறுத்துகின்றார். இவ்வாற்றால் இதனை ஒரு 'சூத்திரம்' என்று சொல்லுதலும் தகும். வாதராயணரின் பிரம்ம சூத்திரத்திற்குச் சங்கரர் இராமாநுசர் மத்துவர் முதலிய பலர், பல சிறந்த பேருரை (பாஷ்யம்)களைக் கண்டதுபோல, நாமும் இத் தொடருக்குப் பல சிறந்த பொருட் குறிப்புகளை நம் தவத்திற்கும் தகுதிக்கும் ஏற்பக் கருதி உணர்ந்து கொள்ளுதல் கூடும். ஆயினும் ஈண்டைக்கு இயன்ற அளவில் ஒரு சிறிது மட்டும் ஆராய்வோம்.

## I. தூது போக்கிய தொண்டு:

வேதாகமங்கள் எல்லாம் இறைவனைப் பேரறிவும் பேராற்றலும் உடையவன் என்று புகழ்ந்து கூறி வியக்கின்றன. ஆனால் சுந்தரரோ, அன்பர்களின் அன்பிற்குக் கட்டுண்ணும் அளவிலா எளிமை, அடியார்களின் குற்றங் குறைகளைக் கண்டு கொள்ளாத அறியாமை, பச்சிலையும் நீரும் தூவி வழிபடும் சிறு செயலுக்கே பெரிதும் மகிழ்ந்து பேரின்ப வீடு அளித்தருளும் 'ஆசுதோஷி' (அற்பத்திற்கும் அகம் மிக மகிழ்பவன்) ஆகும் தன்மை முதலிய பண்புகள் பல கருதி, இறைவனைப் பித்தர் என்று அறிந்து கொண்டார். அதுவே ஒரு பெருஞ் சாமர்த்தியம்! அம்மட்டோ! தேவர்களை யெல்லாம் ஏவல் கொள்ளும் சிறப்புடைய சிவபெருமானைத் தாம் ஏவல் கொண்டார். பித்தனைப் பேதைபால் தூது அனுப்பி வைத்தார். தலைவரெல்லாம் தலை வணங்கும் தனிப்பெருந் தலைவனாகிய சிவ பெருமானையே ஏவல் கொண்டமை, ஒரு பெருஞ் சதுரப்பாடேயாகும் அன்றோ? இச் சமர்த்தினையே,

"அரவகல் அல்கு லார்பால் ஆசைநீத்
தவர்க்கே வீடு
தருவம்என் றளவில் வேதம் சாற்றிய
தலைவன் தன்னைப்
பரவைதன் பக்கல் மேனாள் கழுதுகண்
படுக்கும் பானாள்
இரவினில் தூது கொண்டோன்
இணையடி முடிமேல் வைப்பாம்."

" பெருமிழலைக் குறும்பர்எனும் பரம யோகி
பெரிதுவந்துன் திருவடித்தா மரையைப் போற்றி
விரைமலர்தூய் வந்தனைசெய் கின்ருன் என்ருல்,
விளங்கிழையார் இருவரொடும் முயங்க லாமோ?
உரைமதி! நின் றனைவெறுப்பதென்கொல்? நின்னை
உடையானுக் கடுத்தசெயல் உனக்கும் ஆயிற்
சுரர்முனிவர் பரவலுறும் பெருஞ்சீர்த் தொண்டத்
தெர்கைசெய்தோய்! அறம்முதல்நால் வகைசெய்தோயே. "

எனத் துறைமங்கலம் சிவப்பிரகாசர் மிக வியந்து போற்றிப் பாராட்டி யிருத்தல், ஈண்டு அறிந்து இன்புறத்தக்கது.

சேக்கிழார் பெருந்தகையும் 'மிக்க விழுத்தவ வேந்தர்' எனவும், 'நீத்தாரும் தொடர்வரிய நெறிநின்ருர்' எனவும் போற்றிப் புகழ்ந்திருத்தல் காணலாம். சிவஞானியர் இலக்கணம் தெளிவிக்கத் தலைப்படும் அருள் நந்தி சிவம், சுந்தரரின் வாழ்க்கையை நினைவு கூர்ந்து அதனையே மேல்வரிச் சட்டமாகக் கொண்டு,

" நாடுகளிற் புக்குழன்றும் காடுகளிற் சரித்தும்
நரகமுழை புக்கிருந்தும் தாகமுதல் தவிர்ந்தும்
நீடுபல காலங்கள் சித்தராய் இருந்தும்
நின்மலஞா னத்தையில்லார் நிகழ்ந்திடுவர் பிறப்பின்;
ஏடுதரும் மலர்க்குழலார் முலைத்தலைக்கே இடைக்கே
எறிவிழியின் படுகடைக்கே கிடந்தும், இறைஞானம்
கூடுமவர் கூடரிய வீடும் கூடிக்
குஞ்சித்த சேவடியும் கும்பிட்டே இருப்பர். "

" அங்கித்தம் பனைவல்லார்க்கு அனல்சுடா தாகும்;
அவுடதமந் திரம்உடையார்க்கு அருவிடங்கள் ஏரு;
எங்கித்தைக் கன்மமெல்லாம் செய்தாலும் ஞானிக்கு
இருவினைகள் சென்றணையா—"
(சித்தியார்: 308, 309)

எனத் தெளிவுறுத்தி யருள்கின்ருர். சரியை கிரியை யோக ஞானங்களுள், சுந்தரர் யோக நெறிக்குரியவர் என்பதும், "நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலேயோர் நால்விரல்" என அவர் அருளிச் செய்திருப்பதும், ஈண்டு நாம் நினைவில் இருத்துதற் குரியன.

## 6. வீடுபெற்ற நிலையின் வியப்பு :

இனி வேருெரு வகையிலும் ஆராயலாம். அப்பர் சம்பந்தர் மாணிக்க வாசகர் முதலிய அருளாளர்கள் அனைவரும், மண்ணுலகை நீத்து விண்ணுலகெய்தி இறையருளொளியிற் கலக்கப் புக்க நிலையில், அவர்களிடம் இருந்து நாம் யாதொரு செய்தியும் பதிகமும் கிடைக்கப் பெற்றிலோம். ஆனல் சுந்தரர் திருவஞ்சைக் களத்தினின்று புறப்பட்டு வெள்ளை யானை ஏறித் திருக்கயிலையை நோக்கிச் செல்லுங்கால், வழியிடையே பாடிக் கொண்டு சென்ற "தான் எனை முன் படைத்தான்" என்னும் திருப்பதிகம், "ஆழிகடல் அரையா அஞ்சையப்பர்க்கு அறிவிப்பதே" என அவராற் பணிக்கப் பெற்றபடி, வருணதேவனல் திருவஞ்சைக் களத்தில் உய்க்கப்பட்டு, நம்மனோர் அனைவராலும் உணரப் பெற்றது. அத்திருப்பதிகத்தின்கண் சுந்தரர், இறைவன் தம்மை வெள்ளை யானையை அனுப்பி வைத்துத் திருக்கயிலைக்கு வரவழைத்துக் கொண்டதும், இந்திரன் மால் பிரமன் முதலிய தேவர்களெல்லாம் வந்து தம்மை எதிர் கொண்டு வரவேற்றதும், ஆகிய செய்திகளைத் தெரிவித்தருளி யிருக்கின்ருர்.

"மண்ணுலகிற் பிறந்துநும்மை வாழ்த்தும் வழிபடியார்
பொன்னுலகம் பெறுதல் தொண்டேனேன் இன்று கண்டொழிந் தேன்
விண்ணுல கத்தவர்கள் விரும்பவெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான்மலையுத்தமனே."

"இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளஎன்னை மத்தயானை அருள்புரிந்து
மந்திரமா முனிவர் இவன்ஆர்என எம்பெருமான்
நந்தமர் ஊரனென்ருன் நொடித்தான்மலை யுத்தமனே."

இத்தகைய அரிய பல நலங்கள் அமைந்த திருப்பதிகம் ஆதல் பற்றியே, தாயுமானவர் 'தான்எனை முன்படைத்தான்' எனத்

தொடங்கும் திருப்பதிகத்தில் மிக்க ஈடு பாடு கொண்டு விளங்கினர் !

"தான் என்னை முன்படைத்தான் என்ற
தகவுரையை
நான்என்று உண்மைபெற்று
நாம்உணர்வ தென்னாளோ"

என அவர் அருளிச் செய்திருத்தல் காண்க! வீடுபேறு எய்துவோர் அனே வரும் உடம்பு நீங்கிய பின்னரே அதனை எய்தப் பெறுவர். வீடுபேறு தலைக்கூடுதல் உடம்பு நீங்கியதற்குப் பின்னரே இயலும். இது குறித்தே 'செடியார் உடலைச் சிதை யாதது எத்துக்கு எங்கள் சிவலோகா?' எனவும், 'தினைத்துணையேனும் பொறேன் துயர் ஆக்கையின் திண் வலையே' எனவும், 'மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன் கழற்கே புகுமாறும்' எனவும் மாணிக்க வாசகர் ஆங்காங்கே அருளிச் செய்வாரா யினர். இங்ஙனமாகவும், சுந்தரரோ களையா உடலோடு — மானவ யாக்கை யோடு — திருக்கயிலை செல்லப் பெற்றார். தாம் சென்றது மட்டுமே யன்றித் தமது அருமை நண்பர் ஆகிய சேரமான் பெருமாளையும், மனித யாக்கையுடனேயே தம்மோடு திருக்கயிலைக்கு அழைத்துச் சென்றார். சுந்தரர் எய்திய இவ்வீடு பேற்று நிலையின் இயல்பினை வியந்து,

"களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதம்மாறு வெள்ளானை
மேற்கொள்ள
முளையா மதிசூடி மூவா யிரவரோடும்
அளையா விளையாடும் அம்பலம்நின்
ஆடரங்கே"

எனத் திருவிசைப்பா ஆசிரியர் பூந்துருத்தி நம்பிகாட நம்பிகளும்,

"ஞானஆ ரூரைச் சேரரை அல்லது நாம்
அறியோம்
மானவ யாக்கை யொடும்புக் கவரை
வளர்ஒளிப்பூண்
வானவ ராலும் மருவற் கரிய
வடகயிலைக்
கோனவன் கோயிற் பெருந்தவத்
தோர்தங்கள் கூட்டத்திலே"

என நம்பியாண்டார் நம்பிகளும் புகழ்ந்து போற்றி யிருத்தல் காணலாம். இவ்வாற்று லும் சுந்தரர் ஒரு பெருந் 'தமிழ்ச் சமர்த் தர்' என்பது பெறப்படுகின்றதன்றோ ?

## 7. நயத்திற்குச் சுந்தரனர் :

சுந்தரரைச் 'சமர்த்தர்' என்று மட்டும் கூறியமையாது 'தமிழ்ச் சமர்த்தர்' என்று விதந்து கூறியது, தமிழ் மொழி ஒப்புயர் வற்றதாதல் போல, ஒப்புயர்வற்ற சமர்த் துடையவர் என்று சிறப்பிப்பதற்கு எனவும் கொள்ளலாம். 'தமிழ்ச் சமர்த்தர்' என் னும் தொடர் 'தமிழிற் சமர்த்து அமையப் பாடுதலில் வல்லவர்' எனவும் பொருள் படும். இப்பொருட் குறிப்பிலேயே 'நயத் திற்குச் சுந்தரனர்' என்னும் புகழுரை தமிழகத்தில் வழங்கிவருகின்றது.

"வாக்கிற் கருணகிரி, வாதவூ ரர்கனிவில்
தாக்கில் திருஞான சம்பந்தர்—
நோக்கிற்கு
நற்கீர தேவர், நயத்திற்குச் சுந்தரனர்
சொற்குறுதிக்கு அப்பர்எனச் சொல்"

என்பது மிகச் சிறந்ததொரு பழம்பாடல். பழந்தமிழ்ச் சான்றோர்கள் நிகழ்த்திய இலக்கியத் திறனய்வின் (Literary Criticism) அரும்பெறல் விளைவே, இவ் வினிய பழம்பாடல் எனலாம். இதன்படி சுந்தரரின் நயமார்ந்த செந்தமிழின் திற னறிய இரண்டொரு சான்றுகளை மட்டிற் கண்டு அமைவோம்.

(1) சுந்தரர் இறைவன்பால் நெல்லிட ஆட்கள் வேண்டிப் பாடுகின்றார். அதனை வாளா பாடாமல், "இறைவனே! நீ நின் உடலின் பாதியில் ஒரு பெண்ணையும், சடையின்மேல் ஒரு பெண்ணையும் வைத் திருக்கின்றாய். அதனால், என்னைப்போல நீயும் மாதர் நல்லார் விளைக்கும் வருத்தத் தின் இயல்பினை அறிந்திருக்கின்றாய். எனவே பரவை பசி வருத்தமும் வாட்ட மும் தீர, யான் குண்டையூரிற் பெற்ற சில நெல்லினை அட்டித்தரப் பணித்தல் வேண்டும்" என நயமுறப் பாடுகின்றார்!

"பாதியோர் பெண்ணை வைத்தாய்
படருஞ்சடைக் கங்கை வைத்தாய்
மாதர் நல்லார் வருத்தம் அதுநீயும்
அறிதியன்றே
கோதில் பொழில் புடைசூழ்
குண்டையூர்ச் சிலநெல்லுப்
பெற்றேன்
ஆதியே அற்புதனே அவை அட்டித்
தரப் பணியே"

(2) தம்பக்கல் ஏதேனும் குற்றங்கள் இருப்பின் அவற்றைப் பொறுத்தருளு மாறு இறைவனை வேண்டிக் கொள்ளத் தலைப்படும் சுந்தரர், குற்றம் செய்தார்

பலரையும் சுட்டிக் குறிப்பிட்டு, அவர் தம் குற்றங்களையெல்லாம் குணமாகக் கொண்டருளிய நீ, என் குற்றங்களை யும் அங்ஙனமே கொண்டருளல் வேண் டும் என மன்றாடுகின்றார்!

''நற்றமிழ் வல்ல ஞானசம் பந்தன்
நாவினுக் கரையன் நாளைப்போ
வானும்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம்புல்லன்
என்றிவர்கள்
குற்றம் செயினும் குணம்எனக் கருதும்
கொள்கை கண்டுநின் குரைகழல்
அடைந்தேன்
பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூர்
உளானே''

(3) தமக்குப் பொருள்கொடுத்தல் வேண்டும் என இறைவனைக் கேட்கும் சுந்தரர் வாளா கேளாது, 'திருவீழிமிழ லையில் முன்னர் அப்பருக்கும் சம்பந்தருக் கும் நாள் தோறும் படிக்காசு அளித்தீர். அதுபோல எனக்கும் இப்போது அருள் செய்தல் வேண்டும்' என நயஞ்சிறக்கக் கேட்கின்றார்!

''நேசமுடை அடியவர்கள் வருந்தாமை
அருந்த
நிறைமறையோர் உறைவீழி
மிழலைதனில் நித்தல்
காசுஅருளிச் செய்தீர்! இன்று
எனக்கருள வேண்டும்!
கடல்நாகைக் காரோணம் மேவியிருந்
தீரே''

(4) சங்கிலியாரைத் தமக்குத் திரு மணம் செய்து வைத்தல் வேண்டும் என இறைவன்பாற் சுந்தரர் வற்புறுத்தி வேண்டிக் கொண்ட முறைமையினை,

''மங்கை யொருபால் மகிழ்ந்ததுவும்
அன்றி, மணிநீள் முடியின்கண்
கங்கை தன்னைக் கரந்தருளும்
காதல் உடையீர்! அடியேனுக்கு
இங்கு நமக்குத் திருமாலை தொடுத்தென்
உள்ளத் தொடையவிழ்த்த
திங்கள் வதனச் சங்கிலியைத்
தந்தென் வருத்தம் தீரும்! என்றார்''

எனச் சேக்கிழார் பெருமான், சுந்தரரின் நயஞ்செறிந்த சொல்வன்மைத் திறன் விளங்கப் பாடியிருத்தல் காணலாம். இத் தகைய நயஞ்செறிந்த நல்லுரைகளால்,

''பாட்டுக்கோ வன்பினுக்கோ பத்திக்கோ
அன்பர்தங்கள்
நீட்டுக்கெல் லாம்குறுகி நின்றாய்
பராபரமே''

எனத் தாயுமானவர் பாடுவதுபோல, இறை வனைச் சுந்தரர் தாம் இழுத்த இழுப்புக் கெல்லாம் வளைந்து கொடுக்குமாறு செய்து ஏவற் பணிகொண்டனர். இவ் வுண்மையை,

''பொன்நவிலும் கொன்றையினாய்
போய்மகிழ்க்கீழ் இருஎன்று
சொன்னஎனைக் காணமே சூளுறவு
மகிழ்க்கீழே
என்னவல்ல பெருமானே இங்கிருந்தா
யோஎன்ன
ஒன்னலரைக் கண்டாற்போல்
உளோம்போகீர் என்றானே''

எனவரும் தேவாரப் பாடலால் தெளிய லாம். ''வேட்கோச் சிறுஅர் தேர்க்கால் வைத்த பசுமட் குரூஉத்திரள் போலத்'' தாம் வேண்டுமாற்றானெல்லாம், இறைவ னைத் தம் நயம் சிறந்த செந்தமிழ்ப் பாடல்களால் மயக்கி மகிழ்வித்து, ஏவல் கொண்ட சிறப்புப் பற்றிச் சுந்தரரைத் 'தமிழ்ச் சமர்த்தர்' என்று தாயுமானவர் புகழ்ந்தமை பொருத்தமே யாகும் அன்றோ?

தன்மையி னால்அடி யேனைத்தாம்
ஆட்கொண்ட நாட்சபைமுன்
வன்மைகள் பேசிட வன்தொண்டன்
என்பதோர் வாழ்வுதந்தார்
புன்மைகள் பேசவும் பொன்னைத்தந்
தென்னைப் போகம் புணர்த்த
நன்மையி னார்க்கிடம் ஆவது
நந்திரு நாவ லூரே''

முடிவுரை :

இதுகாறும் கூறிய சிலவற்றால் சுந்த ரரின் அருமை பெருமைகளையும், அவர் தம் செந்தமிழ்த் திருப்பதிகங்களின் சிறப்புக்களையுமெல்லாம், ஓரளவேனும் உய்த்துணர்ந்து கொண்ட நாம், 'தமிழ்ச் சமர்த்தர்' எனத் தாயுமானவர் முதலிய சான்றோர்கள் பலரும் போற்றிய நம் சுந்தரரை வழிபட்டு, அவர் தம் தேவாரத் திருப்பதிகங்களை ஓதியுணர்ந்து உய்வதற்கு முயலுவோமாக!

—ஆசிரியர்.

# இளங்கோவடிகள் அளிக்கும் இனிய செய்தி

## முன்னுரை:

இளங்கோவடிகள் உலகப் பெருங் கவிஞர்களுள் ஒருவராக மதிக்கத்தக்கவர். "யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை; உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை" என்னும் பாடலால், தேசீய கவிஞர் பாரதியார், இளங்கோவடிகளைச் சிறந்தெடுத்துப் புகழ்ந்து பாராட்டியுள்ளார். நாடகக் காப்பியம் இயற்றும் துறையில் ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியரும், வடமொழியிற் காளிதாசரும் போல, அருந்தமிழில் ஒப்பாரும் மிக்காரும் இன்றிச் சிறந்து விளங்குபவர், இளங்கோவடிகள் என்பது, பேரறிஞர்களின் சீரிய துணிபு.

## தவவொழுக்கம் :

இளங்கோவடிகள் வெறும் கவியரசர் மட்டுமல்லர்; சிறந்த புலியரசராகவும் திகழ்ந்தவர்; அதுமட்டுமேயன்றிக் குணவாயிற் கோட்டம் என்னும் கோயிலில், அரசு துறந்திருந்து, தவ ஒழுக்கம் தாங்கி 'அந்தமில் இன்பத்து அரசாள் வேந்து' என்னும்படியும் மேம்பாடுற்று விளங்கியவர்.

அழியாப் புகழ் பெற்ற புனித இலக்கியங்களை, அரிய தவ ஒழுக்கம் சான்ற அருளாளர்கள் மட்டுமே இயற்ற முடியும். அத்தகையர் அல்லாது பொறிபுலன்களின் வயப்பட்டு ஒழுகி யுழலும் புல்லறிவினர்களாகிய நம் போலிய எளிய மக்கள், இயற்றும் நூல்கள் ஒரு சில கால அளவில் அழிந்தொழிந்துபோம். கால வெள்ளத்தைக் கடந்து நிலைபெற்று, என்றும் புத்தொளி வீசிப் பிறங்கும் இலக்கியங்களை இயற்றும் திறன், 'தவத்தால் மனம் தூயராய்', மெய்யுணர்வில் மிக்கோங்கி, இறையருள் பெற்றொளிரும் நிறைமொழி மாந்தர்கட்கே இயலுவதாகும் (1).

## இளங்கோவடிகள் :

இம்முறையில் ஆராய்ந்தால்; இளங்கோவடிகளின் தவவொழுக்கம் மிக்க சான்றாண்மைப் பெரும் புலமைத் திறனை, நாம் இனிது உணர்தல் கூடும். புலவர்களிற் பலர் பொருளையும் புகழையும் விரும்பியோ அல்லது பிறர் வேண்டுகோட்கு இசைந்தோ, நூல்கள் இயற்றியிருத்தலைக் காண்கின்றோம். உலக மக்களின் நலம் ஒன்றையே கருதிப் பரிவிரக்கம் கொண்டு, அதன் பயனாக அழியாப் புகழ் இலக்கியங்களை ஆக்கியளித்துச் சென்ற பெருமக்கள் ஒரு சிலரே யாவர். அவ்வொரு சிலருள் தலையாய ஒருவர், இளங்கோவடிகள் எனத் துணிந்து கூறலாம்.

## நூல்நுதல் பொருள் :

நூல் இயற்றும் புலவர்கள், அங்ஙனம் தாம் நூல் இயற்ற முற்பட்டதற்குரிய காரணங்களையோ அல்லது குறிக்கோள்களையோ, இன்னவை என்று வரையறுத்துத் தெளிவுறப் பெரும்பாலும் சொல்லுவதில்லை. ஆனால் இளங்கோவடிகளோ, தாம் நூலியற்றக் கருதி முற்பட நேர்ந்த சூழ்நிலை குறித்தும், அதற்குரிய காரணம் பற்றியும் தெளிவுறக் கிளந்து கூறியருள்கின்றார். மேலும் தம் நூலால் தாம் விளக்கக் கருதும் உயரிய உண்மைப் பொருள்கள் இவை என்றும், வரையறை செய்து புலப்படுத்துகின்றார்.

---

(1) "He who is not a seer cannot produce a great literature. 'Nan Rish Kurute Kavyam'..........."

—Dr. S. Radha Krishnan.

"அரைசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை யுருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம்ஓர் பாட்டுடைச் செய்யுள்........."

என்னும் சிலப்பதிகார வரிகளில், இளங்கோவடிகள் தாம் இயற்றத் தொடங்கும் நூலின்கண் தம்மால் விளக்கி வற்புறுத்தப் பெறும் உயரிய உண்மைகள் இவை எனக் கிளந்தெடுத்து, நூலின் தொடக்கத்திலேயே நுவன்றிருத்தல் காணலாம்.

இத்தனிப் பெருஞ் சிறப்பு, வேறுபிற எந்நூலிலும் இத்துணைத் தெளிவாகக் காணப்படவில்லை. ஆங்கிலத்தில் 'துறக்க நீக்கம்' (Paradise Lost) என்னும் காப்பியம் இயற்றிய ஜான் மில்ட்டன் என்னும் கவிஞர் தமது நூலின் தொடக்கத்தில், தாம் இயற்றத் தலைப்படும் நூலின் குறிக்கோள் இதுவென்று முதற்கண் குறிப்பிட்டு மொழிந்து மேற்செல்லுகின்றார். *அவர் தம் செயலோடு, நம் இளங்கோவடிகளின் செயலும் பெரிதொத்துத் திகழ்ந்து, பாராட்டி மகிழ்தற்குரியதாக விளங்குகின்றது.

## சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம் என்னும் செஞ்சொற் பெருங் காப்பியத்தினை, மூன்று காண்டங்களாகவும், முப்பது காதைகளாகவும் வகுத்து, ஓர் அழகிய சிறந்த கலைக் கோயிலாக அமைத்தருளிய இளங்கோ வடிகள், அந்நூலின் தொடக்கத்திற் போலவே, அதன் முடிவிலும் கூட, உலக மக்களுக்கு நலம் விளைக்கும் உயரிய சிறந்த உபதேசங்கள் பலவற்றைச் செய்த பின்னரே, நூலினை நிறைவு உறுத்துகின்றார். அவ்வுபதேசங்கள், தமது காப்பியத்தின் பயனாகிய கருப் பொருளாக விளங்கும் வகையிலும், உலகத்திற்குத் தாம் அளிக்கும் இனிய ஞானச் செய்தியாக (Spiritual Message) அமையுமாறும், அவரால் அருளிச் செய்யப் பட்டுள்ளன.

## சிலப்பதிகாரச் செய்தி:

"இதுவரையில் யாம் கூறிவந்த செய்திகளை யெல்லாம் தெரிவுறக் கேட்ட திருத்தகவுடைய நல்லோர்களே! இது காறும் எம்முடைய இந்நூற் பொருளைக் கேட்டதன் பயனாக, நீவிர் இனிமேல் பிறர்க்குக் கவலையும் துன்பமும் விளைத்தலை விட்டொழியுங்கள். கடவுள் உண்டு என்று நம்புங்கள். கடவுளை உணர்ந்த பெரியோர்களை விரும்புங்கள். பொய் கூறுதற்கு அஞ்சுங்கள். பிறர்மேல் புறங் கூறுதலைக் கைவிடுங்கள். ஊன் உண்ணுதலை விலக்குங்கள். தவவொழுக்கங்கள் பலவும் மேற் கொள்ளுங்கள். பிறர் செய்த உதவியை மறவாதிருங்கள், தீயவர்களின் தொடர்பினை இகழ்ந்து ஒதுக்குங்கள். பொருள் நிறைந்த அறிவுரைகளை இகழாதீர்கள். அறநெறிச் செல்லும் சான்றோர்களின் திருக் கூட்டத்திற்கு இடைவிடாமற் சென்று பழகுங்கள். மறநெறிச் செல்லும் தீயவர்களின் தொடர்பினின்று விடுபட்டுத் தப்பி ஓடி உய்ய முயலுங்கள். பிறர் மனைவியை நெருப்பென நினைத்து அஞ்சுங்கள். துன்புற்று வருந்தும் உயிர்களைக் காப்பாற்றுங்கள். இல்லறக் கடமைகளைத் தவறாது போற்றுங்கள். பாவச் செயல்களைக் கடிந்து முயன்று நீக்கி விடுங்கள். கள்ளும் களவும் காமமும் பொய்யும் ஆகிய குற்றங்களையும், அறிவிலிகளாகிய வீணர்களின் தொடர்பையும், தந்திரமாக ஒழித்துவிடுங்கள். இவ்வுலகத்தில் நம்முடைய இளமையும் செல்வமும் யாக்கையும், ஒரு சிறிதும் நிலையுடையன அல்ல. நமக்கென்று அளவிடப் பெற்றுள்ள வாழ்நாள், கழியாமல் ஒரு

---

" Of man's first disobedience, and the fruit
Of that forbidden tree whose mortal taste
Brought death into the World, and all our woe,
With loss of Eden, till one greater Man
Restore us, and regain the blissful seat,
Sing, Heavenly Muse,..............................
.......................................................
.....................what in me is dark
Illumine, what is low raise and support;
That, to the highth of this great argument,
**I may assert Eternal Providence,**
**And justify the ways of God to men.** "
—John Milton,
Paradise Lost.

கணமும் நில்லாது. நமக்கு நேர வேண்டிய துன்பம் நேராமல், எவ்வாற்றாலும் நீங்காது. ஆதலால் காலம் உள்ள போதே, இவ்வுலகத்தினின்று இறந்த பின்னர் நாம் செல்வதற்குரிய மறுமை உலகத்திற்கு, உற்ற துணையாகிய அறங்களைச் செய்து தேடிக் கொள்ளுங்கள். வளம் மிக்க இப்பெரிய உலகத்தில் வாழும் மக்காள்! நுமக்கு யாம் கூறும் செய்தி இதுவே!" எனக் கூறி, இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரத்தினை முடித்தருள்கின்றார்.

தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானஞ் செய்ம்மின் தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்
அறவோ ரவைக்களம் அகலா தணுகுமின்
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின் பிழையுயிர் ஓம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்லுவ தொழியாது
செல்லும் தேஎத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென்.

**உயரியநல் உபதேசங்கள் :**

சிலப்பதிகாரம் என்னும் செஞ்சொற் காப்பியத்தின் இறுதிப் பகுதியாக வரும் இம்மணி மொழிகள் எத்துணைச் சிறப்பும் விழுப்பமும் உடையனவாக மிளிர்கின்றன? எத்துணை உயர்ந்த சிறந்த நீதிகளை எவ்வளவு இனிய எளிய முறையில், மிகவும் சுருக்கித் தொகுத்து ஒருங்கே தந்துள்ளார் நம் இளங்கோவடிகள்! விவிலிய நூல் கூறும் 'பத்துக் கட்டளைகள்' போல அன்றோ, இச் சிறந்த இனிய பொருள்மொழிகள் மிகச் சிறந்து பொலிந்து விளங்குகின்றன? உலகிலுள்ள சமயங்கள் பலவும் கூறும் உயர்ந்த உபதேசங்கள் அனைத்தையும் ஒருங்கே பிழிந்து வடித்து எடுத்த நற்சாரமாக அன்றோ, இவ்வறவுரைகள் இளங்கோவடிகளால் செவ்விதின் இயம்பப்பட்டுள்ளன! இவ்வரிகளின் அருமையையும் இனிமையையும் இனைத்தென்று அளவிட்டுக் கூறுதல் ஒல்லுமோ? எல்லா நாட்டிலும் எல்லாச் சமயத்தாரும் ஒருங்கியைந்து உடன்பட்டு, எக்காலத்தும் போற்றி உய்தற்குரிய உயரிய நல் உபதேசங்கள் அன்றோ இவ்வினிய சிறந்த வரிகள்!

**முடிவுரை:**

சிலப்பதிகாரம் என்னும் தீம்பாலில் சுவை நிறைந்த பாலேடு (Cream of the Classic) எனலாம்படி, மேம்பட்டு விளங்குவன இவ்வரிகள்! இளங்கோவடிகள் உலக மக்களுக்குத் தம் சிலப்பதிகார வாயிலாக அளிக்கும் இனிய ஞானச் செய்தியாக மிளிரும் ஒப்பற்ற இவ்வருளுரைகளை, நாம் அனைவரும் நம் வாழ்க்கையிற் கடைப்பிடித்து ஒழுகி, நலம்பெற முயலுவோமாக.

—ஆசிரியர்

# மதிப்புரைகள்

## 1. சைவத் திருக்கோயிற் கிரியை நெறி:

இந்நூல், இலங்கைப் பல்கலைக் கழகத்தின் சம்ஸ்கிருத விரிவுரையாளராக விளங்கும் திரு. க. கைலாசநாதக் குருக்கள், M. A. Ph., D. அவர்கள், இயற்றியது. இதனை முன்னீசுவரம் ஸ்ரீ வடிவாம்பிகை சமேத ஸ்ரீ முன்னைநாத சுவாமியின் மகாகும்பாபிஷேக விழாவின்போது (1963), இலங்கை இந்து கலாபிவிருத்திச் சங்கம் சிறப்புற வெளியிட்டுள்ளது. இந்நூலின் ஆசிரியராகிய திரு.க. கைலாசநாதக் குருக்கள் அவர்கள், பூனா பல்கலைக் கழகத்தில் புராண இதிகாசங்கள் கூறும் சைவத்தையும், ஆகம மரபு நெறி தழுவிய தென்னிந்தியச் சைவத் திருக்கோயில்களில் நிகழும் கிரியைகளையும் பற்றி, ஆராயும் வாய்ப்பினைப் பெற்றார். இவ்வாராய்ச்சியின் விளைவாக இவர் இயற்றிய ஆராய்ச்சி நூலினைப் பாராட்டி, பூனா பல்கலைக்கழகம் இவருக்குத் 'தத்துவப் பேரறிஞர்' (Ph. D.) என்னும் பட்டம் வழங்கிற்று. இந்நூல் ஆகமங்கள் கூறும் கிரியைகளையும், அவற்றுடன் தொடர்பு கொண்ட செய்திகளையும் பற்றி நன்கினிது விளக்கிக் கோவைப் படுத்தித் தந்துள்ளது.

இந்நூல் சிவாசாரியர்களுக்கும் அர்ச்சகர்களுக்கும் வழிகாட்டியாக அமைதல் வேண்டுமென்னும் நோக்குடன் இயற்றப் பெறவில்லையாயினும், திருக்கோயில்களுக்கு நித்திய நைமித்திகக் கிரியைகள் நிகழும் வேளைகளில் சென்று தரிசித்து வழிபடும் அன்பர்களுக்குப் பயன்படும்படி அமைந்துள்ளது. கோயில் எப்படி அமைந்துள்ளது? அங்குள்ள விக்கிரகங்கள் எத்தகையன? அவ்வாறு தோற்றம் பெறக் காரணமென்ன? கோயில்கள் எவ்வாறு நுண்கலைகளைப் பேணும் இடங்களாக மிளிர்கின்றன? கோயில்களில் நடைபெறும் நித்திய நைமித்திகக் கிரியைகள் எவை எவை? அவை எவ்வாறு நிகழ்வன? என வழிபடுவோர்களின் மனத்தில் எழும் கேள்விகளுக்குச் சுருக்கமாக விடை கூறும் வகையில், அதையே தனிப்பெரும் நோக்காகக் கொண்டு அமைந்தது இந்நூல்.

கிரியைகளின் புராதன வரலாறு, இதிகாச புராணங்கள் கூறும் கிரியைகள், திருக்கோயிலின் அமைப்பு, திருவுருவங்களின் விளக்கம், நித்திய நைமித்திகக் கிரியைகளின் முறைகள், பரிவார தெய்வங்கள், கிரியைகளின் உட்பொருளும் உயர் நோக்கும் என்னும் பொருள்கள் இந்நூலின்கண் விரிவாகச் சிறப்புற விளக்கப்பட்டுள்ளன. வாஸ்து மண்டலம், மனு சூத்திர கிரம யாகசாலை, பல்வேறு குண்டங்களின் அமைப்பு முதலியவற்றின் விளக்கப் படங்கள் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. நூல், நல்ல இனிய சிறந்த தமிழ் நடையில், அறிஞர்கள் பாராட்டும் முறையில் அமைந்துள்ளது. வடமொழி நூற்பொருள்களை நல்ல இனிய சிறந்த தமிழில் வடித்துத் தரும் நெறியில், இந்நூல் மிகவும் தலை சிறந்த தொன்றாகத் திகழ்கின்றது. சமய வுணர்வும் ஒழுக்கமும் உடைய தக்கோர் அனைவரும் வாங்கிப் படித்து மகிழ்ந்து, பயன் பெறத் தகுந்த சிறந்த நல்ல ஆராய்ச்சி நூல். ஆசிரியரின் புலமையும் தொண்டும் பெரிதும் வியந்து பாராட்டிப் போற்றுதற்குரியன. நூல் திருத்தமாகவும் கவர்ச்சியாகவும், பிழையின்றி நன்கினிது திருத்தமாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. விலை ரூபாய். 5. கிடைக்குமிடம் : கலா நிலையம், 175, செட்டியார் தெரு, கொழும்பு—11.

## 2. பெரியபுராண சார வெண்பா:

இந்நூல் திரு. வல்லி. ப. தெய்வநாயக முதலியார் என்னும் அறிஞரால் பல ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றப் பெற்றது. பெரிய புராணத்தின்கண் வரும் அறுபான் மும்மைச் சைவ நாயன்மார்களின் வரலாற்றைத் தனித்தனியே ஒவ்வொரு வெண்பாவால் பாடியிருப்பது. விநாயகர் காப்பு, அவையடக்கம், பெரிய புராண அமைப்பினை ஒட்டி இடை இடையே சருக்கங்களின் முடிவு தோறும் வரும் சுந்திர மூர்த்தி சுவாமிகளின் துதிகள், ஆகியனவும் சேர்ந்து மொத்தம் 84 பாடல்கள் கொண்டது. திருக்குறள் வேள். திருச்சி திரு. ஜி. வரதராஜ பிள்ளை, B. A. அவர்களின் பொருளுதவி கொண்டு, வரலாற்றுச் செல்வர் முதுபெரும் தமிழ்ப் புலவர் திருச்சி திரு. அ. பஞ்சநதம் பிள்ளை அவர்களால், பதிப்பிக்கப் பெற்றுள்ளது. அன்பர்கள் படித்துப் பயன் பெறத்தக்க நல்ல நூல். இலவச வெளியீடு.

—ஆசிரியர்.

# திருச்சந்த விருத்தம்

(முற்றொடர்ச்சி)

" நடந்த கால்கள் நொந்தவோ?
நடுங்க ஞாலம் ஏனமாய்
இடந்த மெய் குலுங்கவோ?
விலங்கு மால் வரைச்சுரம்
கடந்த கால் பரந்த
காவிரிக் கரைக் குடந்தையுள்
கிடந்த வாறு எழுந்திருந்து
பேசு! வாழி கேசவனே!

(பொழிப்புரை) குறுக்கே தடையாக உள்ள பெரிய மலைகளையும், அரிய வழிகளையும் கடந்து பெருகி வருகின்ற, விரிவான கால்வாய்களை உடைய காவிரி யாற்றின் கரையில் விளங்கும் திருக்குடந்தை என்னும் தலத்தில், நீர் பள்ளி கொண்டருளியிருக்கும் தன்மை, உலகத்தை அளந்த திருவடிகள் நொந்ததனாலோ? அல்லது பூமிப் பிராட்டியானவள் பாதளத்தினின்று நம்மை எடுத்துக் காக்க வல்லவர் உண்டோ என்று நடுங்கிய காலத்தில், வராக அவதாரம் எடுத்து விடுவித்துக் காப்பாற்றிய திருமேனி களைப்புற்றதனாலோ ? கேசவனே ! எக்காரணம் பற்றி என்று நீ எழுந்திருந்து அருளிச் செய்க! இங்ஙனம் பள்ளி கொண்டருளும் நின் சிறப்பு வாழ்க !

*(குறிப்புரை)*:—ஞாலம்-உலகம்; ஏனம்-பன்றி; இடத்தல்-தோன்றுதல்; விலங்குதல்-குறுக்கே கிடத்தல்; சுரம்-செல்லுதற்கரிய வழி; கேசவன்-கேசி என்னும் அசுரனைக் கொன்றவன், திருமால்.

திருமழிசைப் பிரான் திருக்குடந்தை ஆராவமுதப் பெருமாளை வழிபடச் சென்றார். அவரைக் கண்டு பேசாமலும், கை நீட்டி அணைக்காமலும், பெருமாள் வாளா பள்ளி கொண்டருளி யிருந்தார்; ஆதலின் ஆழ்வார், பெருமாள் ஏதேனும் களைப்புற்றிருக்கிறார் போலும் என்று கருதி இங்ஙனம் வினா நிகழ்த்தி, எழுந்திருந்து பேசியருளும்படி பெருமாளை வேண்டிக் கொள்ளுகின்றார். பெருமாளும் அதற்கிசைந்து, கிடந்தவாறு எழுந்திருந்து பேச முற்பட்டார். அக்காரணம் பற்றியே ஆராவமுதப் பெருமாளுக்கு 'உத்தான சாயி' என்ற பெயர் ஏற்பட்டது. (61).

" கரண்டம் ஆடு பொய்கையுள்
கரும் பனைப் பெரும்பழம்
புரண்டு வீழ வாளைபாய்
குறுங் குடி நெடுந்தகாய்!
திரண்ட தோள் இரணியன்
சினங்கொள் ஆகம் ஒன்றையும்
இரண்டு கூறு செய்துகந்த
சிங்கம் என்பது உன்னையே!

(பொழிப்புரை) நீர்க் காக்கைகள் உலாவுகின்ற நீர் நிலைகளில் கறுத்த பெரிய பனம் பழங்கள் விழுந்து புரள, அவற்றைக் கண்டு அஞ்சி வாளை மீன்கள் துள்ளி ஓடி ஒளிக்கின்ற வளம் நிறைந்த திருக்குறுங்குடி என்னும் தலத்தில் விளங்குகின்ற நெடுந்தகையே! திரண்ட தோள்களையுடைய இரணியனது பகைமை மிகுந்த மார்பு ஒன்றினையே இரண்டு கூறுகளாகப் பிளந்து மகிழ்ச்சியுற்ற நரசிங்கம் என்று கூறுவது உன்னையோ !

*(குறிப்புரை)*:—கரண்டம்-நீர்க் காக்கை; நெடுந்தகை-பெருந்தன்மை பொருந்தியவன்; சினம்-பகைமை; ஆகம்-மார்பு; " உன்னையே " என்பதில் ஏகாரம் வினா.

திருக்குறுங்குடி என்னும் தலத்தில் உள்ள திருக் குளத்திற்குக் 'கரண்டம் ஆடு பொய்கை' என்று இப்பாடலால் பெயர் வழங்குகிறது. மேலும் இப்பாடலில் 'கரும் பனைப் பெரும் பழம்' என்று ஆழ்வார் அருளிச் செய்திருப்பதற்கு ஏற்ப, அத் திருக்குளத்தின் கரையில் ஒரு பனைமரம்

இன்றும் விளங்கி வருகின்றது. மென்மைத் தன்மை உடைய உன்னைக் கொடிய முரட்டுச் சிங்கம் என்று கூறுவது பொருந்துமோ ? என்பது கருத்து. (62)

"நன்றிருந்து யோக நீதி
நண்ணு வார்கள் சிந்தையுள்
சென்றிருந்து தீவினைகள்
தீர்த்த தேவ தேவனே!
குன்றிருந்த மாடம் நீடு
பாடகத்தும் ஊரகத்தும்
நின்றிருந்து வெகஃக்கணைக் கிடந்தது
என்ன நீர்மையே!

(பொழிப்புரை) யோகப் பயிற்சிக்குரிய நிலைகளில் நன்றாக நிலைத்திருந்து யோகமாகிய நெறி முறையைக் கடைப்பிடித்து ஒழுகுகின்ற ஞானிகளின் உள்ளத்தினுள்ளே சென்று தங்கியிருந்து, அவர்களின் தீவினைகளைப் போக்கி யருளிய தேவர்களுக்கெல்லாம் மேலான தேவனே! மலைகள் போல அமைந்த பெரிய மாட மாளிகைகளையுடைய திருப்பாடகம் என்னும் தலத்திலும், திருவூரகம், திருவெஃகா என்னும் தலங்களிலும் தேவரீர் முறையே இருந்தும் நின்றும் கிடந்தும் எழுந்தருளியிருப்பது எத்தகைய நீர்மையுடையது!

(குறிப்புரை):—பாடகம்ஊரகம்வெஃகணைஎன்னும் தலங்கள் காஞ்சிபுரத்தில் உள்ளன. பாடகம் என்பது பாண்டவ தூதர் கோயில். ஊரகம் என்பது உலகளந்த பெருமாள் கோயில். ஆதி சேடனைக் குறிக்கும் உரகம் என்னும் சொல் ஊரகம் என நீண்டுள்ளது. வெஃகணை என்பது வேக அணை என்பதன் திரிபு. இதனை வடமொழியில் வேகா ஸேது என்பர். இத்தலம் யதோக்தகாரி ஸந்நிதி என்றும், சொன்ன வண்ணம் செய்த பெருமாள் கோயில் என்றும் வழங்கப் பெறும்.

"ஆடவர்கள் எவ்வா றகன்றொழிவார் வெஃகாவும்
பாடகமும் ஊரகமும் பஞ்சரமா—நீடியமால்
நின்றான் இருந்தான் கிடந்தான் இதுவன்றோ
மன்றார் மதிற்கச்சி மாண்பு."

என்னும் பாடல் ஈண்டு நினைவு கூர்ந்து இன்புறத் தக்கது.

மேற்பாடலில் தன் மென்மையைக் கருதாமல், அன்பனாகிய பிரகலாதனைக் காத்தற்கு அருள் காரணமாகக் கொடிய நரசிங்காவதாரம் எடுத்ததைக் குறிப்பிட்டார். இப்பாடலில் எல்லாவகையாலும் தன்னை மறந்து புறக்கணித்து ஒழுகும் உலக மக்களைக் காத்தற்காகத் தன் மேன்மையைப் பாராது, கோயில்களில் இருந்தும் நின்றும் கிடந்தும் எழுந்தருளி விளங்கும் இறைவனின் பெருங் கருணையை வியக்கின்றார்.

"நின்றது எந்தை ஊரகத்து;
இருந்தது எந்தை பாடகத்து;
அன்று வெஃகணைக் கிடந்தது,
என் இலாத முன்எலாம்;
அன்று நான் பிறந்திலேன்;
பிறந்தபின் மறந்திலேன்;
நின்றதும் இருந்ததும் கிடந்ததும்
என் நெஞ்சுளே!

(பொழிப்புரை) எமது தந்தையாகிய பெருமான் நின்றருளியது திருவூரகத்தில்; வீற்றிருந்தது திருப்பாடகத்தில்; பள்ளி கொண்டருளியது திருவெஃகாவில்; இவையெல்லாம் நிகழ்ந்தது நான் பிறவாதிருந்த முற்காலங்களிலேயாம். அப்போது நான் அறிவாகிய பிறவியைப் பெற்றேன் இல்லை. அது பெற்ற பின்னை யான் மறக்கவில்லை. ஆதலின் ஊரகம் பாடகம் வெஃகணை என்னும் தலங்களிற் போல, நீர் நின்றதும் இருந்ததும் கிடந்ததும் என் நெஞ்சின் உள்ளேயே யாகும்.

*(குறிப்புரை)*:—உலகத்தில் ஒருவன் மற்றொருவனுக்குக் கடன் கொடுத்திருந்தால், அக்கடனைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்காகப் பல வகைகளில் முயற்சி செய்தலைக் காண்கின்றோம். அதுபோல எம்பெருமானும் உலக மக்கள் தனக்குச் செலுத்துதற்குரிய கைங்கரியம் ஆகிய கடனைத் தான் பெறுதற் பொருட்டும், அடியவர்களைப் பாதுகாத்தருளுதற் பொருட்டும் நின்றும் இருந்தும் கிடந்தும் முயலும் கருணையை வியந்தவாறு !

"நிற்பதும் ஓர் வெற்பகத்து,
இருப்பு விண், கிடப்பதும்
நற்பெருந் திரைக் கடலுள்
நான் இலாத முன்எலாம் ;
அற்புதன் அநந்த சயநன்
ஆதி பூதன் மாதவன்
நிற்புதும் இருப்பதும் கிடப்பதும்
என் நெஞ்சுளே."

(பொழிப்புரை) அற்புத குணங்கள் பல உடையவனும், அனந்தன் என்னும் ஆதி சேடன் மீது பள்ளி கொள்பவனும், உலகப் படைப்பிற்கு முதற்காரணமானவனும், திருமகளின் கணவனுமாகிய பெருமான், ஒப்பற்ற திருவேங்கட மலையில் நின்றருள்வதும், விண்ணுலகம் என்னும் திருநாட்

டில் வீற்றிருப்பதும், நல்ல பெரிய அலைகளையுடைய திருப்பாற்கடலிற் பள்ளி கொண்டருள்வதும், யான் அறிவின்றிக் கிடந்த முற்காலத்திலேயாம். இப்பொழுதோ என்றால், எம்பெருமான் நிற்பதும் கிடப்பதும் என் நெஞ்சிலேயேயாகும்.

(குறிப்புரை).—வெற்பு-மலை; திருவேங்கடம்; விண்-வானுலகம்; வைகுந்தம்; ஆதி பூதன்-உலகின் தோற்றத்திற்கு முதல்வனாக விளங்குபவன்; மாதவன்-திருமகள் கேள்வன்.

"இன்று சாதல், நின்று சாதல்
அன்றி, யாரும் வையகத்து
ஒன்றி நின்று வாழ்தல் இன்மை
கண்டும், நீசர் என்கொலோ?
அன்று பார் அளந்த பாத
போதை உன்னி வானின்மேல்
சென்று சென்று தேவராய்
இருக்கி லாத வண்ணமே!

(பொழிப்புரை) பிறந்த கணத்திலேயே இறந்து போதல், அல்லது சிலகாலம் இருந்து பின்னர் இறந்து போதல் என்னும் இவ்விரண்டில் ஒன்று தவிர, எத்தகையவர்களும் இவ்வுலகத்தில் நிலையாகச் சேர்ந்திருந்து வாழ்தல் இல்லாமையைத் தெரிந்து வைத்திருந்தும், அறிவில்லாத நீசர்கள், முற்காலத்தில் உலகத்தையளந்த இறைவனின் திருவடி மலர்களைச் சிந்தித்து அர்ச்சராதி மார்க்கத்தால் சென்று பரமபதத்தில் ஏறப்புகுந்து, நித்திய சூரிகளாக இருக்க முயலாத தன்மை ஏனோ ?

(குறிப்புரை):—உலக வாழ்வின் நிலையாமையைக் கண் கூடாகக் கண்டறிந்து இருந்தும், மக்கள் இறைவனின் அருளைப் பெற முயற்சி செய்யாமல் வீணில் கெடுகிறார்களே என இரங்கியவாறு.

"சண்ட மண்டலத்தின் ஊடு
சென்று வீடு பெற்றுமேல்
கண்டு வீடிலாத காதல்
இன்பம் நாளும் எய்துவீர்!
புண்ட ரீக பாத புண்ய
கீர்த்தி நும் செவி மடுத்து
உண்டு நும் உறுவினைத்
துயருள் நீங்கி உய்மினோ!

(பொழிப்புரை) சூரிய மண்டலத்தின் நடு வழியாகப் போய்ப் பரமபதத்தை அடைந்து, அவ்விடத்தில் ஒரு காலத்தும் அழிவில்லாத பக்தியின் பயனான பணிவிடையில் இன்பத்தை நிலையாகப் பெற விருப்ப முடையவர்களே! தாமரை போன்ற திருவடிகளையுடைய இறைவனின் புண்ணியம் மிகுந்த புகழ்களை உங்களுடைய காதுகளிலே நிரம்பத் தேக்கி அநுபவித்து உங்களுடைய கொடிய வினைகளின் பயனான துன்பங்களிலிருந்து விடுபட்டு ஈடேறுவீர்களாக.

(குறிப்புரை):—சண்டன்-சூரியன்; புண்டரீகம்-தாமரை; காதல்-பக்தி; இன்பம்-கைங்கர்ய சுகம்.

உலக மக்களின் நிலைமை குறித்து வருந்தி, ஆழ்வார் இது முதல் ஏழு பாடல்களால் உலக மக்களுக்கு உபதேசம் செய்கின்றார். (67)

"முத்திறத்து வாணியத்து,
இரண்டில் ஒன்றும் நீசர்கள்
மத்தராய் மயங்கு கின்றது
இட்டதில் இறந்து போந்து,
எத்திறத்தும் உய்வதோர்
உபாயம் இல்லை; உய்குறில்
தொத்து இறுத்த தண்டுழாய்
நன்மாலை வாழ்த்தி வாழ்மினோ!

(பொழிப்புரை) சாத்விகம் இராஜசம் தாமசம் என்னும் மூன்று வகைப்பட்ட பயன்களுக்குள், சாத்விகம் தவிர்த்த மற்ற இரண்டு பயன்களில் விருப்பமுடைய நீசரான மனிதர்கள், முன் பிறவியில் செய்த வினைகளின் பயனை ஒழித்து, அவற்றை அனுபவிப்பதற்காக மேற்கொண்ட உடம்பை முடித்து, மீண்டும் இவ்வுலகில் வந்து பிறந்து, 'உடலே உயிர்' என்கின்ற மயக்கத்தை உடையவர்களாய் மயங்கும் தன்மை என்னே! இத்தகையவர்கள் ஈடேறத் தகுந்த ஓர் உபாயம் எவ்வழியாலும் இல்லை. உய்வதற்கு விருப்பமுண்டாயின் கொத்துக் கொத்தாகச் செறிந்த குளிர்ந்த திருத்துழாய் மாலையை அணிந்த நல்ல திருமாலைத் துதித்து வாழ்ச்சி பெறுவீர்களாக.

(குறிப்புரை):—முத்திறம்-மூவகைக் குணங்கள்; வாணியம்-பயன்கள்; மத்தர்-மயக்க அறிவினையுடையவர்கள்;

திருத்துழாய் மாலை யணிந்த திருமாலை வாழ்த்தி வாழுமின் என்பது கருத்து. (68)

" காணிலும் உருப் பொலார்;
செவிக்கு இனாத கீர்த்தியார்;
பேணிலும் வரம் தர
மிடுக்கு இலாத தேவரை
ஆணம் என்று அடைந்து வாழும்
ஆதர்காள்! எம் ஆதிபால்
பேணி நும் பிறப்பு எனும்
பிணக்கு அறுக்க கிற்றிரே?

(பொழிப்புரை) காண்பதற்கும் உருவம் அழகில்லாதவர்கள்; கேட்பதற்கும் இனிமையில்லாத புகழை உடையவர்கள்; வழிபட்டாலும் வரம் தருவதற்கு ஆற்றல் இல்லாதவர்கள் ஆகிய பிற தெய்வங்களை அடைக்கலம் என்று புகல் அடைந்து கெட்டுப் போகின்ற குருடர்களே! எம்முடைய முதல்வனாகிய திருமாலினிடத்தில் வழிபாடுகளைச் செய்து உங்களுடைய பிறப்பு என்கின்ற பெரிய புதரை அறுத்து ஒழிக்க முற்படுவீர்களாக.

(குறிப்புரை):—உரு-வடிவம்; பொலார்-அழகில்லாதவர்கள்; கீர்த்தி என்றது இகழ்ச்சிக் குறிப்பு; பேணுதல்-வழிபடுதல்; மிடுக்கு-ஆற்றல்; ஆணம்-அடைக்கலம்; ஆதர்கள்-குருடர்கள், அறிவில்லாதவர்கள்; வாழும் என்பது கேடுறும் என்னும் பொருளில் வந்தது; விபரீத இலக்கணை. பிணக்கு-பெரும் புதர்;

இப்பாடற்குத் திருமால் காண்பதற்கு இனியஅழகுடையவர்; செவிக்கினியகீர்த்தியுடையவர்; வழிபடுவோர்க்கு வரம் தரும் மிடுக்குடையவர்; அவரை வழிபட்டால் நாம் பிறப்பு இறப்பை அறுத்துக் கொள்ளலாம் என்பது கருத்து. (69)


" குந்த மோடு, சூலம் வேல்கள்
தோமரங்கள் தண்டு வாள்
பந்தம் ஆன தேவர்கள்
பரந்து வானகம் உற,
வந்த வாணன் ஈரைஞ் ஞூறு
தோள்களைத் துணித்த நாள்
அந்த அந்த ஆகுலம்
அமரரே அறிவரே!

(பொழிப்புரை) குந்தம் சூலம் வேல் தோமரம் தண்டு வாள் என்னும் ஆயுதங்களுடன் பெருந்திரளாக உள்ள பிற தெய்வங்கள், பல திசைகளிலும் சிதறிப் போய்த் தங்கள் தங்கள் மேல் உலகங்களைச் சென்று அடைந்து ஒளிந்து கொள்ள, எதிர்த்து வந்த வாணன் என்னும் அசுரனுடைய ஆயிரந் தோள்களையும் அறுத்துத் தள்ளிய காலத்தில், அத்தெய்வங்கள் அடைந்த முடிவில்லாத துன்பங்களை அந்த அந்தத் தெய்வங்களே அறிவார்கள்.

(குறிப்புரை):—குந்தம்-ஈட்டி; தோமரம்-இரும்பு உலக்கை; தண்டு-கதை; பந்தம் ஆன-பற்றியிருந்த, சம்பந்தம் உடைய; பரந்து-பரவி, சிதறி; ஆகுலம்-துன்பம்; அமரர்-தேவர்கள்.

மேற்பாடலில் பிற தெய்வங்களை வரம் தர மிடுக்கு இலாத தேவர் என்று குறிப்பிட்டதனை, இப்பாடலில் ஆழ்வார் விவரித்தருளினர். திருமாலின் ஆற்றலையும் சிறப்பையும் வியந்தவாறு. (70)

—ஆசிரியர்.



திருச்சி மலைக்கோட்டை மகா கும்பாபிஷேகக் காட்சி
(29—8—66)

# தொழப் படுவார் இல்லை

வயிநாகரம் திரு. வே. இராமநாதன் செட்டியார்,
(தத்புருஷ தேசிகர்), தேவகோட்டை.

"தலைமை" என்பது, பல தகுதிகளில் அமைவது. குடும்பத் தலைவர் முதல் குடியரசுத் தலைவர் வரை பலவேறு தலைவர்கள் இந் நிலவுலகத்தில் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் தலைவர் என்ற பெயரொற்றுமை ஒன்றை மட்டும் கொண்டு ஒரே தகுதி யுடையவராக நாம் கருதுவதில்லை. அவர்களும் தங்கள் தங்கள் தலைமை செல்லுதற்குரிய எல்லைகளுக்குட் பட்டே தத்தம் ஆணைகளைச் செலுத்தி வருகிறார்கள்.

கிராமாதிகாரிக்கு அவரது கிராம எல்லையளவிலும், தாலுகா அதிகாரிக்குப் பல கிராமங்களடங்கிய அவரது தாலுகா அளவிலும், ஜில்லா அதிகாரிக்குப் பல தாலுகாக்கள் அடங்கிய அவரது ஜில்லா அளவிலும் தலைமை செல்லும் எல்லைகள் உள்ளன. ஆனால் கிராமாதிகாரியின் தலைமை தாலுகா அதிகாரியின் தலைமைக்கு அடங்கிய தென்பதும், அதுபோல அவரது தலைமை ஜில்லா அதிகாரியின் தலைமைக்கு அடங்கிய தென்பதும் கண்கூடு.

பாரத நாடு, பல ஜில்லாக்களைக் கொண்ட பல மாநிலங்களை உடையது. இந்த நிலவுலகம் பாரத நாடு போன்ற பல நாடுகளைக் கொண்டிருக்கின்றது. இந் நிலவுலகத்தைப் "பூமண்டலம்" என்று சொல்லுகின்றோம். இப் பூமண்டலத்தைப் போல இன்னும் எத்தனையோ கோடிக் கணக்கான மண்டலங்கள் வான வெளியில் சுழன்று கொண்டிருக்கின்றன. இம் மண்டலங்களைப் பற்றிய ஆராய்ச்சி மேலை நாட்டுப் பேரறிஞர்களால் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து செய்யப் பெற்று வருகிறது. இதுவரை அவர்கள் பெருமுயற்சி செய்து கண்டுபிடித்து வெளியிட்டிருக்கிற உண்மைகள், நம் நாட்டு மெய்ஞ்ஞானிகள் உணர்ந்து கூறியுள்ள உண்மைகளில் கோடியில் ஒரு பங்கு அளவில் கூட இல்லையென்று துணிந்து சொல்லலாம்.

நம் நாட்டு மெய்ஞ்ஞானிகளது அருளாற்றலால் வெளிப்பட்ட பேருண்மைகளை அறிந்து பிற நாட்டுப் பேரறிஞர்கள் பெருவியப்புக் கொண்டு நம்மவர்களுக்கு மண்டியிட்டு வணக்கம் செலுத்தி வருவதையும், அதே வேளையில் அப்பிற நாட்டவரது கடைபோகா ஆராய்ச்சித் திறத்திற்குக் கருத்தழிந்து நம் நாட்டவர் அவரை வானளாவப் புகழ்ந்து பாராட்டி வருவதையும் பார்க்கும் பொழுது, ஒருபால் மகிழ்வும் ஒருபால் இரக்கமும் உண்டாகின்றன.

நமது ஞானாசிரியராகிய மாணிக்கவாசக சுவாமிகள் தமது திருவண்டப் பகுதித் தொடக்கத்தில்

" அண்டப் பகுதியின் உண்டைப்பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங்காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட
விரிந்தன "

என்று அண்ட கோடிகளின் உண்மையை அறிவுறுத்துகின்றார். தூலமாகப் புலப்படுகின்ற கோள் மண்டலங்கள், உடு மண்டலங்களைப் பற்றிய உண்மைகளைப் பௌதிகக் கருவிகளைக்கொண்டு காண முற்பட்டுப் பெரும்பாலும் தோல்விகளையே கண்டு வருகிற விஞ்ஞானம், சூக்குமமாகவும் அதி சூக்குமமாகவும் இருக்கின்ற எண்ணற்ற மண்டலங்களின் இயல்புகளை எந்நாளிலும்

முற்ற முடியக் காணப் போவதில்லை என்பது உறுதி.

இங்ஙனம் கணக்கிலடங்காது பலவாக விரிந்து கிடக்கும் தூல சூக்கும மண்டலங்கள் பலவற்றைக் கொண்ட அண்டபேரண்டங்கள் அனைத்திற்கும் தனித் தலைவராக வீற்றிருந்து அவ்வண்டங்கள் முதல் ஒன்றனுள் ஒன்ருக அடங்கியிருக்கும் பெரியதும் சிறியதுமான எல்லா இடங்களுக்கும் அவ்வவற்றிற்குத் தக்க தலைவர்களை நியமனம் செய்துவைத்து அவரனைவருக்கும்மேலானவராக எழுந்தருளியிருந்து, அத் தலைவரெல்லாரும் கால எல்லைக்குட்பட்டவராயிருந்து தத்தம் பதவிகளில் ஆணை செலுத்தி நிற்க, காலம் கடந்த பெருந்தலைவராக முதலும் முடிவும் இல்லாது விளங்குபவன் சிவபெருமான் ஒருவரே யாவர்.

முதற் பெருங் கடவுள் சிவபெருமான் ஒருவரே யென்பதும், அவரை வழிபடும் மெய்யடியார்களது மூலம் ஒன்றே யென்பதும், வேதாகமங்களில் முடிந்த முடிபுகளாய் உரைக்கப் பெற்றவை. இதனையே "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்று திருமந்திரமாலை அறிவுறுத்துகின்றது. இவ்வுண்மை யறியாது இம்மந்திரத்திற்குப் பொருள் கூறுவார் கூற்று, ஆரவார நீர்மையதான போலிக் கூற்றேயாகும்.

மேலும் தலைமைக்குரிய இலக்கணங்களைத் தெரிந்துகொண்டு அவ்விலக்கணங்களை யுடையார் யாவரெனத் தேர்ந்தறிய முற்படாது, தலைவரென ஒருவரை நியமனம் செய்து கொண்டு அவர்பால் அத் தலைமை யிலக்கணத்தைத் தமது சதுரப்பாட்டினுற் புகுத்தச் சமயவாதிகளனைவரும் தலைப்பட்ட பெருங் குறையினுலேயே தொன்று தொட்டுச் சமய நெறி, கடவுளுண்மை ஆகியவற்றில் குழப்பங்கள் உண்டாகி நீங்காது நிலைபெற்று விட்டன.

இக் குழப்பங்களை நீக்கிக் கொள்வதற்கு, மெய்ஞ்ஞானியர்கள் அருளிச் செய்த அறிவு நூற் பொருள்களை மரபு வழுவாது தெரிந்து கொள்ளுவது மிக மிக இன்றியமையாததாகும். சிவபெருமானது ஒப்பற்ற தலைமைத் தன்மையைத் திருமூல தேவ நாயனுர் தமது திருமந்திர மாலைக் கடவுள் வாழ்த்தில்

"பொன்னுற் புரிந்திட்ட பொற் சடை என்னப்
பின்னுற் பிறங்க இருந்தவன் பேர்நந்தி
என்னுல் தொழப்படும் எம்மிறை மற்றவன்
தன்னுல் தொழப்படு வாரில்லை தானே"

என்ற ஒன்பதாம் திருப்பாடலில் உணர்த்தியருளுகின்ருர்.

சிவபெருமானுக்கு இரண்டு வடிவங்கள் உள்ளன. ஒன்று சொருப வடிவம். மற்றென்று தடத்த வடிவம். முன்னையது அவருக்கு இயல்பாயமைந்தது. பின்னையது ஆன்மாக்களுக்கு அநுக்கிரகம் செய்வதற்காக அவர் எடுத்துக் கொள்வது. முன்னையது அநுக்கிரகம் பெற்ற மெய்ஞ்ஞானிகளால் உணர்ந்து அபநுவிக்கப் பெறுவது. பின்னையது அநுக்கிரகம் பெற வேண்டிய பக்குவான்மாக்களால் வழிபாடு செய்யப் பெறுவது. முன்னையது அருவத்தையும் கடந்தது. பின்னையது அருவம், அருவுருவம், உருவம் ஆகிய நிலைகளில் வருவது.

சிவபெருமானது உருவத் திருமேனியில் வேறு எவருக்குமில்லாத அவருக்கே உரிய அடையாளங்கள் சில இருக்கும். அவையனைத்தும் அவரது முதற் பொருளுண்மையை உணர்த்த அமைந்தவை. அவற்றுள் ஒன்று அவரது திருச்சடை. அது, பொன்னிறம் உடையதும் பின்னே தாழ்ந்ததுமாகும்.

"பிறப்பில் பெருமானைப் பின்றுழ் சடையானை
மறப்பி லார்கண்டீர் மையல் தீர்வாரே"

என்பது ஆளுடைய பிள்ளையாரின் அருள் வாக்கு.

இப் பின்தாழ் சடை, பிறப்பில் பெருமானுக்கே உரிமையானது. அச் சடை பொற் கம்பிகளால் முறுக்கி விடப்பட்டது போன்ற வண்ணமும் பொலிவும் உடையது. பிறப் பிறப்பு உடையவைகளாகிய உயிர்களிடத்து எப்பொழுதும் குறைபாடுகள் இருக்கும். சிவபெருமான் எந்நாளிலும் எந்தக் குறைபாடும் இல்லாது விளங்குபவர். "குறைவிலா நிறைவே" என்று அவரை அழைப்பார் மணிவாசகப் பெருந்தகை. "நந்தி" என்னும் சொல்லுக்குக் "குறைவற்றவன்" என்பதே பொருள்.

பின் தாழ் சடையானைத் திருமேனி தாங்கி விளங்கும் பெருமான் நந்தி என்னும் திருப் பெயர் பூண்டு, அநாதி காலந்

தொட்டு ஆன்மாக்களுக்கு அருள் புரிந்து வருகின்ருனென்பது இத்திருமந்திரத்தின் முன்னிரண்டு வரிகளால் உணர்த்தப் பெறுகின்றது. நாம ரூபங்களில்லாத ஆண்டவன் ஆன்மாக்களாகிய நமக்கு அருள் செய்யும் பொருட்டுப் பல வேறு நாம ரூபங்களைக் கொண்டு எழுந்தருளி வருகின்ருன். இதனையே

" ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லார்க் காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ "

என்ற திருவாசகம் புலப்படுத்துகின்றது. "நந்தி" என்னுந் திருப் பெயர் பூண்டு உருவத் திருமேனி தாங்கிச் சிவபெருமான் வீற்றிருப்பது, உயிர்களனைத்தும் அவனைத் தொழுது இன்பப் பேறு பெறுதற்காகவே யாம். இதனை "என்னல் தொழப்படும் எம் இறை" என்று மூன்ருவது வரியில் உணர்த்தியருளுகின்ருர்.

சிவபெருமானை வழிபடுபவர் பல திறப்பட்டவர். "சமரச வாதிகள்" என்று தங்களைச் சொல்லிக்கொண்டு விலைமகளிரைப் போலக் கடவுள் என்ற பெயரால் யார் எதைக் குறிப்பிட்டாலும், அவையனைத்தையும் சமமாகக் கருதித் தொழுபவர் முதல், சிவத்துக்கு மேல் தெய்வம் வேறில்லை என்பதை உணர்ந்து குலமகளிரைப்போல மதுமலர் நற் கொன்றையான் அடியலாற் பேணுத சித்தாந்த சைவர் வரை, அனைவரும் சிவ வழிபாடு செய்பவர்களே. இவர்கள் அனைவருக்கும் சிவபெருமானொருவனே இறைவனுயிருக்கின்ருனென்பதை "எம் இறை" என்று பன்மை வாய்பாடு புணர்த்திக் கூறியருளினுர்.

எல்லார்க்கும் இறைவனுன சிவபெருமான் என்னல் பொது நீக்கித் தொழப்படும் பொற்புடையவனுக விளங்குகின்ருனென்று ஆசிரியர் திருமூல தேவர் கூறியருளித் தமது ஒருமை வழிபாட்டு மேன்மையை நமக்குப் புலப்படுத்தினர். பொது வழிபாட்டிற் செய்யும் சிவ வழிபாடு சிவபெருமானது இறைமைத் தன்மையை ஒரோ வழியன்றி முழுமையும் ஏற்றுக் கொள்ளாத தாதலின் அதனை அறிவுடையோர் விரும்பார். "பொது நீக்கித் தனை நினைய வல்லோர்க் கென்றும், பெருந் துணையை" என்ற அப்பரடிகள் திருவாக்கு இங்கே நினைவு கூரத் தக்கதாகும்.

எல்லா உயிர்களாலும் தொழப்படுகின்ற சிவபெருமான் மற்றெவரையும் தொழுபவனல்லன். எனவே அவனுக்கு மேலாக எவரும் இலர் என்பது தெளிவு. "சைவத்தின் மேற்சமயம் வேறிலை. அதிற்சார் சிவமாம் தெய்வத்தின்மேற் றெய்வம் இல்" என்பார் சைவ எல்லப்ப நாவலர்.

ஒருவர் பிறிதொருவரைப் பணிவதற்குள்ள காரணங்கள் பலவற்றுள் முன்னிடம் பெறுவது பின்னவரிடத்துள்ள தலைமைத்தன்மை. அடுத்தது முன்னவர் கொண்ட விருப்பத்தை நிறைவேற்றிக் கொடுக்குந் தகுதி.பின்னவரிடம் இருப்பது இவற்றை யொட்டி இன்னும் சிலவும் இருத்தல் கூடும். மேலே கூறிய இரண்டு காரணங்களை அடிப்படையாகக் கொண்டே தேவரும் மூவரும் சிவபெருமானை வழிபடுகின்ருர்களென்று திருவாசகம் கூறுகின்றது. அது "வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் மனம்நின்பால், தாழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மையெல்லாம் தொழவேண்டி" என்பதாகும். இதனையே "தொழப்படும் தேவர் தொழப்படுவானை" என்று அப்பரடிகள் அருளிச் செய்கின்ருர்கள்.

சிவபெருமானொருவனே எல்லாச் செல்வங்களையும் உடையவன். அதனுலேயே அவனை "ஈசுவரன்" என்று வேதாகமங்கள் துதிக்கின்றன. எல்லாவற்றையும் உடையவனே எதையும் கொடுக்க வல்லவனுவான். அஃதன்றிச் சிலவோ பலவோ உடையவர்களுக்கு அவ்வுடைமை யளவிற்கு மேற்படக் கொடுக்கும் வசதி இருக்க முடியாதல்லவா ? மெய்யடியார்கள் விரும்பி வேண்டும் எதனையும் கொடுக்க வல்ல ஐசுவரியமும் அருளும் சிவபெருமான்பால் இருக்கின்றமையாலேயே தேவரும் மூவரும் இடையீடின்றி அவரை வாழ்த்தி வணங்கிக் கொண்டிருக்கிருர்கள்.

தனக்கு மேலொரு தலைவனில்லாமையினுலும், தனக்கென வேண்டும் பொருள் ஏதும் இல்லாமையினுலும், சிவபெருமானுல் தொழப்படுபவர் வேறெவரும் இலராயினர். "சேர்ந்தறியாக் கையானை" என்பது திருவாசகம். அகில சராசரங்களுக்கும் தனிப்பெருந் தலைவராய் எல்லாத் தலைவராலும் தொழப்படும் முதன்மை பெற்றுச் சிவபெருமான் விளங்கிக் கொண்டிருக்கின்ருரென்பது இத்திருமந்திரத் திருப்பாடலின் தெளிந்த பொருளாகும்.

நலம் பெருகுக.

---

# ஞான சித்தர்களும் சித்த மருந்தும்

**திரு. வி. பலராமையா** அவர்கள், பி.ஏ., பி.எல்.,

பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட், சென்னை-8.

அமுதம் என்ற சிவநீரைப் பருகுவதால் நரைதிரை மாறி நமனையும் வெல்லலாமென்பதை முன் கட்டுரையில் பார்த்தோம். இப்படி நமனை வென்ற ஞான சித்தன் நவக்கிரகங்களின் கோளாறுகளுக்கு அப்பாற்பட்டவன். வேண்டுமாயின் தானே உயிர்களைச் சிருஷ்டிக்க வல்லவன். விசுவாமித்திரன் திரிசங்கு சுவர்க்கத்தைச் சிருஷ்டித்ததுபோல் பல உலகங்களைச் சிருஷ்டிக்க வல்லவர்கள். இறந்தோர்களை உயிர்ப்பிக்க வல்லவர்கள். ஞானசம்பந்தர் அவ்விதம் செய்தாரென்பதை நூல்கள் மூலமாய் அறிகிறோம். அந்த வல்லமையைக் குறித்து நாம் எள்ளளவும் ஐயப்பாடடைய வேண்டியதில்லை. சித்தர்கள் பூத உடலுடன் உலாவலாம். சூக்கும உடலுடன் உலாவலாம். வேறு எந்த உருவத்திலாயினும் உலாவலாம். ஒரே காலத்தில் தங்கள் பூதவுடலுடன் பல இடங்களில் காட்சியளிக்கவல்லவர்கள்.

சித்தர்கள் வழியில் பலர் இந்தப் பூத உடலில் உலாவுகின்றனர். சிலர் ஆரம்பப் பள்ளியிலும், சிலர் உயர்நிலைப்பள்ளியிலும், மற்றும் சிலர் மேல்நாட்டிலும் உள்ளனர். அவர்களில் சிலர் உட்கார்ந்த இடத்திலேயே அமர்ந்திருக்கின்றனர். சிலர் படுத்த படுக்கையாகவே இருக்கின்றனர். சிலர் உலாவிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் தோற்றம் பிச்சைக்காரர்கள் தோற்றம். பித்தர்கள் தோற்றம். யாரையும் எதையும் அவர்கள் கேட்பதில்லை. அன்புடன் ஏதாவது கொடுப்பின் அந்த அன்பைப் பாராட்டப் பெற்றுக்கொள்வர். இப்படிப்பட்ட மஹான்களின் தரிசனம் நம் போன்றவர்களுக்கு மிக்க நலனைத்தரும். வழி தெரியாதவனுக்கு வழி தெரிந்தவன் தான் வழியைக் காட்டமுடியும். பல மஹான்கள் பரமபத நாட்டின் எல்லைகளில் உலாவுகின்றனர். அவர்களில் பலர் நம்மிடம் பேசமாட்டார்கள். சிலர் பேசுவர். பேசினும் நமக்குப் புரியாத ஒரு பாஷையாக விருக்கும். சுவாமியார் என்ன சொல்கின்றாரென்று பக்கத்திலுள்ளோரைக் கேட்கவேண்டிய நிலைமை ஏற்படும். நமக்கு முதலில் அவர்களிடத்தில் வெறுப்புகூடத் தோன்றக்கூடும். லௌகீக ஆசாரம் அவர்களிடத்திலிருக்காது. பல்லைத் துலக்க மாட்டார்கள். குளிக்கமாட்டார்கள். அழுக்கடைந்தகந்தைத்துணிகளையோ, கோணிப்பைகளையோ கட்டிக் கொண்டிருப்பர். சிலர், நிர்வாணமாகவேயிருப்பர்.

இப்படிப்பட்ட பெரியார்களைத் தரிசிப்பதின் பயன்யாது? அவர்கள்தான் பேசுவதில்லையே என்ற ஐயப்பாடுகள் நமக்குள் தோன்றுவது தவறாகாது. நல்லோரைக் காண்பதுவும் நன்றே யென்பது முதுமொழி. சித்தர்கள் பார்வையின் மாத்திரத்திலேயே நம்மைப் பக்குவப்படுத்தக்கூடியவர்கள். மீன் தண்ணீரில் நூல் இழுத்துச் செல்வதுபோல் தன் முட்டைகளை இட்டுக் கொண்டே போகும். அந்த முட்டைகளை அம்மீன் திரும்பிப் பார்த்த அளவில் குஞ்சுகளாகி விடுகின்றன.

“ தண்ணீரி லிருக்கும் மீன்கள் தண்ணீரிற் கருவை வித்திக்
கண்ணினாற் பார்க்கும்போது கயலுருவானாற் போல
நண்ணிய குருவைக் கண்டு நாதனல்லுருவைச் சேர்த்து
விண்ணின் மேனைகை நாதாம் மெல்லடி வெளிபார் நெஞ்சை ”

என்னும் செய்யுள் நமக்கு ஆதாரமாயுள்ளது. ஆகவே சித்தர்கள் பார்வை ஒன்றேபோதும். அந்தப் பார்வையினாலேயே உயர்ந்த தீட்சையுண்டாகின்றது.

மற்றும் அவர்களுடைய உள்ளத்திலே நாம் புகுந்துவிட்டால் போதும். அவர்களை நாம் மறுமுறை சந்திக்காவிடினும் பரவாயில்லை. அவர்கள் இருந்த இடத்திலிருந்தே நம்மைப் பக்குவப்படுத்தக்கூடிய வல்லமையுண்டு.

உதாரணமாக ஆமையானது தன் முட்டைகளைக்குளக்கரையில்வைத்து விட்டு குளத்தின் நீரில் உலாவிக்கொண்டிருக்கும். என்ருே ஒருநாள் தன் முட்டைகளை நினைத்தமாத்திரத்தில் அம் முட்டைகள் குஞ்சுகளாக வெளிப்படுகின்றன வென் பதைக் கீழ்க்கண்ட செய்யுள் விளக்கும்.

" குளத்திலே கிடக்குமாமை குளக்கரை முட்டை யிட்டுக்
குளத்துநீர்க்குள்ளி ருந்து குறிப்புடனி னைக்கும்போது
களத்திலே புதைத்த முட்டை கருவுரு வானுற்போலுன்
உளத்திலே நாகை நாதகுருவறிந்து ணர்வாய் நெஞ்சே "

சித்தர்கள் மக்கள் நலனுக்காகப் பல இடங்களில் பூத உடலுடன்தோன்றி ஆங் காங்கிருக்கும் மக்களுக்கு மருந்து, மந்திரம் முதலியவைகளைத்தந்து, உடற்பிணிகளை யும் மனப்பிணிகளையும் போக்கிவந்தனர். ஓர் மரத்தின்கீழ் உட்கார்ந்து கொள்வர்; அம்மரத்தின் வேர், பட்டை, பூ, காய், பழம், இலை, கொழுந்து முதலியவைகளைப் பிணிக்குகந்தவாறும், வயதிற்குகந்த வாறும் மக்களுக்குக் கொடுத்து மருத்துவம் செய்வர். நாளடைவில் அப்பெரியோர்கள் அவ்விடத்திலேயே சமாதியடையப் போவதாக மக்களுக்குச் சொல்வர். ஓர் குழியில் உட்கார்ந்து மண்மூடச் சொல்வர். ஆனல் அவர்கள் அக்குழியில் பிணமாவதில்லை, அந்த உடலை அங்கு உயிருடன் வைத் திருப்பர். ஒரே காலத்தில் பல இடங்களில் ஒரே உருவத்துடன் சமாதியடைவர். அவ் வுடல் பல்லாயிரக் கணக்கான வருடங்கள் அழியாமலிருக்கும். அதையே பெரியோர் கள் சீவசமாதியென்பர். அம்மரத்தைத் தலவிருட்சமென்பர்.

அந்த சமாதிகளின் பேரிலேயே மக்கள் பெரிய பெரிய ஆலயங்களை அமைத்தனர். நாளடைவில் அப்பெரியோர்களின் முக் கியத்துவத்தைப் பலகாரணங்களினுல் பா ராட்டாமல் அவர்கள் சமாதிகளின்பேரில் பல பலவிதமான உருவங்களையமைத்து அவைகளை வழிபடலாயினர். அந்த ஆல யங்கள் அப்பெரியார்களின் சமாதிக ளென்று சொல்லிக்கொள்வதற்கும் அரு வருப்படைந்தனர். அவ்வாலயங்களைச் சித் தர்கள் சமாதி நிலையங்களென்று குறிப்பிடு வதும் நம் சமுதாயத்துக்குப் புறம்பான தென்று கருதலாயினர்.

அடுத்த கட்டுரையில் சமாதித் தலங் களைப் பற்றியும் எந்தெந்த தலங்களில் எந் தெந்த சித்தர்கள் அடங்கியுள்ளனரென் பதைப்பற்றியும் எழுதுவோம்.

(தொடரும்)

## கோயில் நிகழ்ச்சிகள்

மொண்டிப்பாளையம் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் திருக்கோயில், புரட்டாசித் திருவிழா.

**வருடப் பெருவிழா :**

1. தோப்புத்துறை என்கிற சேதுமாதவபுரம் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில்.
2. ஸ்ரீ நாச்சியார் தேவஸ்தானம், ஸ்ரீ வில்லிபுத்தூர்.
3. கரூர் தான்தோன்றி ஸ்ரீ கல்யாண வெங்கட்டரமண சுவாமி கோயில்.
4. இராமநாதபுரம் சமஸ்தானம் உப்பூர் வெயிலுகந்த விநாயகர் கோயில்.
5. ஸ்ரீ பைராகிமடம் திருவேங்கடமுடையான் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் தேவஸ்தானம்.

இராமநாதபுரம் சமஸ்தானம், ஸ்ரீ அம்பலவாணரின் அபிஷேக விழா மற்றும் ஸ்ரீ அருணகிரி நாதர் இசை விழா.

# விடை தெரியுமா?

1. பாரத தேசத்தின் பல பகுதிகளிலுமாக விளங்கும் பன்னிரண்டு **சோதி லிங்கத் தலங்கள்** யாவை ?

2. **சக்தி பீடத் தலங்கள்** எனப்படுவன எத்தனை ? அவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக.

3. **ஐராவதம், ஐராவணம்** என்பன யாவை ? விளக்குக.

4. முருகனுக்கு உரிய வாகனங்கள் யாவை ? சான்றுகள் தருக.

5. ஆவணி மூலவிழாவின் வரலாறும் தத்துவமும் யாவை ?

6. "மொய்த்தவல் வினையுள் நின்று
மூன்றெழுத் துடைய பேரால்,
கத்திர பந்து மன்றே
பராங்கதி கண்டு கொண்டான்;
இத்தனை யடிய ரானார்க்
கிரங்குமநம் அரங்க னாய,
பித்தனைப் பெற்றும் அந்தோ!
பிறவியுள் பிணங்கு மாறே!"

என்னும் பாசுரத்தில் குறிக்கப் பெறும் **க்ஷத்திர பந்து** என்பவன் யார் ? அவன் வரலாறு யாது ?

7. "பாடிப் பறைகொண்டு யாம் பெறுசம்மானம்,
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே என்றனைய பல்கலனும் யாம் அணிவோம்.............."

எனவரும் திருப்பாவைப் பாடலில், சூடகம் தோள்வளை தோடு செவிப்பூ பாடகம் பல்கலன் ஆடை பாற்சோறு நெய் என்பவற்றால் குறிக்கப்பெறும் நுண் பொருள்கள் யாவை ?

8. **'வியாக்கியான சக்கரவர்த்தி'** என்று யாருக்குப் பெயர்? அவரைப் பற்றிய குறிப்புக்கள் சில தருக.

9. **'பஞ்சவடி'** என்று எவ்வெவற்றிற்குப் பெயர்? விளக்கம் தருக.

10. நம்மாழ்வார்க்கும் சீதைப் பிராட்டிக்கும் இடையே பல ஒப்புமைகள் உண்டு. அவற்றுள் சிலவற்றைக் குறிப்பிடுக.

[விடை : மறுபுறம் காண்க.]

# விடை விளக்கம்

(1) பாரத தேசத்தில் விளங்கும் பன்னிரண்டு சோதி லிங்கத் தலங்கள் பின்வருமாறு :-

1. சௌராட்டிரத்துச் சோமநாதர்
2. ஸ்ரீசைலம் மல்லிகார்ச்சுனர்.
3. உஜ்ஜயினி மகாகாளர்.
4. ஓங்காரத்துப் பரமேசுவரர்
5. கேதாரநாதத்துக் கேதாரேசுவரர்
6. கோதாவரி நதிக்கரையில் டாகினி என்னும் தலத்திலுள்ள பீமசங்காரர்
7. சித்தபூமியில் திகழும் வைத்தியநாதர்
7. தாருக வனத்தின் நாகேசர்.
9. நாசிக்கு அருகில் கௌதமி ஆற்றின் கரையில் விளங்கும் திரி அம்ப கேசுவரர்.
10. இராமேசுவரம் இராமநாதர்
11. காசி விசுவநாதர்.
12. எல்லோராக் குகைக்கு அருகிலுள்ள குஸ்ருணேஸ்வரர்.

(2) சக்தி பீடத் தலங்கள் எனப் புகழ் பெற்று, பாரத தேசத்தில் விளங்குவன அறுபத்து நான்கு என்பர். "சேடு தாங்கும் மூவுலகினிற் சிறந்தன சத்தி பீடம் மூவிருபத்து நான்கு..." என்பது, பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் பாடல்.

1. கொல்லாபுரம்-லட்சுமி
2. மாதுபுரம்-ரேணுகை
3. துளஜாபுரம்-பவானி
4. கரவீரம்-மகிஷாசுர மர்த்தனி
5. இங்குளை-ஜ்வாலாமுகி
6. சாகம்பரி-பிரமரி
7. ஸ்ரீரக்ததந்திகை-துர்க்கை
8. விந்தியாசலம்-விந்தியாவாசினி
9. காஞ்சி-காமாட்சி
10. மானச சரோவரம்-தாட்சாயணி
11. ஸ்ரீ சந்திரலை-கௌசிகி
12. நீலபர்வதம்-நீலாம்பிகை
13. ஸ்ரீநகர்-சாம்புநதேசுவரி
14. நேபாளம்- இரகசிய காளி
15. மதுரை-மீனாட்சி
16. வேதாரண்யம்-சுந்தரி
17. ஜலந்தரம்- திரிபுரமாலினி
18. மகாசலம்-யோகேஸ்வரி
19. அயோத்தி- அன்னபூரணி
20. வைத்தியநாதம்-வகலை.
21. மணித்தீபம்-புவனேசுவரி
22. ஸ்ரீசைலம்-சர்வேசுவரி
23. புஷ்கரம்-காயத்ரி
24. அமரேசம்-சண்டிகை
25. பிரபாசம்-சந்திர பாகை
26. நைமிசம்-தேவி
27. பிருந்தாவனம்-குமாரி
28. திரிபுரா-திரிபுர சுந்தரி
29. சர்வசைலம்-விஸ்வமாதா
30. நந்திபுரம்-நந்தினி
31. நகுலம்-நகுலேஸ்வரி
32. அரிச்சந்திரம்-சந்திரிகை
33. ஸ்ரீகிரி-சாரதை
34. பஞ்சநதம்-திரிசூலி
35. கடகம்-கடகேசுவரி
36. மகாகாளம்-சங்கரி
37. மத்தியமாபீடம்-சர்வாணி
38. கேதாரம்-மார்க்கதாயினி
39. பைரவம்-பைரவி
40. கயை-மங்களை
41. குருக்ஷேத்திரம்-ஸ்தாணுப்ரியை
42. விராடம்-அம்பிகை
43. காளிகட்டம்-ஜெயதுர்க்கை
44. விசுவேசரம்-விஸ்வேசை
45. பிரயாகை-லலிதா
46. மகேந்திரம்-மகேந்திரி
47. காஷ்மீரம்-மாலினி
48. வஸ்திராபதம்-பவானி

49. அர்த்தகோடியை-உருத்திராணி
50. அவிமுக்தம்-விசாலாட்சி
51. மகாலயம்-மகாலயை
52. கோகர்ணம்-பத்ரகாளி
53. மத்திர கர்ணிகம்-பத்திரை
54. காமரூபம்-காமரூபிணி
55. உஜ்ஜயினி-மகாகாளி
56. கமலாலயம்-கமலை
57. சகமண்டலம்-பிரசண்டை
58. குரண்டலம்-திரிசந்திரிகை
59. மாகோடம்-மகுடேஸ்வரி
60. மண்டலேசம்-சண்டிகை
61. காளஞ்சரம்-காளி
62. சங்கு கர்ணம்-தொனிபீடம்
63. தூலகேஸ்வரம்-தூலபீடம்
64. ஞானிகள் இதயம்-பரமேசுவரி பீடம்.

இப்பெயர்கள் தந்திர சூடாமணி, குப்ஜிகா தந்திரம், ஞானர்ணவ தந்திரம், தந்திரசாரம், தேவி பாகவதம் முதலிய சாக்தேய நூல்களில் குறிப்பிடப் பெற்றுள்ளன.

(3) **ஐராவதம்** என்பது தேவேந்திரனுக்குரிய யானை. **ஐராவணம்** என்பது சிவபெருமானுக்குரிய யானை.

"உயிரா வணம் இருந்து உற்று நோக்கி
உள்ளக் கிழியின் உருவு எழுதி
உயிர் ஆவணம் செய்திட்டு உன்கைத் தந்தால்
உணரப் படுவாரோடு ஒட்டி வாழ்தி;
அயிராவணம் ஏறாது ஆன்ஏறு ஏறி
அமரநாடு ஆளாதே ஆரூர் ஆண்ட
அயிராவணமே! என் அம்மானே! நின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லாதாரே."

என்னும் திருநாவுக்கரசர் திருத்தாண்டகத்தால், ஐராவணம் என்பது சிவபெருமானுக்குரிய யானை என்று உணரலாம்.

(4) முருகப் பெருமானுக்குரிய வாகனமாகப் பலரும் அறிந்திருப்பது, மயில் ஒன்றே ஆகும். முருகன் சூரபதுமனைப் போரில் வென்று ஆட்கொள்ளுவதற்கு முன்னரே, கோழிக்கொடியும் மயில் ஊர்தியும் உண்டு. முருகன் சூரபதுமனோடு போர் நிகழ்த்திய காலத்தில் **அக்கினி தேவன்** முருகனுக்குக் கோழிக் கொடியாகவும், **இந்திரன் மயில்** வாகனமாகவும் பணி புரிந்தனர். (குக்குடம்-கோழி).

"ஏவ லோடும் எரிதழற் பண்ணவன்
வாவு குக்குட மாண்கொடி ஆகியே
தேவ தேவன் திருவுருத் தேர்மிசை
மேவி ஆர்த்தனன் அண்டம் வெடிபட."

"இந்திரன் அனைய காலை எம்பிரான் குறிப்பும், தன்மேல்
அந்தமில் அருள் வைத்துள்ள தன்மையும், அறிந்து நோக்கிச்
சுந்தர நெடுங்கட் பீலித் தோகைமா மயிலாய்த் தோன்றி
வந்தனன் குமரற் போற்றி மரகத மலைபோல் நின்றான்"

எனவரும் கந்தபுராணச் செய்யுளால் இவ்வுண்மையை உணரலாம்.

முருகனுக்கு யானை வாகனமும் உண்டு. முருகன் யானை மீது அமர்ந்து விளங்கும் நிலையில் **கஜவாகனர்** எனப் போற்றப்படுவார். முருகனின் யானை வாகனத்திற்குப் **பிணி முகம்** என்பது பெயர். "ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி" என வரும் திருமுருகாற்றுப்படை வரியால் இதனை உணரலாம். பதிற்றுப்பத்து என்னும்

**சங்க நூலில், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் யானைமீது ஏறிப் போர்க்களம்** சென்று, பகைவர்களை அடக்கி வெற்றி கொண்ட திறனைப் புகழ்ந்து பாடிய குமட்டூர்க் கண்ணனார் என்னும் புலவர், யானை மீது இவர்ந்து சூரனைப் பொருது வெற்றி கொண்ட முருகனோடு அவ்வரசனை ஒப்பிட்டுப் பின்வருமாறு பாடியுள்ளார்.

" வரைமருள் புணரி வான்பிசிர் உடைய
வளிபாய்ந்து அட்ட துளங்கிரும் கமஞ்சூல்
நளியிரும் பரப்பின் மாக்கடல் முன்னி
அணங்குடை அவுணர் ஏமம் புணர்த்தும்
சூருடை முழுமுதல் தடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறு ஊர்ந்தாங்கு..."

—பதிற்றுப்பத்து.

இவையே யன்றி முருகனுக்கு **ஆட்டுக்கிடாய்** வாகனமும் உண்டு. நாரதரின் வேள்வியில் தோன்றி, உலகங்களை யெல்லாம் அழித்து உலவி வந்த ஆட்டுக்கிடாய் வடிவம் கொண்ட அசுரனை, வீரவாகு தேவரை அனுப்பிப் பிடித்து வரச் செய்து, முருகன் அதன்மீது இவர்ந்து எண் திக்கும் செலுத்தி விளையாடினான்.

நவையில்சீர் முனிவர் தேவர் நயப்ப நாரதன் என்றுள்ளோன்
புவிதனில் வந்து முற்றப் புரிந்தனன் முன்னர் வேள்வி;
அவர்புரி தவத்தின் நீரால் அன்றுதொட்டு அமல மூர்த்தி
உவகையால் அனைய மேடம் ஊர்ந்தனன் ஊர்தியாக."

—கந்த புராணம்.

" மருப்பாயுந் தார்வீர வாகு—நெருப்பிலுதித்(து)
அங்கட் புவனம் அனைத்தும் அழித்துலவும்
செங்கட் கிடாயதனைச் சென்றுகொணர்ந்(து)—எங்கோன்
விடுக்குதிஎன்(று) உய்ப்ப அதன் மீதிவர்ந்(து)எண்டிக்கும்
நடத்தி விளையாடும் நாதா!......................"

—கந்தர் கலிவெண்பா

இவற்றால் முருகனுக்கு மயிலும், ஆடும், யானையும், வாகனங்களாகும் என்பது தெளியலாம்.

(5) சிவபிரானுக்குரிய விழாக்கள் பலவற்றுள் **ஆவணி மூல விழா** என்பது ஒன்று. சிவபிரான் மாணிக்கவாசகர் பொருட்டு, நரிகளைப் பரிகளாக்கி அற்புதம் நிகழ்த்தி, மதுரைக்குக் கொணர்ந்து அரிமர்த்தன பாண்டியன்பால் விடுத்தது, ஆவணி மூல நாளிலேயே யாகும்.

" அங்கிளர் மதுரையும் பதியி லாவணித்
திங்களின் மூலநாள் செறிதி னத்தினில்
எங்கணு நீறுமஞ் செழுத்து மோங்கிடச்
சங்கர னிடும்பரிச் சமுகம் வந்ததால் ".

—திருவாதவூரடிகள் புராணம்.

மேலும் வைகை யாற்றில் வெள்ளம் பெருக, **வந்தி** அல்லது **செம்மனச் செல்வி** என்னும் அடியவள் பொருட்டுச் சிவபிரான் கூலியாளாக வந்து, அவள் அளித்த

பிட்டை விரும்பி ஏற்று உண்டு, மண் சுமந்து திருவிளையாடல் நிகழ்த்தியதும் ஆவணி மூல நாளை ஒட்டியே யாம். ஆதலின் சிவாலயங்களில் ஆவணி மூல நாளில் சிவ பிரானுக்குப் பிட்டு நிவேதனம் செய்து சிறப்புற வழிபடுவர். தன் அடியவர்கள் பொருட்டு இறைவன் எதனையும் செய்ய முற்படுவான். எத்துணையும் எளிவந்து இன்னருள் புரிவான் என்பதனை, ஆவணி மூலவிழா உணர்த்துகின்றது. எல்லாத் தத்துவங்களுக்கும் மேற்பட்ட நிலையில் உள்ள இறைவன் கீழ்இறங்கிப் போந்து, கீழான மண்ணையும் மேலான தன் தலையில் ஏற்றுச் சுமந்து, தன் அடியவர்க்குத் தான் மிகவும் எளியனாய்த் திகழ்ந்த தன்மையினை, ஆவணி மூல விழா அறிவுறுத்துகின்றது.

"தேவணியும் சிவபெருமான்
சிறந்ததிரு வாசகமாம்
பாவணியும் மணிமொழியார்
பொருட்டாகப் பரிகொணர்ந்த
ஆவணிநன் மூலவிழா
ஆண்டவனின் அருட்டிறத்தைப்
பூவணிய் உணர்த்திநிற்கும்
பொருள்பொதிந்த மாட்சிமைத்தாம்"

(6) க்ஷத்ர பந்து என்பவன் தீயொழுக்கம் மிக்கவன். பலவகைப் பாவங்களைச் செய்தவன். உறவினரால் கைவிடப்பட்ட அவன், காட்டில் திரிந்து வேட்டையாடி உயிர்களைக் கொன்று தின்று, அலைந்து கொண்டு வந்தான். ஒருநாள் காட்டில் கொடிய வெய்யில் வேளையில், அவன் ஒரு முனிவனைக் காண நேர்ந்தது. வழி தவறி வந்து, வெய்யிலாற் களைத்து விடாய் கொண்டு வருந்திய அம் முனிவர்பால், தன்னை யும் அறியாமல் அவனுக்கு ஏதோ ஒரு பரிவும் இரக்கமும் பிறந்தன. அவன் அவரை அணுகி இன்னுரைகள் பல கூறினான். அவர் செல்வதற்குரிய வழியைக் காட்டி உதவினான். நீர் வேட்கை தணித்துக் கொள்ள அருகிலிருந்த குளத்திற்குச் சென்று இறங்கிய பொழுது, தவறி விழுந்திட்ட அவரை எடுத்துக் காப்பாற்றி, நீரும் உணவும் அளித்துப் பல உபசாரங்கள் புரிந்தான். அதனால் மகிழ்ந்த அம்முனிவர் அவனுடைய வரலாறுகளையெல்லாம் வினவினார். அவன் தன்னுடைய கொடிய குணங்களையும், தீய பாவச் செயல்களையும் எல்லாம் ஒளியாமல், உள்ளபடியே கூறினான். அதுகேட்ட முனிவர் எவ்வகையாலேனும் அவனைத் திருத்தி நலம் செய்ய விரும்பினார். அவனோ எவ்வகையாலும் திருந்த இயலாதநிலையில் இருந்தான். முனிவர் அவன்பால் மிகவும் இரக்கங்கொண்டு, 'நீ வேறுஎந்த நல்லொழுக்கத்தையும்கடைப்பிடித்து நடக்க முடியாமற் போனாலும், இறைவனின் கோவிந்த நாமத்தையாவது இடைவிடாமல் சொல்லிக் கொண்டிரு' என்று கூறிச் சென்றார். அவன் அன்று முதல் அத்திருநாமத்தைத் தன் வாழ் நாள் முழுதும் சொல்லிக் கொண்டிருந்து பின்னர் இறந்தான். கோவிந்தநாம சங்கீர்த்தனத்தின் பயனால், அவன் மறுபிறவியில் நற்குலத்தில் பிறந்து நல்லொழுக்க நற்செயல்கள் கடைப்பிடித்து ஒழுகி, இறையருள் பெற்று உய்ந்தான் என்பது வரலாறு. இறைவனின் திருநாம ஜெபத்தால் எத்தகையவரும் ஈடேறலாம் என்பதற்கு இவ்வரலாறு சான்றாகும்.

(7) "கூடாரை வெல்லும் சீர்" என்னும் திருப்பாவைப் பாசுரத்தில், பாவை நோன்பு நோற்கும் பெண்கள், தாம் பெறுதற்குரிய சன்மானமாகச் சூடகம் தோள் வளை முதலிய அணி கலன்களைக் குறிப்பிடுகின்றனர். இவைகள் மேம்போக்காக

நோக்குவோர்க்கு, வெறும் அணிகலன்களின் பெயர்கள் போலக் காணப்படினும், ஆழ்ந்து நோக்குவோர்க்கு உயரிய நுண் பொருள்களை உணர்த்தும்.

1. சூடகம்-திருமண்காப்பு
2. தோள்வளை-திரு இலச்சினை
3. தோடு-திருமந்திரம்
4. செவிப்பூ-த்வயம்
5. பாடகம்-சரம ஸ்லோகம்
6. பல்கலன்-ஞான பக்தி வைராக்கியங்கள்.
7. ஆடை-சேஷத்துவ ஞானம்
8. பாற்சோறு-கைங்கர்யம்
9. நெய் பெய்தல்-பார தந்திரியத்தை வெளியிடுதல்
10. கூடியிருந்து குளிர்தல்-போக்தாவான கண்ணனுடன் போக்யரான கன்னிப் பெண்கள் கலந்து இன்புறுதல்.

(8) "வியாக்கியான சக்கரவர்த்தி" என்பது வைஷ்ணவப் பேருரையாளராகிய ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளை அவர்களுக்கு வழங்கும் பெயராகும். ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் முழுமைக்கும் வியாக்கியானம் வகுத்தருளியவர் இவர் ஒருவரே. இக்காரணம் பற்றியே இவர் இச் சிறப்புப் பெயருக்கு உரியவர் ஆயினர். இவர் சோழ வளநாட்டில் திருவெள்ளியங்குடி என்னும் திவ்விய தேசத்திற்கு அருகிலுள்ள சேங்கநல்லூர் என்னும் தலத்தில், ஆவணி மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் அவதரித்தார். இவர் தம் இயற்பெயர் ஸ்ரீ கிருஷ்ண பாதர், அபயப்பிரத ராஜர் என்பன. தகப்பனுர் யாமுந தேசிகர், தாயார் நாய்ச்சியார் அம்மாள். நஞ்சீயரிடத்திலும், நம்பிள்ளையிடத்திலும் பல கலை நூல்களையும், திருவாய்மொழிப் பொருள்களையும் முறையே கேட்டுணர்ந்தவர். இவர் பூர்வ சிகை அந்தண குலத்தினர். இவர் வாழ்ந்த இடம் ஸ்ரீரங்கம். இவருடைய திருவாராதனம் ஸ்ரீ கிருஷ்ண விக்கிரகம். இவர் அருளிய நூல்கள்:—

(1) திருவாய்மொழி 24000 படி வியாக்கியானம்
(2) திருப்பாவை 3000 படி வியாக்கியானம்
(3) ஏனைய எல்லா ஆழ்வார்களின் அருளிச் செயல்களுக்கும் வியாக்கியானம்.
(4) திரிமத சித்தாந்த சார சங்கிரகம்
(5) பாசுரப்படி ராமாயணம்
(6) கலியன் அருளப்பாடு
(7) பரந்த ரகசியம் விவரணம்
(8) மாணிக்க மாலை
(9) நவரத்தினமாலை
(10) சகல பிரமாண தாத்பர்யம்
(11) உபகார ரத்னம்
(12) கத்யத்ரய வியாக்கியானம்
(13) பரந்தபடி
(14) அபயப் பிரதான வியாக்கியானம்
(15) சரம ரகசியம்
(16) அநுசந்தான ரகசியம்
(17) நிகமனப்படி (முதலியன)

இவருடைய மாணவர்கள் நைனுராச்சான் பிள்ளை, பரகால தாசர், பின் பழகிய பெருமாள் ஜீயர், ஸ்ரீ ரங்காசாரியார் முதலியவர்கள் ஆவர்.

(9) பஞ்சவடி என்பது, அகத்திய முனிவரிடம் வில் முதலிய படைக்கலங்களைப் பெற்ற பிறகு, அவர் தெரிவித்தபடி இராமன் சென்று தங்கியிருந்த இடம். இத்தலம் அகண்ட கோதாவரிக் கரையில் நாசிகாத் திரியம்பகம் என்னும் தலத்திற்கு அருகிலுள்ளது.

ஓங்குமர னோங்கிமலை யோங்கிமண மோங்கிப்
பூங்குலை குலாவுகுளிர் சோலையுடைய விம்மித்
தூங்குதிரை யாறுதவழ் சூழலதொர் குன்றின்
பாங்கருள தாலுறையுள் பஞ்சவடி மஞ்ச !''

—கம்பராமாயணம்.

பஞ்சவடி என்பது, தலைமயிரினால் அகலமாகப் பின்னல் செய்த மயிர்க் கயிற்றுப் பூணூல் வடத்தையும் குறிக்கும். இறைவன் தன் மார்பில் பஞ்சவடி தரித்துள்ளான். 'மயிர்க் கயிறு தரித்தான் தன்னை' 'பஞ்சவடி மார்பினானை' எனத் தேவாரப் பாடல்கள் குறிப்பிடுதல் காணலாம்.

சிவனடியார்களும், மயிர்க்கயிற்றாலியன்ற பூணூல் வடமாகிய பஞ்சவடியை மார்பில் அணிந்து கொள்வது உண்டு. மானக்கஞ்சாறர் என்னும் நாயனார், திருமணக் கோலத்திலிருந்த தமது மகளின் தலை மயிரை அரிந்து, பஞ்சவடியாகப் பயன் படுவதன் பொருட்டு, அடியவர் வடிவில் வந்த சிவபிரானுக்குக் கொடுத்து அருள் பெற்றார் என்பது வரலாறு.

" தஞ்சரணத் திடைப்பணிந்து தாழ்ந்தெழுந்த மடக்கொடிதன்
மஞ்சுதழைத் தெனவளர்ந்த மலர்க்கூந்தற் புறநோக்கி,
அஞ்சலிமெய்த் தொண்டரைப்பார்த்து அணங்கிவளின் மயிர்நமக்குப்
பஞ்சவடிக் காம் என்றார் பரவஅடித் தலங்கொடுப்பார். ''

—பெரியபுராணம்.

(10) நம்மாழ்வார் இறைவனைப் பலவகை நிலைகளில் அனுபவித்து இன்புறும் பேறு பெற்றவர். அப்பலவகை அனுபவ நிலைகளில், சீதைப் பிராட்டியினுடைய அனுபவ நிலையும் ஒன்று.

(1) பிராட்டி இராமனை விட்டுப் பிரிய நேர்ந்தால், அதனைத் தரித்திருக்கும் ஆற்றல் உடையவள் அல்லளாய், நீரில் பிரிந்த மீன் போலத் துடி துடித்துச் சோகம் எய்தும் நிலையினள் ஆவாள். அவ்வாறே ஆழ்வாரும் "மராமரம் எய்த மாயவன், என்னுள் இரான் எனில் பின்னை யான் ஒட்டுவனோ?" என்று அருளிச் செய்து பெருமானைப் பிரிந்து தம்மால் இருக்க இயலாமையைக் குறிப்பிட்டுள்ளார்.

(2) பிராட்டி பெருமானைப் பிரிந்து இலங்கை புகுந்த அளவில், பெருமாள் அவள் பொருட்டு இலங்கை வரையிலும் பின் தொடர்ந்து சென்றார். அவ்வாறே ஆழ்வார் பொருட்டுப் பெருமாள் எதிர் சூழல் புக்குத் தேடிப் பின் தொடர்ந்து போந்து அருள் செய்தார். " எதிர்சூழல் புக்கு எனைத்தோர் பிறப்பும் எனக்கே அருள்கள் செய்ய விதி சூழ்ந்ததால்" என்பது திருவாய்மொழியில் நம்மாழ்வார் வாக்கு.

# கந்தர் கலிவெண்பா

## (கருத்துச் சுருக்கம்)

**முன்னுரை:**

கந்தர் கலிவெண்பா என்னும் நூல், திருச்செந்தூர் முருகப்பெருமான்மீது குமர குருபர சுவாமிகள் பாடியருளியது என்று பலரும் அறிவர். குமரகுருபரர் ஐந்து வயது வரையில் பேசாமல் ஊமைபோல் இருந்து, பின்பு திருச்செந்தூர் முருகப் பெருமான் திருவருளால் பேசும் ஆற்றலும், கல்வி நலனும், பாடும் திறமையும் பெற்றார். அவர் முதன் முதலாகப் பாடிய நூல், கந்தர் கலிவெண்பாவாகும். இந்நூல் முருகன் அடியார்கள் அனைவராலும் பெரிதும் பாரா யணம் செய்யப்பட்டுப் போற்றிவரப்பெறும் மாட்சிமை வாய்ந்தது. இதன்கண் சைவ சித்தாந்தத் தத்துவக் கருத்துக்கள் சுருக்கித் தொகுத்து விளக்கப் பெற்றுள் ளன. முருகனின் திருவுருவச் சிறப்பும் சிறந்த அருட் பண்புகளும் நன்கினிது விவ ரிக்கப்பட்டுள்ளன. முருகனின் வரலாறு கூறும் கந்தபுராணம் முழுவதும், இதன் கண் ஒரு குறிப்பும் விடாமல் சுருக்கித் தரப் பெற்றிருக்கின்றது. இதன் இறுதிப் பகுதி யில், முருகனிடத்தில் அடியார்கள் வேண் டிப்பெறுதற்குரிய பல நலங்களும் ஒருங் கினிதுதொகுத்து உணர்த்தப்பட்டுள்ளன. அளவால் சிறியதாயினும் பொருள் நலத் தாலும், கலை நலத்தாலும், கந்தர் கலி வெண்பாவானது பெருஞ் சிறப்புடைய தாய்க் கவின்மிக்குத் திகழ்கின்றது. இந் நூலின் கருத்துச் சுருக்கத்தை, ஈண்டு இயன்றவரை ஒரு சிறிது காண்போம்.

சிவபிரானும் முருகனும், தந்தையும் மைந்தனும்போல வைத்துக் கூறப்படுவ ரெனினும், அவர்கள் தம்முள் வேற்றுமை உடையவர்கள் அல்லர். சங்கரனே சண் முகன், ஐம்முகச் சிவனே ஆறுமுகச் சிவன் என்பது பெரியோர்கள் கருத்தாகலின், சைவ சித்தாந்த நூல்களில் சிவபிரானுகிய பதிப்பொருளுக்குக் கூறும் இயல்களும் செயல்களுமெல்லாம், ஈண்டு முருகன் மீது வைத்துக் கூறப்பெறுகின்றன.

**சைவசித்தாந்தம் :**

முருகன், பிரமதேவனும், வேதங்களும், நாத தத்துவமும், நாதாந்தமும், போதாந் தமும் காணஇயலாத மெய்ஞ்ஞான வடி வினன். முதல் நடு முடிவைக் கடந்தவன். என்றும் பேரின்பமாய்ப் பேரறிவாய்ப் பேரொளியாய் விளங்குபவன். இயல் பாகவே பாசங்கள் இல்லாதவன். பெயரும் குணமும் உருவமும் அற்று, எங்கும் நிறைந்து ஒளிரும்பரமசிவமாய் நிற்பவன்.

நம்முடைய அறிவிற்கு மேம்பட்டவனுய், படைத்தல் காத்தல் துடைத்தல் மறைத் தல் அருளல் என்னும் ஐந்தொழில்களுக் கும் அப்பாற்பட்டவனுய், மனம் சித்தம் புத்தி அகங்காரம் என்னும் நான்குகரணங் களுக்கும் எட்டாதவனுய், தனது அருளி ஞல், பிரமன் திருமால் உருத்திரன் மகே சன் சதாசிவன் என்னும் ஐந்து வடிவங் கள்கொண்டு, எல்லா உயிர்கட்கும் பற்றுக் கோடு ஆகி, மேலான இன்பத்தைத் தருப வன் முருகனே. குறைவிலா நிறைவாய், என்றும் உள்ளவனுய், பிறத்தல் இறத்தல் நுகர்தல் என்பவைகள் இல்லாதவனுய், இவ்வுலகில் பலவகையான வியக்கத்தக்க இந்திரசாலச் செயல்களைச்செய்து, தான் மயங்காமல் பிறரை மயக்குபவன். எதன் கண்ணும் சாராது சார்வதுபோல் கரு வின்றி நின்ற கருவாய், உருவின்றிநின்று அருளே உருவாய் விளங்குபவன்முருகன். மனம் வாக்கு காயம் என்னும் முக்கரணங்க ளால் வரும் இச்சை ஞானம் கிரியை என் னும் சக்திகளால் முறையே இலயம் போ கம் அதிகாரம் என்னும் மூன்று நிலைகளை உடையவனுக அவன் திகழ்கின்ருன்.

தான் ஒருவனே மகேசன் உருத்திரன் திருமால் பிரமன் என்னும் உருவத் திரு மேனிகள் நான்கும், சிவம்சத்தி நாதம்விந்து என்னும் அருவத் திருமேனிகள் நான்கும், சதாசிவம் என்னும் அருவுருவத் திருமேனி

ஒன்றும் ஆகிய ஒன்பதிலும், உயிர்களின் பக்குவ நிலைக்கு ஏற்ற ஒரு திருமேனியைக் கொண்டு, ஆணவ மலத்தில் அழுந்தி, உலகியல் வாழ்வில் மயங்கிக் கிடக்கும் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னும் மூவகை உயிர்களுக்கும் முத்தியளித்தற்காக மலபரிபாகம் வரும்படி, முருகன் திருக்கடைக்கண் நோக்கம் வழங்கி யருள்கின்ருன்.

இவ்வாறு ஒன்பதுவகைத் திருமேனிகள் தாங்கி, விந்துமோகினி மான் என முறையே வழங்கப்பெறும் சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயைத் தொடர்புற்றுப் பல கடவுளராகி, மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவம் கலை என்னும் ஆறு அத்துவாக்களையும் தனக்குரிய உறுப்புக்களாக முருகன் கொண்டுள்ளான்.

அண்டசம் சுவேதசம் உற்பிச்சம் சராயுசம் என்னும் நால்வகைத் தோற்றம், தேவர் மக்கள் விலங்கு பறவை ஊர்வன நீர்வாழ்வன தாவரம் என்னும் எழுவகைப் பிறப்பு, எண்பத்து நான்கு இலட்சம் கரு வேறுபாடு என்பவற்றுள், ஒன்றில், அனுபவித்துத் தீர்ப்பதற்குரிய வினைக்கு ஏற்பப் பிறவி எடுத்து, காற்ருடியும் சகடக்காலும் போல உழலும்படி, உயிர்களின்பால் முருகன் திரோதான சத்தியைச் செலுத்தியருள்கின்ருன்.

இன்பமே நிறைந்த சுவர்க்கம், துன்பமே நிறைந்த கொடிய நரகம் என்பவற்றில், உயிர்கள் இன்ப துன்பங்கள் நுகருமாறு செய்தருள்பவன் முருகனே. அவ்வாற்ருல் உயிர்களின் வினைகள் பக்குவப்படச் சிறிது நல்லகாலம் வந்ததும், ஏணிப்படிகள்போல அமைந்துள்ள புறப்புறம், புறம், அகப்புறம் என்னும் சமய நெறிகளில் அடைந்து ஈடுபாடு கொள்ளும்படி செய்து, பலவகை விரதங்கள் பிரம்மசரியம் கிரகஸ்தம் வானப்பிரத்தம் சந்நியாசம் என்னும் ஆச்சிரமங்கள் ஆகியவற்றைக் கடைப்பிடிக்கச் செய்து, உயிர்களைப் படிப்படியே சரியை கிரியை யோகம் என்னும் சாதனங்களிற் செலுத்தி, சாலோகம் சாமீபம் சாரூபம் என்னும் பதமுத்தி இன்பங்களை உயிர்கள் பெறுமாறு செய்து உதவுபவன் முருகனே.

பின்னர் உயிர்களுக்கு மெய்யுணர்வாகிய ஞானம் மேலோங்கச் செய்து, மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என்னும் நான்கு வகையான சத்திநிபாத நிலை ஏற்படுதற்கு, இருவினையொப்பு மலபரிபாகம் என்பன நிகழுமாறு செய்து, அறிவுக்கு அறிவாகி, அதற்கும் எட்டாத நெறியில் விளங்கும் தனது மேலான நிலையை விடுத்து, கருணையே வடிவமாய் இவ்வுலகில் ஞானுசிரியனுகப் போந்து ஆட்கொண்டு அருள் புரிகின்ருன் முருகன்.

தன்னுடைய திருநோக்கால் உயிரினங்களின் சஞ்சிதம் என்னும் பழவினையைத் தன் அருட் பார்வையால் போக்கி, தூல தேகத்தின் கருவிகள் அறுபதும், சூக்கும தேகக் கருவிகள் எட்டும், மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆக்ஞை துவாதசாந்தம் என்னும் ஏழு நிலங்களும், மந்திரம் பதம் வன்னம் புவனம் தத்துவம் கலை என்னும் ஆறு அத்துவாக்களும் உயிர்களின் பார்வையிலிருந்து நீங்கும்படி, அறியாமை என்னும் ஆணவ மல மறைப்புத் திரையைக் கிழித்து, அறிவினுல் காண்பதற்குரிய மெய்ஞ்ஞானக் கண்ணைக் காட்டியருள்பவன் முருகன்.

திருவடி ஞானமாகிய சிவஞானத்தால் பதி பசு பாசம் என்னும் மூன்றையும் செவ்விதின் அறியும்படி செய்து, எங்கும் தேங்கி நீக்கமற நிறைந்துள்ள பேரின்ப நிலையைக் காட்டி, போக்கு—வரவு, நினைப்பு—மறப்பு, பகல்-இரவு முதலிய வேறுபாடுகள் நிறைந்த விபரீத ஞானத்தை நீக்கி, உயிர்களுக்கு இறவாத இன்பம் மருவும்படி முருகன் செய்தருள்கிருன்.

## முருகனின் திருவுருவம் :

கேவலம் சகலம் சுத்தம் என்னும்மூவகை அவத்தை நிலைகளையும் போக்கி, முத்தான்மாக்களுடைய கூட்டத்தில் சேர்த்து, பெரிய பரமுத்தியைத் தந்து, அகப்பற்று புறப்பற்றுக்கள் அற்ற இடமே தனது திருவடியாகவும், ஞானமே உருவமாகவும், இச்சை ஞானம் கிரியை என்னும் சக்திகள் திருக்கண்களாகவும், இப்பெரிய உலகமே கோயிலாகவும் நிற்கும் ஒப்பற்ற தனிச் சுடராகத் திகழ்பவன் முருகன். அவனது திருமுன்னிலையில் எல்லா உயிர்களும் வேறுபாடின்றிச் சமமாக விளங்கும்.

நவ மணிகளாலும் பசும் பொன்னுலும் செய்யப்பெற்று மின்னல்போன்று ஒளிவிடுகின்ற திருமுடிகளும்; ஆறு பிறைகளை வரிசையாக வைத்தாற் போன்ற நெற்றிப்

பொட்டழகும்; தாமரை மலர் போன்ற அழகிய பன்னிரெண்டு விழிகளும்; பல சூரியர்கள் ஒருங்கே ஒளிவீசினுற் போலவிளங்கும் மகரக் குழைகளும்; புன்முறுவல் தவழும் உதடுகளும்; பிறவி வெப்பம் தீர்க்கும் இன்சொல்லும் உடையவன் முருகப் பெருமான்.

**ஆறுமுகங்கள்:**

அவனுடைய ஆறு திருமுகங்களில் சூரபதுமனைத் தடிந்து பகைவர்களின் உயிரைப் போக்கி, அழியாத பேரின்ப வாழ்வைத் தருவது, ஒரு திருமுகம்; வேதாகமங்கள் பலவற்றையும் ஐயமின்றி முற்றுப் பெறச் செய்வது ஒரு திருமுகம்; உயிர்களின் மல இருளைப்போக்கிக் கோடிசூரியர்களைப் போல ஒளி வீசுவது ஒரு திருமுகம்; நேசமுடன் போகம் நுகரும் வள்ளி தெய்வயானை அம்மையர்கட்கு மோகம் தருவது ஒரு திருமுகம்; அருள் வேட்கையோடு திருவடியைச் சார்ந்தாரைக்காப்பது ஒரு திருமுகம். இங்ஙனம் ஆறு திருமுகங்களும் கொண்டு விளங்குபவன் முருகன்.

**பன்னிருகைகள்:**

தேன் சொட்டும் கடப்ப மலர் மாலையும், மணம் மிக்க குரவ மலர் மாலையும் அணிந்த பன்னிரண்டு தோள்களை யுடையவன் முருகன். அவற்றுள் தேவர்களுக்கு அமிர்தத்தை அளிப்பது ஒன்று; தேவ மகளிரைத் தழுவி அணைப்பது ஒன்று; மழை பொழியச் செய்து உலக உயிர்களைக் காப்பது ஒன்று; பூமாலைகள் நெருங்க அணிந்திருப்பது ஒன்று; அடியவர்களை அஞ்சேல் என்று கூறி மார்பிலே வைத்தது ஒன்று; இடுப்பின் இடப்பக்கத்தில் வைத்திருப்பது ஒன்று; தொடையிற் சார்த்தியது ஒன்று; வீர வளையணிந்தது ஒன்று; மணி சேர்ந்தது ஒன்று; போரில் அங்குசம் பிடிப்பது ஒன்று; கேடயம் சுழற்றுவது ஒன்று; வாளேந்துவது ஒன்று. இத்தகைய பன்னிரண்டு திருக்கைகளை உடையவன் முருகன்.

**தெய்வ விளக்கு:**

குடம் போன்ற தனங்களும், சிவந்த இதழ்களும், கொடிபோன்ற மெல்லிய இடையும் உடைய, வள்ளி தெய்வயானை என்னும் இருவர் விரும்பித்தழுவும் அகன்ற மார்பும், பூப்போன்ற அழகிய பட்டாடையும், பொன்னுலமைந்த அரைஞாணும், கச்சையழகும், திரு அரையும், நாத தத்துவமாகிய வீரக்கழலும், பொற் கிண்கிணியும், பாதங்களிலணிந்த சிலம்பும், ஒரு நூருயிரம் உதய சூரியர்கள் ஒரே காலத்தில் ஒளி வீசுவது போன்ற பேரழகு வாய்ந்த தெய்வீக வடிவமும், ஆகியவற்றை அகக் கண்ணுல் கண்டு அன்பு செய்து வழிபடுவோர்க்கு ஆருயிராய், அவர்களின் இதயகமலத்தில் வீற்றிருக்கும் தெய்வீக விளக்கொளியைப் போன்றவன் முருகன்.

அகரம் உகரம் மகரம் நாதம் விந்து எனப் பெறும் ஐவகை ஓங்காரத்து உள்ளொளிக்கும் உள்ளொளியாய், ஐந்தொழில்களை நடத்தும் பேருருவாய் நிற்பவன் முருகன். அவனுக்கு மந்திரமே இரத்தம், பதமே மாமுடி, வன்னமே தோல், புவனமே மயிர், தத்துவமே ஏழு தாதுக்கள், கலையே உறுப்புக்கள். இங்ஙனம் ஆறு அத்துவாக்களின் வடிவாய்க் காட்சியளிப்பவன் முருகன்.

பலகோடி அண்டங்கள் உருவாகவும், சராசரங்கள் உறுப்புக்களாகவும், இச்சை ஞானம் கிரியை என்னும் மூன்று சத்திகள் அகக் கருவிகளாகவும் கொண்டு, வழிபடும் அன்பர்களுக்குச் சூக்கும ஐந்தொழில்களை ஏவி நடத்துபவன் முருகன். அவன் நிலம் நீர் தீ வளி விசும்பு ஞாயிறு திங்கள் உயிர் என்னும் அட்ட மூர்த்தங்களாக விளங்குகின்ருன். இமயம் நியமம் ஆசனம் பிராணுயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி என்னும் எட்டுப் பகுதிகளையுடைய அட்டாங்க யோகத்தின் முடிவில், ஞானத்தை அளிக்கும் பயனுக இருப்பவன் முருகன்.

தசாங்கங்கள்:

அன்பர்களின் உள்ளத்தில் பொங்கி எழுகின்ற ஆனந்தமாகிய மலை; பேரின்ப வெள்ளமாகிய ஆறு; இன்பம் தரும் மேலுலகமாகிய நாடு; போக்கு வரவு இல்லாத உயர்ந்த அழகிய நகரம்; ஐந்தெழுத்து ஓதிச் செலுத்தும் குதிரை; மதம் தோய்ந்த களித்துத்துதிக்கையினுல் ஐந்து மலங்களையும் காய்ந்த சிவஞானமாகிய யானை; அறிவும் அன்பும் கொண்டு தொடுத்த மலர் மாலை; ஐந்தொழில் நடத்தும் உயர்ந்தகொடி; நவநாதமாகிய முரசு; புவனங்களை ஆக்கி இயக்கும் ஆணை ஆகிய தசாங்கங்கள் கொண்டவன் முருகன்.

என்று இதுகாறும் முருகனின் அருமை பெருமைகளை விளக்கும் முறையில் சைவ

சித்தாந்தக் கருத்துக்கள் கந்தர் கலிவெண்பாவில் சந்தமுற நன்கினிது சுருங்கக்கூறி விளக்கப் பெற்றன (கண்ணிகள் 1 முதல் 74 வரை). இனி, கண்ணிகள் 75 முதல் 108 வரையில் கந்த புராண வரலாறுகள் கவின்மிகச் சுருக்கித் தொகுத்துக் கூறப் படுகின்றன.

**கந்தபுராணச் சுருக்கம்:**

கயிலாய மலையில் உமாதேவியுடன் சிவ பெருமான் எழுந்தருளி யுள்ளான். ஒரு நாள், அசுரர்களின் கொடுமையைத் தாங்காத தேவர்கள், சிவபெருமானிடம் சென்று தங்கள் குறைகளை முறையிட்டுக் கொள்கின்றனர். சிவபிரான் அவர்களின் முறையீட்டைக் கேட்டுத் திருவுள்ளம் இரங்குகின்றான். தனக்கு இயல்பாக உரிய ஈசானம் தத்புருடம் அகோரம் வாமதேவம் சத்தியோசாதம் என்னும் ஐந்து முகங்களுடன் கீழ்நோக்கிய அதோமுகம் என்னும் முகத்தையும் கொண்டு ஆறு முகங்கள் உடையவனாய், ஆறு நெற்றிக் கண்களினின்றும்ஆறு தீப்பொறிகளைவெளியே விடுத்தான். அவைகள் எல்லா உலகங்களிலும் பரவித் தேவர்களுக்கு அச்சத்தை விளைவித்தன. அதனால் சிவபிரான் அவற்றைத் திருக்கையால் எடுத்து வாயுதேவனிடம் தந்தான். அவன் அதனை ஆற்றாமல் அக்கினி பகவானிடம் அளித்தான். அவனும் அதைத் தாங்க முடியாமல் குளிர்ந்த கங்கை யாற்றில் விட்டான். கங்கையும் தாங்க முடியாமல், தனது மடியில் தாங்கிக் கரையிலுள்ள நாணற் காட்டில் சேர்த்தாள். அங்கு அப்பொறிகள் ஆறும் ஆறுகுழந்தைகளாயினகார்த்திகைப்பெண்கள் ஆகிய அறுவரின் முலைப்பால் குடித்து விளையாடின. சிவபிரான் அக்குழந்தைகளை உமாதேவியாருக்குக் காட்டினான். தேவியார் அந்த ஆறு குழந்தைகளையும் ஒன்றாகச் சேர்த்து எடுத்து அணைத்தாள். அதனால் அவைகள் ஒருருவம் ஆயின. அதுகண்டு மகிழ்ந்து கந்தன் எனப் பெயரிட்டுத் தன் முகத்தில் அணைத்து உச்சி மோந்து திருமுலைப்பால் ஊட்டி,உமாதேவியார்சிவபிரான்இடத்தில் அக்குழந்தையை யளித்தாள்.

உமாதேவியாரின் சிலம்பிலிருந்து சிதறிய நவமணிகளினின்று, மாணிக்க வல்லி, முத்துவல்லி, புஷ்பராகவல்லி, கோமேதக வல்லி, வைடூரியவல்லி, வைரவல்லி, மரகத வல்லி,பவளவல்லி,இந்திர நீலவல்லிஎனும் நவசக்திகள் தோன்றினர். அவர்கள் சிவபிரானை விருப்புடன் நோக்கிக் கருக் கொண்டனர். அதனால் அவர்களிட மிருந்து வீரவாகு, வீரகேசரி, வீரமகேந்திரர், வீரமகேச்சுரர், வீரபுரந்தரர், வீரராட்சசர், வீரமார்த்தாண்டர், வீராந்தகர், வீர தீரர் என்னும் நவவீரர்கள் தோன்றினர். அவர்களுள் ஒருவராகிய வீர வாகுவை அழைத்து, நாரத முனிவர் செய்த வேள்வியில் தோன்றி உலகத்தை யழித்து உலவிவரும் ஆட்டுக்கிடாயைக் கொண்டு வருக என்று முருகன் கட்டளையிட்டார். அங்ஙனமே வீரவாகு அதனைப்பிடித்துக் கொணர்ந்து விடுக்க,முருகன் அதன் மேல் ஏறி அதனை எட்டுத் திக்குக்களிலும் செலுத்தி விளையாடினான்.

ஒருகால் பிரமன் கைலைக்குச் சென்ற போது அகந்தையால் முருகனை வணங்காது சென்றான். முருகன் அவனை அதட்டி அழைத்து 'நீ யார்? நீ செய்யும் தொழில் யாது?' என வினவினார். அதற்கு 'நான் பிரமதேவன். நான் செய்வது படைப்புத் தொழில்' என்றான். 'படைப்புத் தொழிலை எவ்வாறு செய்கின்றனை' என முருகன் வினவ, 'வேதங்களை ஓதிச்செய்கின்றேன்' என்றான் பிரமன். அங்ஙனமாயின் 'நீ வேதத்தை ஓதிக் காட்டு' என முருகன் பணித்தான். பிரமன் வேதத்தை ஓதத் தலைப்பட்டு, முதலில் 'ஓம்' ஒன்று கூறித் தொடங்கினான். முருகன் உடனே அவனை நிறுத்தி, 'நீ இப்போது ஓதிய ஓம் என்பதன் பொருளைக்கூறுக' எனப் பணித்தான். அவன் தெரியாது விழித்தான். 'இது தானும் அறியாத நினக்கு இத்துணைச் செருக்கா? நீ படைப்புத் தொழிலைச் செய்யுமாறு யாங்ஙனம்?' எனக் கடிந்துரைத்துத் தலையிற் குட்டிச் சிறையில் இடுவித்தான்.

பிரமன் சிறைப்பட்டதனால் வருந்திய திருமால், சிவபிரானிடம் சென்று முறையிட்டான். சிவபிரான் நந்திதேவரை முருகன்பால் உய்த்து, பிரமனைச் சிறையினின்று விடுவிக்கப் பணித்தார். முருகன் அதற்கு இசைந்திலன். சிவபிரான் நேரே போந்து முருகனைக் கண்டார். முருகன் சிவபிரானைப் பணிந்து, பிரமன் பிரணவப் பொருள் அறியாமையினால் சிறைப்பட்டதனைக் கூறினார். சிவபிரான், 'அங்ஙனமேல் பிரணவத்தின் பொருளை நீ எனக்குப் பகரவல்லையோ?' என்றார். 'முறைப்படி இருந்து கேட்பின் உரைப்பதாக' முருகன் மொழிந்தருளினான். சிவபிரானும் அதற்குஇசைய,

முருகப் பெருமான் சிவனார் மனங் குளிர உபதேச மந்திரம் இரு செவிமீதிலும் பகர்தல் செய்தான்.

தேவர்களின்துன்பத்தைத் தீர்ப்பதற்காக முருகன் தாரகாசுரனை அழித்தான். அவனுக்குத் துணையாகப் போந்து மலையாக நின்ற கிரவுஞ்சன் என்னும் அசுரனையும். வீரவடிவேல் விடுத்து ஒழித்தான். கடல் அலைவீசும் திருச்செந்தூரில், கருணை வெள்ளம் போல உயர்ந்த பீடத்தில் வீற்றிருந்து தேவேந்திரனுக்குத் தஞ்சமளித்தான். சூரபதுமனிடம் நல்லுரைகள் கூறிவரும்படி வீரவாகுவைத்தூது விடுத்தான். ஆனாலும் சூரபதுமன் தேவர்களைச் சிறைவிட மறுத்தமையால் தேர் யானை புரவி காலாள் என்னும் நான்கு வகையான படைகளையும் கொண்டு சென்று பானு கோபன், சிங்கமுகன் முதலிய அசுரர்களை வதைத்து வெற்றிமாலை யணிந்தான். அதுகண்டு அஞ்சிக் கடலுக்குள் சென்று, மாமரமாக ஒளிந்த சூரனை இரண்டு கூறு களாகப் பிளந்தான். அவற்றில் ஒன்று மயிலாகவும், மற்றொன்று கோழியாகவும் வடிவெடுத்து நின்றன. முருகன் மயிலை வாகனமாகவும், கோழியைக் கொடியாகவும் ஏற்றுக் கொண்டான்.

இவ்வாறு சூரபதுமனைத் தடிந்ததனால், முருகன் மும் மூர்த்திகளின் குறைகளைப் போக்கினான். தேவர்களைச் சிறையிலிருந்து விடுவித்தான். முருகன் அருளால் தேவர்கள் மகிழ்ந்தார்கள். தேவேந்திரன் தனக்கும் தேவர்களுக்கும் நலம் செய்த முருகனுக்குத் தன் நன்றியைப் புலப்படுத்த விரும்பினான். அதனால் தன் மகளாகிய தெய்வானை யம்மையை முருகனுக்கு மணம் செய்துதர விரும்பி, ஏற்றுக் கொண்டருளுமாறு முருகனைப் பணிந்து வேண்டிக் கொண்டான். அவனது வேண்டுகோளுக் கிசைந்து தெய்வயானை யம்மையை முருகன் திருப்பரங்குன்றத்தில் மணம் புரிந்து கொண்டு மகிழ்வித்தான்.

திருமாலின் புதல்வியராகிய அமுதவல்லி, சுந்தரவல்லி ஆகிய இருவரும், முருகனை மணக்க விரும்பித் தவம் புரிந்தனர். முருகன் பணித்தபடி அமுதவல்லி விண்ணுலகத்தில் தெய்வ யானையாகத் தோன்றி முருகனை மணந்தனள். மற்றொருத்தியாகிய சுந்தரவல்லி மண்ணுலகில் சிவ முனிவர் என்பவரின் அருட் பார்வையால் மானொன்றின் வயிற்றில் கருவுற்று, வள்ளிக்கிழங்கு அகழ்ந்த குழியில் தோன்றி, வள்ளி எனப் பெயரிடப் பெற்று, நம்பிராசன் என்னும் வேடர் தலைவனால் எடுத்து வளர்க்கப்பட்டு வந்தாள். தமிழ் நூல்கள் கூறும் கற்பு களவு என்னும் இருவகைத் திருமண முறைகளுள், கற்பு மணத்திற்குரிய எடுத்துக் காட்டாகத் தெய்வயானை அம்மையை மணந்த முருகன், களவு மணத்திற்கு இலக்கியமாகப் பலவகைத் திருவிளையாடல்களை நிகழ்த்தி வள்ளியம்மையை மணந்து கொண்டான்.

இவையனைத்தும் கந்தபுராணம் கூறும் முருகனின் விரிவான வரலாற்றின் சுருக்கம். சுருங்கிய சில வரிகளில் கந்தபுராண வரலாறு முழுதினையும் முறைப்படத் தொகுத்து, ஒருங்கே தொடுத்து இனிது பாடி யருளிய குமர குருபரரின் கவிதைக் கலை நலமும், பக்தி யுணர்வின் சிறப்பும் பெரிதும் மிகப் பாராட்டுதற்குரியனவாகும்.

### வேண்டுகோள்:

திருப்பரங்குன்றம் திருச்சீரலைவாய் திருவாவினன்குடி திருவேரகம் பழமுதிர் சோலை என்னும் ஆறு படைவீட்டுத் தலங்களையும் தரிசித்து, ஆறு எழுத்து மந்திரத்தைச் செபித்து வழிபடும் அன்பர்களின் உள்ளத்தில் எழுந்தருளிக் குடி கொள்ளும் ஞம் முருகனே! திருச்சீரலைவாய் ஆகிய திருச்செந்தூரில் எழுந்தருளியிருந்து, எல்லாப் பொருள்களையும் உயிர்களையும் பாதுகாத்து அருள் புரியும் செவ்வேளே!

எண்ணில்லாத தொன்னெடுங் காலமாக அடைந்து வருகின்ற பிறவித் துன்பமும், காலமின்றி எதிர்பாராமல் நேரும் இறப்புத் துன்பமும், பலகோடி இடையூறுகளும், பலவகையான நோய்களும், பலவகையான பாவங்களும், பில்லி சூனியம் போன்ற ஏவல் வினைகளும், பாம்பு பிசாசு கொடியபூதம் பெருந்தீ நீர்வெள்ளம், தீங்கு விளைவிக்கப் பகைவர்கள் விடும் படைக்கலங்கள், தீமை விளைவிக்கும் கொடிய நஞ்சு, கொடிய விலங்குகள் முதலியன எவையாயினும், எவ்விடத்தில் எப்போது வந்து எம்மை எதிர்த்தாலும், அவ்விடத்தில் அப்போதே நின்னுடைய பச்சை மயில் வாகனமும், பன்னிரண்டு திண் தோள்களும், அச்சம் அகற்றும் அயில் வேலும், கச்சைகட்டிய திரு அரையும், சிறிய மெல்லிய திருவடியும், அஞ்சேல் என்னும் திருக்கையும், அருள் பொழியும் பன்னிரண்டு திருவிழிகளும், ஒளிவீசுகின்ற

அழகிய ஆறு திருமுடிகளும், எல்லாத் திசைகளிலும் எதிரே தோன்ற வெளிப் பட்டு, இடுக்கண்களை யெல்லாம் பொடி யாகச் செய்து, எல்லா வரங்களையும் தந்து, நீ எங்கள் உள்ளத்தில் புகுந்து உல்லாச மாகக் குடியிருத்தல் வேண்டும்!

எங்களுக்கு ஆசு மதுரம் சித்திரம் வித் தாரம் என்னும் நால்வகைக் கவிகளையும் பாடும் திறமையும், அட்டாவதானம் என் னும் அருஞ்செயல் புரியும் ஆற்றலையும், இயல் இசை நாடகம் என்னும் மூன்று கூறுக அமைந்த பற்பல காவியங்களின் பயிற்சியையும், எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்னும் ஐந்து இலக்கணத் திலும் தேர்ச்சி நிரம்பிப் பழுத்த தமிழ்ப் புலமையையும் எங்களுக்குக் கொடுத் தருள்க!

இப்பிறவியிலுள்ள அகப்பற்று புறப்பற் றுக்களாகிய இரண்டு வேதனைகளையும் அகற்றி, ஆணவம் கன்மம் மாயை ஆகிய மூன்று மலங்களையும் நீக்கி, பசுபோதம் நீங்கி ஒழுக்கம் வாய்ந்து, திருவருளின் சிறப்பை ஆராய்ந்து இன்புறுவதையே பொழுதுபோக்காகக் கொண்டுள்ள சிறந்த பழைய அடியார்களுடன்கூடும்படி செய்து பேரின்பத்தை நிறையநுகரச் செய்து, மணம் பொருந்திய சிவந்த தாமரை மலர் போன்ற நின் திருவடிகளைக் காட்டி ஆட் கொண்டு, அடியேங்களுக்கு முன்னின்று அருள் புரிவாயாக!

முடிவுரை :

இங்ஙனம் பற்பல நலங்களும், அற்புதக் கவிதைச் சிறப்பும் அமைந்து, பக்தி யுணர்வை வளர்ப்பதற்குரிய பாராயணப் பனுவலாக விளங்கும் கந்தர் கலிவெண்பா என்னும் கவின்மிகு நூலை, நாம் அனைவரும் நாடோறும் ஓதி, முருகன் திருவருள் பெற்று உய்ய முயலுவோமாக.

—ஆசிரியர்.



ஸ்ரீ அயக்கிரீவர்,

# உள்ளுறை பொருள் ஆராய்ச்சி

மகாவித்வான் ஸ்ரீமத் P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சீபுரம்.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

## 9. நிதி விசேஷார்த்தம்

எம்பெருமானை ஆழ்வார்கள் நிதியாகப் பேசி யநுபவித்தார்கள். நிதியே திரு நீர்மலை நித்திலத் தொத்தே* என்றும் *நிதியினைப் பவளத் தூணை* என்றும் *வைத்தமா நிதியாம் மதுசூதன்* என்றும் பல பாசுரங்கள் காணலாம். *அந்தர் ஹிதோ நிதிரஸி த்வம்* என்று கூரத்தாழ்வானும், *மாயாநிகூடம் அநபாய மஹா நிதிம் த்வாம்* என்று தேசிகரும் பணித்தார்கள். நிதிக்கும் எம்பெருமானுக்கும் பலபடிகளாலே ஸாம்ய முண்டு.

1. நிதி ஒருவர் கண்ணுக்கும் புலப்படாதபடி மறைந்து கிடக்கும். எம்பெருமானும் "கண்காண நிற்கில் ஆணையிட்டு விலக்குவர்களென்று கண்ணுக்குத் தோற்றுதபடி நின்று" என்கிற ஸ்ரீ வசநபூஷண ஸ்ரீஸூக்தியின்படியும், *இவற்றுளெங்கும் மறைந்துறைவாய்* *கரந்தெங்கும் பரந்துளன்* என்பவை முதலான பாசுரங்களின்படியும் கட்கிலியா யிருப்பன்.

2. மறைந்து கிடக்கும் நிதியானது சில பாக்யசாலிகளுக்கே புலப்படும். எம்பெருமானும் * யானே தவம்செய்தேன் *கோரமாதவம் செய்தனன் கொலறியேன்* என்னும்படியான சில பாக்கியசாலிகளுக்கே புலப்பட்டான். *லப்யோஸி புண்யபுருஷை: இதரைர்துராப:* என்றார் கூரத்தாழ்வானும்.

3. ஒரு வகையான ஸித்தாஞ்ஜந மணிந்துகொண்டு பார்ப்பவர்களுக்கே நிதி தோன்றும் என்கிற சந்த்ராலோகச் ச்லோகம் இங்கு நினைக்கத்தக்கது. எம்பெருமான் என்று பட்டரும் தேசிகரும் பணித்தபடியே பக்தியாகிற ஸித்தாஞ்ஜனமணிந்த திவ்ய சக்ஷுஸ்ஸைப் பெற்றவர்களுக்கே தோன்றுவன். பக்த்யா சாஸ்த்ராத் வேத்மி ஜநார்தநம்* என்று த்ருதராஷ்ட்ரனை நோக்கி ஸஞ்ஜயன் கூறினது காண்க. கூரத்தாழ்வானும் பக்தியற்றவர்களுக்கு எம்பெருமான் புலப்படானென்று கூறியருளினர்.

4. நிதியானது தன்னைப் படைத்தவர்களை *த்ருணீக்ருத விரிஞ்சாதி நிரங்குச விபூதிகர்களாக ஆக்கி ஆனந்த பரம காஷ்டையிலே கொண்டுவைக்கும். எம்பெருமானும் தன்னைப் பெற்றவர்களை *உகந்துகந்துள் மகிழ்ந்து குழையுமே* *தொல்லையின்பத்திறுதி கண்டாளே* என்கிறபடியே ப்ரஹ்மாநந்த பரவசராக்குவன்.

5. நிதியானது நவநிதியென்று ப்ரஸித்தமாக வழங்கப்பெறும். நவ என்பதற்கு ஒன்பது என்றும் அர்த்தம்; புதிது என்றும் அர்த்தம். எம்பெருமான் *எப்பொழுதும் நாள் திங்களாண்டூழியூழி தொறும் அப்பொழுதைக் கப்பொழுது என்னாராவமுதமே* என்கிறபடியே நவம் நவமாகத் தோற்றுவன்.

6. நிதியானது எடுத்தெடுத்து எவ்வளவு அநுபவிக்கப்பட்டாலும் கொள்ளக் கொள்ள மாளாததாய் அக்ஷய்யமாயிருக்கும். எம்பெருமானும் எனையூழிகாலம் அநுபவிக்கப்பட்டாலும் குறைவுபடாதே மேன்மேலும் பெருகிச் செல்வன். குவலயாநந்த மியற்றிய அப்பய தீக்ஷிதர்* என்று உரைத்த மங்கள ச்லோகம் இங்கே ஸ்மரிக்கத்தகும்.

இங்ஙனமே மற்றும் பல உவமைப் பொருத்தங்கள் காண்க.

## 10. ஸிம்ஹ விசேஷார்த்தம்

*எசோதையிளஞ்சிங்கம்* என்றும் *சிற்றுயர் சிங்கமே* என்றும் பலவிடங்களில் எம்பெருமானைச் சிங்கமென்று கூறியிருப்பதன் விசேஷார்த்தம் கேண்மின்.

1. சிங்கமானது மிருகஜாதிக்குள்ளே ராஜாவென்று பேர் பெற்றிருக்கும்' எம்பெருமானும் * பாரளந்த பேரரசே எம் விசும்பரசே!* என்று ராஜாதிராஜனைகப் பேர் பெற்றிருப்பன்.

2. சிங்கம் பெரிய காடுகளிலே திரியும். எம்பெருமான் பெரிய காடென்று பொருளுடையதான ப்ருஹதாரண்யகம் முதலான உபநிஷத்துக்களிலே உலாவுவன்.

3. சிங்கம் *மலைமுழஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும். எம்பெருமான்* தென்னனுயர் பொருப்பு தெய்வவடமலைதிருவத்தி மாமலை முதலானமலை முழஞ்சுகளிலே* அணிமணியின் துத்திசேர் நாகத்தின் மேல் துயில்வான்.

4. சிங்கம் ஒருவராலும் அடக்கமுடியாததா யிருக்கச்செய்தேயும் தன்னைப் பழக்கி வைத்துக்கொண்டிருக்கும்சிலர்க்கு ஸர்வாத்மநா விதேயமாயிருக்கக் காணு நின்றோம். எம்பெருமானும்* பிறர்க்கு அரிய வித்தகனுயிருக்கச் செய்தேயும்* பத்துடையடிவர்க் கெளியவனென்று ப்ரஸித்தன். மண்ணின் பாரமான துரியோதனுதியர்க்கு அபிபவிக்க வொண்ணுதவனுயிருந்த நிலையிலே* ஸேநயோ ருபயோர் மத்யே ரதம் ஸ்தாபயமே அச்யுத என்றிங்ஙனே பலவாறு அர்ஜுநன் நியமிக்கும்படி பவ்யனுயிருந்த நிலை காண்க.

5. சிங்கம் கம்பீரமான நடை நடக்கும். எம்பெருமானும்* கானகம்படி யுலாவி யுலாவிக் கருஞ்சிறுக்கன்* என்றும் *ஸிம்ஹவிக்ராந்த காமிநம்* என்றும் சொல்லுகிறபடியே நடைச்சக்ரவத்துப் பிடிக்கலாம்படியான நடையழகில் ப்ரஸித்தி பெற்றவன். *ராமே ப்ரமாதம் மாகார்ஷீ: புத்ர ப்ராதரி கச்சதி* என்று லக்ஷ்மணனை நோக்கி ஸுமித்ரை சொன்ன வார்த்தையில் 'கச்சதி' என்ற விடத்திற்கு நம் ஆசாரியர்கள் பொருத்தமாக அருளிச் செய்யும் அர்த்த விசேஷம் இங்கே அநுஸந்தேயம்.

6. சிங்கம் மதயானைகளை அவலிலையாகத் தொலைத்திடும். எம்பெருமானும் மதுகைடப ஹிரண்யாக்ஷ ராவண கும்பகர்ண கம்ஸ சிசுபாலாதிகளான மத யானைகளைக் கிள்ளிக்களைந்தவன். இங்ஙனமே மற்றுங்காண்க.

எம்பெருமானைப் பற்றின விசேஷார்த்தங்கள் முடிந்தன.

## பாகவதர்களைப்பற்றின விசேஷார்த்தங்கள்

### அவதரணிகை.

ஆக இவ்வளவும் எம்பெருமானைப் பற்றிய அந்யாபதேச ஸ்ரீ ஸூக்திகளுக்கு ஸ்வாபதேசார்த்தங்கள் காட்டப்பட்டன. இனி, எம்பெருமானடியார்களைப் பற்றின அந்யாபதேச ஸ்ரீ ஸூக்திகளுக்கு ஸ்வாபதேசார்த்தங்கள் நிரூபிக்கப்படுகின்றன.

ஆழ்வார்கள் எம்பெருமானைக் குறித்துத் தூதுவிடும் பிரகரணங்களிலே, வண்டு நாரை அன்னம் கிளி குயில் முதலான பறவைகளையும் மேகத்தையும் தூதுவிடுவதாகக் காண்கிறது. அறிவிற் சிறந்த ஆழ்வார்கள் அறிவுகேட்டுக்கு எல்லை நிலமான வண்டு நாரை முதலியவற்றை மெய்யே தூதுவிடுகை அஸம்பாவிதமாகையாலே உள்ளுறைபொருள் வேருகவேயிருந்து தீரவேண்டும். இதனை நம்மாழ்வார் தாமே திருவிருத்தத்தில் ஒரு பாசுரத்திலுல்வெகுஸ்பஷ்டமாகக்காட்டியருளினுர்.

எங்ஙனே யென்னில்;* 'வீசுஞ்சிறகால் பறத்தீர்* என்கிற பாசுரத்தில் "எம்மீசர் விண்ணேர் பிரானுர் மாசில் மலரடிக்கீழ் எம்மைச் சேர்விக்கும் வண்டுகளே;" என்றுர். எம்பெருமானுடைய திருவடிகளிலே சேர்விக்கையாகிற விசேஷம், காட்டில் திரியும் வண்டுகளுக்கு ஒருபடியாலும்

ஸம்பவிக்கு மதன்றே. ஆசாரியர்களையே வண்டுகளாகச் சொல்லித் தூதுவிடுகிருரென்பது சொற்போக்கிலே நன்கு விளங்காநின்றதன்ருே.

இதற்கடுத்த மேற்பாசுரத்திலும் 'வண்டுகளோ வம்மின், நீர்ப்பூ நிலப்பூ மரத்திலொண்பூ வுண்டு களித்துழல் வீர்க்கு" என்று அருளிச்செய்திருப்பதும் குறிக்கொள்ளத்தக்கது. நீர்ப்பூக்களான தாமரை செங்கழுநீர் முதலானவற்றிலும், நிலப்பூக்களான மல்லிகை முல்லை முதலியவற்றிலும், மரத்துப்பூக்களான புன்னை குருக்கத்தி பாதிரி முதலானவற்றிலும் உலாவுகின்ற வண்டுகளின் தன்மையைச் சொல்லுவது மாத்திரமே இங்கு விவதக்ஷிதமன்று; நீர்ப்பூ என்பதனலே க்ஷீராப்திசாயியான வ்யூஹவாஸுதேவ பகவானையும், நிலப்பூ என்பதனலே பூமியில் அவதரித்து ஸஞ்சரித்த விபவாவதார மூர்த்திகளையும், மரத்திலொண்பூ என்பதனலே * சேணுயர் வானத்திருக்குந் தேவபிரானை பரவாஸுதேவனையும் சொல்லி, ஆக பரவ்யூஹ விபவ மூர்த்திகளின் அநுபவத்திலே ஊன்றியிருக்குமடியார் தன்மையைச் சொன்னபடியாய் நன்கு விளங்குகின்றது.

அன்றியும் திருவாய்மொழியிலே * எங்கானலங்கழிவாயில் "செங்கால்மடநாராய்! திருமூழிக்களத் துறையும்... குடக்கூத்தற்கு என் தூதாய், நுங்கால்களென் தலைமேல் கெழுமீரோ நுமரோடே" என்கிற பாசுரத்திலுல், தூதுசென்று மீண்டு வந்தால் அவற்றின் கால்களைத் தம் தலைநிறைய வைத்துக்கொண்டு கூத்தாட ஆழ்வார் குதூஹலிப்பதாகஸ்பஷ்டமாய்க் காண்கிறது. இங்கே நன்கு ஆலோசிக்கவேண்டும். நாரையென்னும் அற்பபக்ஷியினுடைய கால்களைத் தலைமேற்கொள்ளவா ஆழ்வார் குதூஹலிப்பார்? இது பொருந்துவ தன்றே. * அடிச்சியோந் தலைமிசை நீ யணியாய் ஆழியங்கண்ணுவுன் கோலப்பாதம் என்று எம்பெருமான் திருவடிகளைச் சிரமேலணிந்துகொள்ளக் காதலிக்குமவர் அத்திருவடிகளுக்கும் மேலான திருவடிகளைச் சூட விரும்புவரே யல்லது அற்பமான நாரையின் கால்களைச் சூட விரும்புவரோ? பரமபாகவதர்கள் ஸபரிவாரகராகவந்து தம் தலைமீது திருவடிகளை வைத்தருளவேணுமென்றே விரும்புகிருரென்பது சொற்போக்கிலே நன்கு விளங்குகின்றதன்ருே.

* மாறன் பணித்த தமிழ் மறைக்கு ஆறங்கங்கூற அவதரித்த மங்கையர் கோன் பணித்த பாசுர மொன்றும் இங்கே குறித்துக்கொள்ளத்தக்கது. அதாவது, திருநெடுந்தாண்டகத்தில் * அறுகால சிறுவண்டே! தொழுதேனுன்னை * என்று ஆழ்வார் அருளிச்செய்துளர். ஆறு கால்களையுடைய வண்டே! என்று இங்கே விளியுள்ளது. வண்டுக்கு ஆறுகால்கள் உள்ளமை இயல்வாதலால் இவ்விசேஷணம் இங்கு ஏதுக்கு? என்கிற சங்கை தோன்றக்கூடியது. இரண்டு காலாகவும் நான்கு காலாகவுமின்றியே விரைந்து செல்லுகைக் குறுப்பாக ஆறுகால்கள் இருக்கப்பெற்ற பாக்கியம் என்னே! என்று வியந்து கூறுவதாகச் சில ஆசார்யர்கள் நிர்வஹித்தார்களாம். இந்த நிர்வாஹத்தில் சுவையில்லை; வண்டு செல்லுதற்குச் சாதனம்சிறகேயன்றிக் கால்கள் அல்லவே. ஆதலால் அறுகால என்னுமடைமொழிக்கு அங்ஙனமே கருத்துரைத்தல் பொருந்தாதென்று, பட்டர் அருளிச்செய்வதாவது— 'தொழுதேனுன்னை' என்று மேலேயிருக்கையாலே தம் தலையிலே வைப்பதற்கு ஆறு கால்களுண்டாகப் பெற்றதே! என்று வியந்து சொல்லுகிறபடி என்பதாம். அதாவது- * ஆசார்யவத் ஆசார்யபுத்ரே ஆசார்ய தாரேஷு ச வ்ருத்தி: என்பது சாஸ்த்ரம். ஆசார்யரைப் போலவே அவரது திருக்குமாரரும் தருமபத்தினியும் ஆக மூவர் உத்தேச்யராகச் சொல்லுகையாலே அம்மூவர்க்கும் உரியவையான ஆறுகால்களைச் சிரமேற் கொள்ள விரும்பினபடியைக் கூறினவாறு. மேலே உதாஹரித்த திருவாய் மொழிப்பாசுரத்தில் * நுங்கால்களென் தலைமேல் கெழுமீரோ * என்றவுடனே 'நுமரோடே' என்றதனுல் உட்கொள்ளப்பட்ட அர்த்தமேயாம் இது.

(தொடரும்)

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு. K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி

(முன் இதழ்த் தொடர்ச்சி)

மறுநாள் உடையவர் கூரத்தாழ்வானை நோக்கி "ஆழ்வான்! நம்பேருளாளர் வரதராஜர் என்ற புகழ் நாமம் படைத்தவர். நீர் அவர் விஷயமாக ஒரு துதிநூல் ஆக்கிச் சமர்ப்பித்து உமக்குக் கண் கொடுத்தருளவேண்டும் என்று வேண்டிக் கொள்ளும்" என்று பணிக்க, ஆழ்வான் "அடியேனுக்குக் கண்கள் தேவையில்லை" என்று விண்ணப்பித்தார். உடையவர் "அப்படி நீர் கூறலாகாது. நம்முடைய விருப்பப்படி ஒரு ஸ்தோத்ரம் செய்து ஸமர்ப்பியும்" என்று மிகவும் தூண்ட ஆழ்வானும் ஒரு ஸ்துதி செய்ய இசைந்து

" ஒத்தவரும் மிக்கவரும் இலையெனவே
எந்த ஒரு தேவை உபநிடதம் ஓதிய
வோ அந்த
அத்திமலை மணியாக அமர் வரதன்
அடியேற்
கலகில் பல நலங்களையும் என்றும்
அருளுகவே "

என்று பொருள்படும் ச்லோகத்தைத் தொடங்கி நூலிடையே

" நீலமேக நிறத்த! மை நீலம் நெறிந்த குஞ்சிய! பாம்பணை வரத! கோலத் தாமரைக் கால்கைய! கமலக் கண்ண! வென்றுமுனைக்காணக் கொடுப்பாயே" என்று, என்றும் எப்போதும் உன்னைக் கண்டுகளிக்கும்உட்கண் ஈந்தருளவேணும் என்று வேண்டிக்கொண்டார். அன்றிரவே பேருளாளன் ஆழ்வானது கனவில் தோன்றி "ஆழ்வான்! உமது துதிக்கு உகந்தோம். என்றேனும் கட்கண்ணால் நீர் காணமுடியாத நம் முருவை உமது நெஞ்சு எப்போதும் கண்டுகளிக்கும்படி உமக்கு உட்கண் அருளினோம் காணும்!" என்று வரமளித்து மறைந்தான். விடிந்ததும் ஆழ்வான் மிக மகிழ்ச்சியோடெழுந்து தம் அனுட்டானங்களை முடித்து தாம் இயற்றிய "வரதராஜஸ்தவம்" என்ற நூலைக்குறைவின்றிப் பூர்த்திசெய்து கொண்டு நேரே எம்பெருமானார் ஸன்னிதிக் கெழுந்தருளினார். கண்ணிழந்து அதனால் முன் களையின்றியிருந்த அவர் திருமுகத்திலே வரதன் அருளிய திப்பியக் கண்ணொளி திகழ்ந்து படர்வதைக்கண்டு வியந்தார் உடையவர். ஆழ்வான் உடையவர் திருவடிகளிலே தெண்டம் ஸமர்ப்பித்து "ஸ்வாமீ! தேவரீர் அநுக்கிரகத்தால் ஆஞ்ஞைப்படி வரதராஜ ஸ்தவம் விண்ணப்பித்தேன்" என்று தாம் இயற்றிய நூற்றிரண்டு ச்லோகங்களையும் எம்பெருமானார் திருச்செவிகள் இன்பொடு நுகரச்சேவித்து நின்றார். உடையவரும் மிகவும் மனநிறைவும் மகிழ்வும் கொண்டவராய் ஆழ்வானைப்பாராட்டியருளினார். ஆழ்வார் தாம் இரவில் கண்டகனவையும் பேரருளாளன் தமக்குப் பெருவிசும்பின் பெரிய திருவோலக்கத்திலே தானிருக்கும் இருப்பை எப்போதும் நெஞ்சினால் நோக்கிக் காண அருளியமையையும் விண்ணப்பித்தார். உடையவர் ஆனந்த மிக்கவராய் "வாரும் ஆழ்வான்! அவன் திருமுன்பே இந்நூலைப் பாடிப்பரவுவோம்" என்று கூற ஆழ்வான் பேரருளாளன் ஸன்னிதிக் கெழுந்தருளினார். அருளாளன் ஸன்னிதியில் ஆழ்வான் ஸ்தவத்தை ஸேவிக்கத் தொடங்கினார். உடையவர் எழுந்தருளச் சற்றுக் காலம் தாழ்த்தது. ஆழ்வான்தொடங்கிய துதியை ஸேவித்து முடிக்கப் பெருமாளும் மிக மகிழ்ந்து "ஆழ்வான்! உம்முடைய

அபேக்ஷிதம் என்ன ?'' என்று ஆதரத்தோடு வினவ ஆழ்வான் “ நான் பெற்ற பேறு நாலூரானும் பெறவேண்டும் !'' என்று வேண்டினர். இவ்வேண்டற்பாடு நிகழுங்காலை இதனைக் கேட்டுக் கொண்டே வந்த உடையவர் பதறிப் பெருமாளை நோக்கி அடியேன் நினைவைத் தலைக்கட்டினீரே ஸ்வாமீ ! என்று பெருமாளிடம் குறைப்பட்டு ஆழ்வானை நோக்கி, “ஆழ்வான் ! நம்முடைய நினைவை மீறி நீர் சுதந்தரராய் நான் வரும் முன்னே இப்படிச் செய்து விட்டீரே !'' என்று மிகவும் துக்கித்தார். பேரருளாளரும் புன்முறுவலோடு உடையவரை நோக்கி உடையவரே ! சோகிக்க வேண்டாம் காணும். நம்மையும் உம்மையும் காணுமிடத்து உட்கண்ணால் காணக்கடவர் !'' என்று வரம் அருளினர். ஆழ்வானும் பெருமாளை நன்குஸேவித்து நின்று அவர் வரம் பலித்தமை பலரும் அறியும் வண்ணம்பெருமாள் அப்போதணிந்துள்ள திவ்யாபரணம், திருப்பரிவட்டம், திருமாலை தொடக்கமானவற்றை யெல்லாம் ஒன்று விடாதே விவரித்து அதேபோன்று உடையவரையும் ஸேவித்து விவரித்தருளினர். உடையவர் உள்ள நிறைவு பெற்றவராய் அருளாளனை வணங்கி விடை கொண்டு ஆழ்வானோடு மீண்டும் கோயிலேற எழுந்தருளினர். [இது ராமானுஜார்ய திவ்யசரிதைப்படி]

ஆழ்வான் கண்ணிழந்திருப்பதனால் ஒரு செயலிலும் ஈடுபட முடியாத நிலையை உன்னி அவரை எந்தக் கைங்கர்யத்தில் மூட்டுவது என்று பலகால் உன்னினர் உடையவர். முடிவில் ஏதோ தீர்மானத்துக்கு வந்தவராய் ஒரு நாள் உச்சிவேளையில் அமுதனார் அகத்துக்கு மாதுகரத்துக்கென்று தன்னந்தனியாகச் சென்று அமுதனார் திருமாளிகை வாசலிலேபோய் நின்றார். வியப்பும் பதைப்பும் கொண்ட அமுதனார் உடையவரை ஸேவித்து ‘இது என்ன இப்போது ?'' எனவிநயத்துடன் கேட்க ஸ்ரீ பாஷ்யகாரரும் ‘ உமக்குக் கோயிலிலே புரோகிதம் செய்யும் காணி உரிமை இருக்கிற தல்லவா ? அதை நமக்குத்தரவேணும்'' என்று பதிலிறுத்தார். அமுதனாருக்கு உடையவர் திருவுள்ளத்திலே ஓடும் ஓட்டம் என்று உணர முடிந்தது. ஸ்ரீரங்கச் செல்வத்துக் கெல்லாம் உடையவராக விருக்கும் இவர் நம் காணியைக் கேட்டுப் பெறவேண்டிய அவசியமின்றே. பின் ஏன் கேட்டார் எனச்சற்று எண்ணினர். ‘ ஆம் ஆம். ஆழ்வான் எந்தக் கைங்கர்யம் செய்யலாம் எனப் பல கால் இவர் கவன்றதுண்டு. அவருக்காகவே தான் கேட்கிறார் என்பதைத் தெரிந்தார். உடனே உள்ளம் மகிழ்ச்சியுள்ளவராய் ‘ ஸ்வாமீ ! இது தேவரீர் அடியேனுக்குக் கிருபை செய்யும் மஹாப்பிரஸாதம். இதோ தேவரீர் திருவுள்ளப்படியே அக்காணியை ஸமர்ப்பிக்கின்றேன் ! என்று கூறிப் பொன்னும் நீரும் கொணர்ந்து, கோயிலில் தமக்குள்ள காணியை, உடையவர் திருக்கரங்களிலே பொன்னைவைத்து நீர் அட்டி அடியேனுடைய காணியை ஆழ்வானுக்காகத் தேவரீர் கரங்களிலே நீர்வார்த்து ஸமர்ப்பிக்கின்றேன் என்று விண்ணப்பித்து நின்றார். தம் உள்ளக்கிடக்கையை உணர்ந்து கொண்ட அமுதனாரை உடையவர் பாராட்டி அக்காணியைப் பெற்று அதனை ஆழ்வானுக்களித்து அவரைப் பெருமாள் ஸன்னிதியிலே புராணம் விண்ணப்பம் செய்யும்படி நியமித்துப் புராணகர்த்தாவான ஸ்ரீ பராசரர் திருநாமத்தை ஆழ்வான் பேரிலிட்டு நடந்துவரும் படியும் ஏற்பாடு செய்தார்.

இதன் பின்னர் உடையவர் திருமலை திருவேங்கட முடையானை ஸேவிக்க வேண்டும் என்ற அவாமிகுந்தவராய் தம் கோஷ்டியுடன் திருமலைக்கு எழுந்தருளி வேங்கடத்தானை ஆபாதசூடம் நன்கு அனுபவித்துஸேவித்து மீண்டார் என்றும், கோயில் வந்ததும் தாம் முன்பருளிய ஸ்ரீ பாஷ்யத்திலே மூன்றில் ஒரு பகுதி பூர்ணமாகாதிருந்ததைப் பூர்த்தி செய்தார் என்றும் ராமாநுஜார்யதிவ்யசரிதை கூறும். ஸ்ரீபாஷ்ய நிகமந (முற்றுப் பெறும்) விழாவை மிகவைபவத்தோடு உடையவர் கொண்டாடினர்.

உடையவர் பாஷ்யத்தைப் பூர்த்தி செய்தபின் பெரிய பெருமாள் திருமுன்பே சென்று

" ஒன்றொழியர்தறிவுள்ளது மில்லதும்
உடைமை யாவுடையுரக
நல்லணையாய் !
புன்மை சார்கிலா நலமொடா னந்தப்
பொற்புடை நிதி ! விட்டுவே
போற்றி !

எனப்பொருள்படும் 'அசேஷசிதசித்வஸ்து சேஷிணேசேஷசாயிநே ! நிர்மலானந்த கல்யாண நிதயே விஷ்ணவே நம: என்ற சுலோகத்தைத் தொடங்கிப் பெருமாள் ஸன்னிதியிலே ஸ்ரீ பாஷ்யப்ரமேயங்களைப் பல்வகையாக உபன்யசித்து நின்றார்.

பெருமாளும் மிகமகிழ்ந்து உடையவர்க்கு சதகலசாபிஷேக பூர்வகமாக ப்ரஹமரதம் பண்ணி விழாக்கொண்டாடும் படி தம் பரிகரமனைத்துக்கும் கட்டளையிட்டு பரியட்டம் திருமாலை முதலிய வரிசைகளனைத்தும் பிரஸாதித்தருளினர். அங்கு கூடியிருந்த கந்தாடையாண்டான் முதலான முதலிகள் அனைவரும் மிக மகிழ்ந்து அவ்வபிஷேகத்தை மிகச் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டனர். பல்வேறு திசைகளிலு முள்ள பல புண்ணியத்துறைகளினின்றும் தீர்த்தகும்பங்கள் தருவிக்கப்பெற்றன. உடையவரை நன்கு அலங்கரிக்கப் பெற்ற ஆதனத்தே எழுந்தருளுவித்தனர். மெய்திகழ் நானப் பொடிகளாலே திருவடிகளை விளக்கி ஈரெண்வகை உபசாரங்களையும் அடைவே ஆற்றினர். கொண்டு வந்த புண்ணியப் புனித நீரையெல்லாம் கடாரத்திலே நிறைத்து அதில் வாஸனைப் பொருள்கள் சேர்ப்பித்து அத்தீர்த்தத்தைத் துளசிதளங்களாலே மேலும் பவித்திரமாக்கி முதலிகள் அனைவரும் ஆளுக்கொரு கலசத்தும் குடத்தும் அத்தீர்த்தத்தை நிரப்பிக் கையிலே ஏந்திக் கொண்டு எல்லோரும் ஒருமிடருக,

" குத்திரப் பரசமய நிரஸனத்தால் வந்த
கொடுவிடாய் தீருகைக்கோ
கூற்றப் பெருங்கலியை மாற்றிப்
பொகட்ட நெடும் சந்தாபம் மாறுகைக்கோ
மத்தளத் தொடு முரசு டக்கை
மல்லாரிபேரிகைகள் திமிதிமி யென்னவே
வானவர்கள் மலர் தூவ
ஆவலொடு கின்னரர்கள் தந்தனு
வென்றேத்தவே
எத்திசையு மெண்ணி லெழுபத்து
நால்வர்களுடன் எந்தை கந்தாடை
யாண்டான்
எப்பொழுது மினிதாக வேற்ற
கைங்கர்யஞ் செய் திணையடி தொழுதேத்தவே
பத்தியுடையடியவர்கள் சுற்றி நீராகவே
பண்ணும் பரந்தாமனே
பரவாதி மத்தகஜ பஞ்சானனப்
பெரிய பாபாத்ரி வஜ்ராயுதா !

என்றது முதலான திருமஞ்சநக்கவிகளையும், ஸ்ரீ புருஷஸூக்தத்தையும் த்வயத்தையும் ஆழ்வார்கள் ஸ்ரீ ஸூக்திகளையும் பெரிய கோஷமாக ஸேவித்துப் பெருமாளுக்கு வீராபிஷேகம் பண்ணினாப் போலே உடையவருக்கு அலங்காரத் திருமஞ்சனம் செய்வித்து மகிழ்ந்தனர். ஸ்ரீ சக்கரவர்த்திக் திருமகன் தனது பட்டாபிஷேகம் முடிந்ததும், எப்படி ஸ்ரீ பரதாழ்வானுக்கு யுவராஜ்யபட்டாபிஷேகம் செய்தாரோ அதே போன்று எம்பெருமானாரும் தன்னபிஷேகம் முடிந்ததும் ஸ்ரீ பட்டரை ஆதனத்தே அமர்த்தி அவருக்கு யுவராஜ பட்டாபிஷேகம் செய்வித்து உளம் மகிழ்ந்தார்.

பின்னர் உடையவர் திருமேனியை ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஆடைகொண்டொற்றி ஈரம் புலர்த்தி, திருவரைக் கழகிதாம் படி காஷாயத் திருப்பரியட்டம் தரிப்பித்து, பரந்தாமனின் ஈராறு நாமம் உரைசெய்து பன்னிரு திருமண்காப்பிட்டு, அரங்கத்தம்மான் ஆதரத்தோடு விடுத்த அவனது அரைச் சிவந்த ஆடையை உடையவருக்குத் தலையணியாகச் சாத்தி, வகுளம் துளசி, தாமரை மணி மாலைகளைத் திருமார்புக் கணியாக அணிவித்து, பிரணவாகாரமானதொரு திவ்யவிமானத்திலே எம்பெருமானரை எழுந்தருளுவித்தனர்.

(தொடரும்)

# கட்டுரைப் பட்டியல்

(1965 அக்டோபர் முதல் 1966 செப்டம்பர் வரை)

## ஆசிரியர் எழுதிய கட்டுரைகள்


| கட்டுரைத் தலைப்பு அகர வரிசை | பக்கம் |
|---|---|
| 1. 'அகர முதல எழுத்தெல்லாம்' | 435 |
| 2. 'அருமையில் எளிய அழகே போற்றி' | 581 |
| 3. 'அரும்பெறல் மரபிற் பெரும் பெயர்' | 361 |
| 4. 'ஆதி பகவன்' | 441 |
| 5. இராமலிங்க அஷ்டகம் உரை | 36 |
| 6. இராமலிங்கரும் சன்மார்க்கமும் | 391 |
| 7. இன்ப வாழ்வின் இயல் | 444 |
| 8. இன்பியல் மனிதன் | 487 |
| 9. உமாபதி சிவம் | 217 |
| 10. 'எங்கு எழில் என் ஞாயிறு?' | 237 |
| 11. 'ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு' | 13 |
| 12. ஒன்றுமொழி பொதுச்சொல் | 262 |
| 13. கச்சியப்ப முனிவர் கவி நலம் | 460 |
| 14. கம்பர் தரும் கவிதையின்பம் | 97 |
| 15. காலனைக் காலாற் கடிந்த கடவுள் | 25 |
| 16. 'குடம்பையும் புள்ளும்' | 165 |
| 17. 'குறிகளும் அடையாளமும்' | 274 |
| 18. குமர குருபர சுவாமிகள் | 459 |
| 19. குமர குருதாசரும், குமர குருபரரும் | 578 |
| **25.** சங்கற்ப நிராகரணம் VI | |
| 1. மாயாவாதம் | 117 |
| 2. மாயாவாத நிராகரணம் | 145 |
| 3. ஐக்கியவாதம், நிராகரணம் | 293 |
| 4. பாடாணவாதம்—பேதவாதம் | 338 |
| 5. சிவசம வாதம் | 400 |
| 6. சிவசமவாத நிராகரணம் | 431 |
| 26. சமயமும் விஞ்ஞானமும் | 331 |
| 28. சிவஞான சித்தியார் (அளவையியற் குற்றங்கள்) | 241 |
| 29. சிவஞான போதச் சிறப்பு | 375 |
| 30. சிவஞான போதத் தெளிபொருள் | 565 |

31. சிவஞான போதத் தெளிவுரை, III 379, 425, 478
32. சிவலிங்கத் திருவுருவம் 551
33. தலப் பெயர்களில் கவிப் புனைவுகள் 596
34. தமிழகச் சமய வரலாற்றில் ஒரு பெரும் சிறப்பு நிகழ்ச்சி 505
35. தமிழ் நாடு தெய்விகப் பேரவை 457
36. தமிழ் நாடு தெய்விகப் பேரவை—அமைப்பு விதிகள் 519
37. திரு அம்பர்ப் புராணம் 313
38. திரு இய்மகப் பதிக உரை 381
39. திரு இயமகப் பதிகத்தின் சிறப்பு 385
40. திருச்சந்த விருத்தம், II 176, 289
41. திருநாவுக்கரசர் உழவாரத் தொண்டின் சிறப்பு 1
42. திருப்புகழ் அமிழ்தம் 68
43. திருவாசகத்தில் உவமைகள் 269
44. திருவாசகத்தின் சிறப்பியல்புகள் சில 61
45. திருவெழு கூற்றிருக்கை (உரை) 55
46. திருவெழு கூற்றிருக்கை (சித்திர விளக்கம்) 31
47. திவ்வியப் பிரபந்தங்களின் சிறப்பு 309
48. தெய்வம் தெளிவும், சிதம்பர சுவாமிகளும் 573
49. 'தெய்வம் தெளிமின், தெளிந்தோர்ப் பேணுமின்' 70, 121
50. தொல்காப்பியர் 409
51. தொல்காப்பியச் சிறப்பு 417
52. 'நம்பியாரூரன் நாம் தொழும் தன்மையான்' 546
53. மடாதிபதிகள் மாநாட்டுத் தீர்மானங்கள் 265
60. மதிப்புரைகள் VII 37, 74, 264, 296, 394, 446, 601
61. மாலைமாற்றுப் பதிகம் உரை 9
62. முருகனின் ஆறுபடை வீடுகள் 49
73. விடை தெரியுமா? XI 8, 73, 108, 155, 229, 278, 319, 369, 418, 469, 586
,, விடை விளக்கம் 17, 81, 109, 156, 230, 279, 320, 370, 419, 470, 587,
74. வியப்பினும் வியப்பு 571
75. வீர சைவம் 4
76. வையந்தோறும் தெய்வம் தொழு 482

**அண்ணங்கராசாரிய சுவாமிகள்:**

1. உள்ளுறை பொருள் ஆராய்ச்சி 132, 202, 256, 503, 563, 606
2. திருப்பாவையில் ஆழ்வார்களின் திருப்பள்ளி எழுச்சி 297, 348, 401, 447

**ஔவை துரைசாமிப் பிள்ளை:**

1. தடுத்தாட்கொண்ட தன்மை 42

**இராஜகோபாலன் கே. ஆர்.**

1. பாடகத்தின் பாண்டவதூதர் 94

**இராஜமாணிக்கனார், டாக்டர்**
1. திருப்பாதிரிப் புலியூர்க் கல்வெட்டுக்கள் 136
2. திருவல்லிக்கேணிக் கல்வெட்டுக்கள் 88

**இராமச்சந்திரன் செட்டியார் (கோவை):**
1. அழகிய சிற்றம்பலம் 254
2. முட்டம் நாகேச்சுரம் 354

**சுவாமிநாத சிவாசாரியார்:**
1. சிவாலயப் பரிவார மூர்த்திகள் (சூரியன்) 307
2. திருநந்தி தேவர் 397
3. தட்சிணாமூர்த்தி 501

**ஞானசம்பந்தம், அ. ச.**
1. செயற்கருஞ் செயல் 193

**தாத்தாசாரியார், என். எஸ்.**
1. மதுரகவியும் மணி மொழியும் 342, 498

**நடராஜன், டாக்டர், பா.**
மதச் சார்பற்ற நிலை 357

**பட்சிராஜன், கே.**
வைஷ்ணவ குரு பரம்பரை 40, 129, 91, 199, 249, 287, 406, 453, 495, 560, 609

**பலராமையா, வி.**
ஞான சித்தர்களும் சித்த மருந்தும் 438, 492, 557, 604

**பாலசுப்ரமண்யம், கே. எம்.**
முப்பாலில் முத்திப்பால் 189

**திருஞானசம்பந்தம், பேராசிரியர்.**
காளிதாசன் காட்டும் சிவ பக்தி 180

**மாணிக்க வாசக சுவாமிகள், மேலையூர்.**
1. திருஞானசம்பந்தர் பிள்ளைத் தமிழ் 185
2. பரசிவமும் அருவுருவத்திருமேனிகளும் 143, 209

**மீனாட்சி சுந்தரனார், தெ. பொ.**
கோயிற் கலை 179

**முருகேச முதலியார், புரிசை.**
பாரதப் பண்போவியங்கள் 46, 76, 211

**வச்சிரவேல் முதலியார், க.**
சிவஞான போதம் 126, 183, 248, 302



திருச்சி ஸ்ரீதாயுமான சுவாமி கோயில் மகா கும்பாபிஷேக விழாவில்
**ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி** அவர்களும், நமது **அறநிலைய ஆணையர்**
அவர்களும் கலந்து கொள்ளுதல். (29—8—1966)

## பொருளடக்கம்


1. சிலப்பதிகாரம் காட்டும் தெய்வச் செந்நெறி.
2. தமிழ்ச் சமர்த்தர்.
3 இளங்கோவடிகள் அளிக்கும் இனிய செய்தி.
4. மதிப்புரைகள்.
5. திருச்சந்த விருத்தம்.
6. தொழப் படுவார் இல்லை.
7. ஞானசித்தர்களும் சித்த மருந்தும்.
8. விடை தெரியுமா?
9. விடை விளக்கம்.
10. கந்தர் கலிவெண்பா.
11. உள்ளுறை பொருள் ஆராய்ச்சி.
12. ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை.
13. கட்டுரைப் பட்டியல்.


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்


**ஆண்டுச் சந்தா ரூ 10/-** **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் **"திரு. ஆணையர் அவர்கள் அறநிலைய ஆட்சித்துறை, சென்னை 34"** என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையாளர்களின்** அலுவலகங்களிலும். மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது. —ஆசிரியர்